














# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 386 • 19 ஜனவரி 2018 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் அவ்வல் 1439 • விலை 40.00







# தேர்தலின் பின் தனியாக ஆட்சியமைப்பதற்குத் தயார்



அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து ஜனாதிபதி வெளியேறியமை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் பேசப்பட்டு வரும் சூழலில், கூட்டாட்சியில் உள்ள பிரதான கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தனித்தனியாக ஆட்சியமைப்பதைப் பற்றி தற்போது பேசி வருகின்றன.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய உயர் கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரிஅல்ல, உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் பிரதமரின் கைகளைப் பலப்படுத்தி புதியதொரு பயணத்தை ஆரம்பிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயார் எனத் தெரிவித்துள்ளார். (பக். 14)

## இறுதித் தருவாயில் மாகாண எல்லை நிர்ணய அறிக்கை

மாகாண சபை தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்துக்காக நியமிக்கப்பட்ட குழுவினர் தற்போது தமது இறுதி அறிக்கையை தயாரித்து வருவதாக மாகாண சபைத் தேர்தல்கள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் செயலாளர் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார். தமக்கு வழங்கப்பட்ட கால எல்லையான பெப்ரவரி 04 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த அறிக்கை கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (பக். 14)

## ஹக்கீம் இனவாதம் பேசியதாக முறைப்பாடு விசாரணையில்



நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான அமைச்சர் ரஊப் ஹக்கீம், கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் இன முரண்பாட்டைத் தூண்டும் வகையில் பேசினார் என முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிறுவன மயப்பட்ட குற்றங்கள் விசாரணைப் பிரிவு கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டாரவுக்கு அறிவித்துள்ளது. (பக். 02)

## வாக்காளர் அட்டை விநியோகம் ஆரம்பம்




எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று (19) முதல் ஆரம்பமாவதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹம்மத் தெரிவித்தார்.

நாளை மறுதினம் முதல் பெப்வரி 4ம் திகதி வரை வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 28ம் திகதி விசேட வாக்காளர் அட்டை விநியோக தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாவிட்டால் அருகிலுள்ள தபால் நிலையத்திற்கு சென்று தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும் என திரு. ரத்னாயக்க மேலும் தெரிவித்தார்.

## 22 முதல் தபால் மூல வாக்களிப்பு



எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்புக்கள் 22 ஆம் திகதி ஆரம்பமாகின்றன. மாவட்ட செயலக அதிகாரிகள் இந்தத் தினத்தில் வாக்களிக்க முடியும்.

அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் 25 ஆம் திகதியும், பொலிஸ் அதிகாரிகள் 26 ஆம் திகதியும் தபால் மூலம் வாக்குகளை அளிக்க முடியும். குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்கென பெப்ரவரி 01ஆம், 02 ஆம் தினங்களில் விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அளிக்கப்பட்ட தபால் மூல வாக்குகள் அனைத்தும் தேரதல் தினமாகிய பெப்ரவரி 10 ஆம் திகதி, உரிய வட்டாரங்களுக்கு அனுப்பப்பட்டு, குறித்த வாக்குச் சாவடியின் வாக்குகளுடன் சேர்த்து எண்ணப்படும்.

## மாது மது விற்பதற்கான தடை ஒரு பால்பாகுபாடு



பெண்கள் மது பானம் விற்க முடியாது என நாட்டில் 60 வருடங்களுக்கும் மேலாக இருந்துவரும் சட்டத்தை மாற்றியமைப்பதற்கு நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர கொண்டு வந்த வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி நிராகரித்ததைத் தொடர்ந்து இது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் அதிகரித்து வருகின்றன. இது ஒரு பால்பாகுபாடு என கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (பக். 14)

## பிணைமுறி ஆணைக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த விசேட நிகழ்ச்சித் திட்டம்

மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பாரிய ஊழல் மோசடிகள், அரச வளங்கள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியவற்றின் இறுதி அறிக்கையில் முன்வைக்கப்பட்ட (பக். 02)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கலீலுர் ரஹுமான்



## களம் தரும் முகநூல்

முகநூலானது அறபுவசந்தம், ஜல்லிக்கட்டு போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டது. அதனூடாக களத்தில் ஆட்கள் இறங்கினார்கள். களம் காணாத முகநூல் கூக்குரல்களில் பயனில்லை.




# இறுதி நம்பிக்கை RTI

- தில்ஷான் முஹம்மட்

முழு நாட்டுக்கும் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நுரைச்சோலை அனல் மின்நிலையம் அமைந்திருக்கும் கற்பிட்டி பிராந்தியத்தில் பல மாதங்களாக திருத்தம் என்ற பெயரில் வாரத்தில் ஒரு நாள் 8 மணித்தியாலங்கள் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு பெயரில் அவ்வப்போது மின்துண்டிப்பு இடம் பெற்று வருகிறது. இதனால் தமது தொழில் நிமித்தம் மின்சாரத்தை நம்பியிருக்கும் விவசாயிகள், சுய கைத்தொழில் செய்வோர் போன்றோருடன் வீட்டில் உள்ள பெண்கள் குழந்தைகள் வரை நாளாந்தம் அனுபவிக்கும் தொல்லைகள் சொல்லிமாளாது.

புத்தளம் மற்றும் நுரைச்சோலை பிராந்திய CEB அலுவலகங்களுக்கு தொலைபேசியில் அழைத்து இதை முறையிட்டாலும், உரிய பதில் அளிக்கும் அதிகாரிகள் எவரும் பழைய குருடி கதைவை திறடி என்ற மாதிரி எழுதிவைச்ச சில பதில்களை சொல்லி நழுவி விடுகிறார்கள். இதற்காக அரசியல் வாதிகளை நம்பி எந்த பிரயோசனமும் இருக்காது.

பூனைக்கு நாமே மணி கட்டினால் என்ன என்று தோன்றியது. உடனே தகவல் அறியும் உரிமை சட்டத்தின் அடிப்படையில் தகவல் கோரிக்கை மனுவொன்றை இலங்கை மின்சார சபையின் வடமேல் மாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருக்கிறேன்.

அதில் திருத்தம் என்ற பெயரில் உண்மையில் நடப்பது என்ன? எவ்வளவு காலத்துக்கு இந்த கூத்து நடக்க போகிறது? இதற்கு பொறுப்பானவர்கள் யார்? எவ்வளவு பணம் இதற்காக செலவிடப்படப்படுகிறது போன்ற பல கேள்விகளை எழுப்பி இதற்கான பதில்களுடன் உரிய ஆவணங்களையும் ஆதாரமாக சமர்ப்பிக்குமாறு கேட்டிருக்கிறேன்.

என்ன பதில் அளிக்கிறார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

பதில்கள் திருப்தி அளிக்காவிட்டால், பொது மக்களின் கையெழுத்துக்களுடன் Public Utility Service Commission வரை இந்த விடயத்தை எடுத்து செல்வதை தவிர இதற்கு வேறு தீர்வுகள் இல்லை போலத்தான் தெரிகிறது.

## தீர்மானிப்பது நீங்கள்

- சப்ரி முஹம்மட்



அரசியல் விழிப்புணர்வுள்ள மக்கள் கண் மூடித்தனமாக யாரையும் அங்கீகரிக்க மாட்டார்கள், அவர்கள் பிரச்சாரங்களை செவிமடுத்துவிட்டு சிந்தித்து தங்களுடைய அரசியல் தீர்மானங்களை மேற்கொள்வார்கள்.

-முஜீப் இப்ராஹீம்

அண்மையில் காத்தான்குடியில் பொதுஜன பெரமுன என்கிற மஹிந்த மஹத்தயாவின் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் பெருந்தொகை கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டு கம்பி எண்ணிவரும் நிலையில்...

அவரைக் காட்டிக்கொடுத்த இளைஞரை அதே கட்சியை சேர்ந்த இரு வேட்பாளர்கள் தேடிச்சென்று தாக்கிய சம்பவம் பதிவானதையடுத்து இப்போது பொலிஸார் அவ்விருவருக்கும் வலை வீசியுள்ளார்கள்.

அவர்கள் தலைமறைவாகியுள்ளனர்!




## 1948-ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படவில்லை

### ஏன் தெரியுமா?

-உமர் பாறூக்



அவ்வாண்டு அப்பரிசு மகாத்மா காந்திக்கு தர இருந்தது. ஆனால், அதற்கு முன் கோட்சே அவரை சுட்டுக் கொன்றான்.

இருந்தாலும் நோபல் பவுண்டேசன் காந்திஜியை கவுரவப் படுத்தும் பொருட்டு அமைதிக்கான நோபல் பரிசை அவ்வாண்டு அறிவிக்கவில்லை.

## பந்தத்தின் எதிர்பார்ப்பு

-உம்மு ஆயிஷா

தனக்கு வரும் துணைவியிடத்தில் பல தகுதிகளை எதிர்பார்க்கும் ஆணினம், தனது சகோதரிகள் விடயத்தில் அவர்களுக்கும் அவ்வாறான எதிர்பார்ப்பு இருக்குமென்பதை மறுப்பது ஏனோ?

பெண்களின் விடியலில் இதுவும் ஒரு தடைக்கல்லே

## ஹறாமா ஹலாலா ?

- கலீலுர் ரஹுமான்

ஹறாமா
ஹலாலா
மக்றூஹா என்ற
வாதங்களிலேயே
முஸ்லிம்
சமூகங்களின்
வாழ்நாள் கழிகிறது.

## திருமண பேச்சு

-சாபித் தாஹா



தனது மகளுக்கு மாப்பிள்ளை தேடும் போது 'எந்தவித குடும்பப் பொறுப்புக்களும் அற்ற ஒரு இளம் வயது' ஒருவரைத் தேடும் பெற்றோர்,

தமது மகன் மாத்திரம் 'குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றி விட்டு, தங்கைகளும் திருமணம் செய்த பின்னர்தான் திருமணத்தைப் பற்றிய பேச்சையே ஆரம்பிக்க வேண்டும் என எண்ணுவது ஏனோ??

(எல்லோருமல்ல, ஆனால் பாதி முஸ்லிம் சமூகத்தினர் இப்படித்தான்)

## வாகன தரிப்பிட வசதிகளை விஸ்தரிக்க சிந்திக்க வேண்டும்

-பிஸ்தாமி அஹம்மட்

இனி வரும் காலங்களில் பள்ளிகளை விட அதனை அண்டிய வாகன தரிப்பிட (Parking) வசதிகளை விஸ்தரிக்க சிந்திக்க வேண்டும்

(not only for mega cities but also rural areas)

(குறிப்பு: பெரும்பாலும் பள்ளி வாயல்களில் வாகனங்களை தரித்து வைக்க போதிய இடவசதியின்மை நிலவுவதால் தொழுகைக்கு செல்வோரால் பாதசாரிகளும், வீதியில் செல்லும் வாகனங்களும் அசௌகரியங்களை எதிர்கொள்வதை அன்றாடம் காண்கின்றோம்)

## ஹக்கீம்... (01 ஆம் பக்கத் தொடர்)

கடந்த ஜூன் 10 ஆம் திகதி கண்டி சில்வெஸ்டர் கல்லூரியில் நடைபெற்ற தொழிற்சந்தையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில், நாவலப்பிட்டி தேயிலைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்துக்கு சிங்கள பௌத்த அமைப்புக்களே காரணம் எனக் கூறியமை, இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் நோக்கிலேயே கூறப்பட்டது என மாலபே ஸ்ரீ விமலாராம விகாரையின் அகுலுகல்லே ஸ்ரீ ஜினானந்த ஹிமி முறைப்பாடு செய்திருந்தார்.

பொலிஸ் தலைமையகத்தின் மக்கள் சேவை நிலையத்தில் ஜூன் 14 ஆம் திகதி செய்யப்பட்ட இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிறுவனமயப்பட்ட குற்றங்கள் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி ஜனக குமார நீதிமன்றத்துக்கு பீ அறிக்கையொன்றினூடாக அறிவித்துள்ளார்.


## அல்-ஆகில் புலமைப் பரிசில் நிதியம் 2018 தெரிவுகள்

இலங்கை பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், கம்பியூட்டர் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் முதலாம் ஆண்டில் பயிலும் உயர் கல்வித் தகைமைகள் கொண்ட, வருவாய் குன்றிய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- 30% க்கு குறையாத தொகை இஸ்லாம் அல்லாத சமயங்களைப் பின்பற்றும் மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

1. விண்ணப்பப் படிவம் கோரும் கடிதம்
2. UGC ஆவணத்தின் போட்டோ பிரதி
3. சொந்த Email முகவரி என்பவற்றை இணைத்து

**Al-Agil Scholarship Fund,**

23/3, Market Road, Dharga Town -12090

எனும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பி, விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- விண்ணப்பப் படிவம் Email மூலம் மாத்திரமே அனுப்பப்படும்.
- அரச சார்பற்ற நிதியங்கள் மூலம் உதவி பெறுகின்ற அல்லது உதவி பெறத் தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் தயவு செய்து விண்ணப்பிக்க வேண்டாம்.

**படிவ விநியோக கடைசித் திகதி 15 பெப்ரவரி 2018**

**விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதி 28 பெப்ரவரி 2018**

- நேர்முகத் தேர்வுக்கெனத் தேர்ந்துகொள்ளப்படும் மாணவர்கள் மாத்திரமே தொடர்பு கொள்ளப்படுவர் என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.


## பிணைமுறி... (01 ஆம் பக்கத் தொடர்)

முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குறித்து ஆராய்வதற்கான ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிணைமுறி ஆணைக் குழு அறிக்கையில் முன்வைக்கப்பட்ட சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பல விடயங்கள் குறித்து கவனம்செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பில் வகைசொல்ல வேண்டியவர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்குத் தொடுத்தல், அரசாங்கத்திற்கும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஏற்பட்டுள்ள நட்டத்தை அடைக்கும் பொருட்டு சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சிவில் வழக்குத் தொடுத்து நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் மேலும் பல்வேறு அரச நிறுவனங்களில் சேவை செய்யும் இந்த குற்றத்துடன் தொடர்பான சட்டரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆட்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இடம்பெற்றுள்ள குற்றம் தொடர்பில் மேலதிக விசாரணை செய்யும்போது சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு ஏற்ப குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தில் தனியான பிரிவொன்றை ஆரம்பிக்கவும் இலங்கை மத்திய வங்கி நிதிப் புலனாய்வுப் பிரிவினதும் செலாவணி கட்டுப்பாட்டாளரினதும் உதவியை பெற்றுக்கொள்ளவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை மத்திய வங்கியின் ஊடாக சட்டக் கணக்காய்வொன்றை மேற்கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் மற்றும் நட்டஈட்டை அறவிடுவதற்கு சிவில் வழக்குத் தொடர பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்ற போதும் சிவில் வழக்குக்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால் இத்தகைய வழக்குகளுக்காக சிவில் வழக்கு ஏற்பாடுகள் செயன்முறையில் திருத்தங்களை கொண்டு வருவது தொடர்பாக சட்ட மா அதிபர் திணைக்களம் கவனம் செலுத்தும்.

இதன் போது தற்போது பர்பசுவல் ட்ரஷரீஸ் நிறுவனம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் மற்றும் வேறு ஆட்களினால் பிணைமுறி கொடுக்கல் வாங்கல் ஊடாக சட்ட ரீதியற்ற வகையில், திரட்டப்பட்ட சொத்துக்களை தடை செய்வதற்கு சட்ட மா அதிபர் கவனம் செலுத்திவருகிறார்.

இத்தகைய குற்றங்கள் இனியும் இடம்பெறுவதை தவிர்ப்பதற்கு மத்திய வங்கியில் அமைந்துள்ள அரச கடன் திணைக்களத்தையும் நிதிச் சபையையும் உரிய முறையில் மறுசீரமைக்கவும் வகைகூறலை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

பிணைமுறி விவகாரம் தொடர்பில் இருந்துவரும் கூடிய மக்கள் கவனத்தைக் கருத்திற்கொண்டு அவ்வறிக்கையை உடனடியாக இணையத்தளத்தில் பதிவேற்றுமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார். அந்த அறிக்கையை www.presidentsoffice.gov.lk என்ற இணையத் தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

## தேசிய அல்குர்ஆன் கிறாஅத், மனனப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய ரீதியில் நடாத்தப்படும் தேசியஅல் குர்ஆன் கிறாஅத், மனனப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

இதற்கான போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் கொழும்பில் நடத்தப்படவுள்ளன. ஏழு பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டியில், முதல் 10 இடங்களைப் பெறுபவர்களுக்கு பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டி விபரங்கள், விதிமுறைகள் உட்பட மேலதிக விபரங்களை நவமணி மற்றும் தினகரன் (08.01.2018)பத்திரிகைகளிலும் www.muslimaffairs.gov.lk என்ற திணைக்கள இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏ4 தாளில் விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **தேசிய அல்குர்ஆன் ஓதல் கிறாஅத்/ மனனப் போட்டிகள் 2018** எனக் குறிப்பிடப்பட்டு, பணிப்பாளர், முஸ்லிம் சமயபண்பாட்டலுவல்கள் திணைக்களம், இல - 180, ரீ.பி. ஜயா மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு 2018.01.28 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பெக்ஸ், ஈமெயில் மற்றும் நேரடியாக சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானையை மரத்தில் கட்டுதல் எனும் மாயை


• நேசன்

பரீட்சையில் கட்டுரை எழுதுவதற்கு யானையைப் பற்றி மனப்பாடம் செய்துவிட்டுச் சென்ற மாணவன், கட்டுரைத் தலைப்பு யானைக்குப் பதிலாக மரம் என்று வந்திருந்ததைக் கண்டு, பல சுற்றுக்கள் யோசித்துக் கொண்டிருக்காது உடனே தனது சாணக்கியத்தைப் பயன்படுத்தினானாம். யானையைக் கொண்டு வந்து மரத்திலே கட்டிவிட்டு யானையைப் பற்றி கட்டுரை எழுதி முடித்தானாம். புள்ளியிட்ட ஆசிரியர் நாரே தக்பீர் சொல்லி அவனுக்கு பாஸ் மார்க்ஸ் வழங்கிவிட்டாராம். பாலர் வகுப்பு மாணவனின் இந்தச் சாணக்கியம் தான் முஸ்லிம் அரசியலில் இன்று வெற்றி பெறும் வியூகமாக வர்ணிக்கப்படுகிறது.

யானை - மரம் கதைதான் தற்போது வாக்காளப் பிள்ளைகளைத் தூங்க வைப்பதற்காக சுவைபட எடுத்துச் சொல்லப்படுகிறது. மலையகத்தின் ஒரு மித்த முற்போக்குக் கூட்டணி வேட்பாளருக்கு வாக்குத் திரட்டும் கூட்டத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், ஏணியில் ஏறி யானையின் முதுகில் அமர்ந்து அந்த யானையை ஆட்டிப் படைக்கும் வல்லமை நமக்கு இருக்கிறது என்று கூறுகிறார். இதே பாணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், யானை மீதேறி யானையை வழிநடத்தும் யானைப்பாகனாகும் வல்லமை தமக்கு இருக்கிறது என்று பல இடங்களிலும் மார்தட்டி வருகிறார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரையில் முறிந்துவிழும் கிளைகளைக் கூட காப்பாற்றிக் கொள்ள முடியாத நிலையிலேயே அது இருக்கிறது. ஆல மரமாகச் சித்திரிக்கப்பட்ட மரம், தற்பொழுது முட்டுக் கொடுக்க வேண்டிய வாழை மரமாக மாறி நிற்கிறது. தனிமரமாக இருந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு என இப்போது வாழைத் தோப்பாக மாறியிருக்கிறது.

இனி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் தனித்துவக் கட்சியல்ல. முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் இருக்கின்ற பல கட்சிகளுள் ஒன்று. இந்த வகையில் முஸ்லிம்களின் சார்பில் எந்த முடிவையும் எடுக்கின்ற அதிகாரமோ, முஸ்லிம் சமூகத்தை வைத்து யாருடனும் பேரம் பேசும் வல்லமையோ அவர்களுக்கில்லை. இந்த நிலைக்கு முஸ்லிம் காங்கிரஸை மலினப்படுத்தியது ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸே அன்றி வெளியில் யாருமல்ல.




அரசியல் நிலைப்பாடுகளைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ள முஸ்லிம் கட்சி என்ற ஒன்றுதான் முஸ்லிம் காங்கிரஸை இன்னும் உச்சாணிக் கொப்பில் வைத்திருக்கிறது. தற்போதைய பாராளுமன்றத்தின் 21 முஸ்லிம் உறுப்பினர்களில் 07 பேர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்ந்தவர்கள். 05 பேர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சார்ந்தவர்கள். இந்தச் சமன்பாட்டுக் கணக்கில் தான் முஸ்லிம் காங்கிரஸின் மரம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. முறிந்து விழுகின்ற கிளைகளினால் இழக்கப்படுகின்ற பலமும், முறிந்த கிளைகள் திரண்டு மிடுக்கான கொடியாக வளர்வதற்கான எத்தனங்களும் இந்த விகிதாசாரத்தை விரைவில் மாற்றும்படியாகவே களநிலவரங்கள் தெரிகின்றன.

இந்த வலுச் சமன்பாட்டை அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு மிஞ்ச முடியாமல் போனால், தனது இரு புதல்வர்களையும் களமிறக்கியுள்ள அதாவுல்லா அணியும், இளைஞர்களின் மூச்சாக வெளிப்பட்டிருக்கும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியும் நிச்சயமாக மு.கா.வின் பலத்தை குறைவடையச் செய்யும். போதாக்குறைக்கு தேர்தலை நோக்கா கக் கொண்ட பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுடன் அமைச்சர் பைஸர் முஸ்தபாவை சுதந்திரக் கட்சி மைத்திரி அணி களமிறக்கியிருக்கிறது. இந்த வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இந்த உள்ளூராட்சித் தேர்தல் ஒரு பலப் பரீட்சையாகவே அமைகிறது.

இந்த பலப் பரீட்சையில் வெல்லத்தக்கதாக முஸ்லிம் காங்கிரஸ் தனது ஹோம் வேர்க்கை திறம்படச் செய்திருக்கிறதா என்ற கேள்வி முறிந்த பனை மரம் போல தொக்கு நிற்கிறது. கடந்த பொதுத் தேர்தலின் போது அம்பாறை மாவட்ட மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் அட்டாளைச்சேனைக்கான தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, சாய்ந்தமருதுக்கான பிரதேச சபை என்பன பாராளுமன்றத்திலுள்ள முஸ்லிம் எம்.பி.க்கள் போல வெறும் வெற்று வேட்டாகவே உள்ளன. இந்த வாக்குறுதிகளில் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இந்தப் பிரதேச மக்களும் இந்த முறை மரத்தின் எட்டாக்கனிக்கு கொட்டாவி விடப்போவதுமில்லை. இப்படிப் பல்வேறு உள் வெளி நெருக்கடிகளுக்கும் மத்தியில் தொங்குவதற்குக் கொப்பில்லாத சூழலிலேயே மரம் யானையிடம் சரணடைகிறதே அன்றி, தேர்தல் மேடைகளில் முழங்குவது போல யானை ஒன்றும் மரத்தடியில் இளைப்பாறுவதற்கோ, பாதுகாப்புப் பெறுவதற்கோ அல்லது வழிநடத்துவதற்கு யானைப்பாகனொன்றைத் தேடியோ வரவில்லை. வஹ்ஹாபிகளை எதிர்ப்பதற்கு பாரம்பரிய முஸ்லிம்களுக்கு பொதுபலசேனா தேவைப்பட்டது போல, தனக்கு அச்சுறுத்தலாக வளர்ந்து வரும் சக்திகளை எதிர்ப்பதற்கு - மு.கா.வுக்கு ஐ.தே.க. தேவைப்பட்டிருக்கிறது. அவ்வளவு தானேயன்றி இதில் முஸ்லிம் சமூகத்தின் நலன் என்று எதுவுமே இல்லை.

முஸ்லிம்களின் நலனுக்காகக் கூட்டுச் சேர்ந்ததாக மு.கா. குறிப்பிடும் அளவுக்கு ஐ.தே.க. முஸ்லிம் சமூகத்துக்கென எதுவும் செய்துவிடவில்லை. பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க.வுடன் சேர்ந்த கூட்டை வைத்து மாணிக்கமடு சிலை வைப்பிலும், நீலாக்கேணி காணி பறிப்பிலும் மு.கா.வுக்கு எதுவுமே செய்ய முடியவில்லை. இன்று வரை திருகோணமலை மாவட்டத்தில் வன சீவராசிகளுக்கெனவும், தொல்பொருள் ஆராய்ச்சிகளுக்கெனவும் பிடுங்கி எடுக்கப்படும் முஸ்லிம்களின் இருப்பினை பாதுகாத்துத் தருவதற்கு மு.கா.வின் ஐ.தே.க. ஆதரவினால் எதுவும் செய்ய முடியவில்லை.

இத்தனையும் ஏன், தனது கட்சியைச் சேர்ந்த தயா கமகேயின் இனவாத ஆட்டங்களையாவது ஐ.தே.க.விடம் மன்றாடி நிறுத்துவதற்குக் கூட பலமில்லாத நிலையில்தான் மு.கா.வின் ஐ.தே.க. கூட்டு இருக்கிறது. கிழக்கு மாகாணத்தை வடக்குடன் இணைப்பதற்கு ஐ.தே.க.வுக்கு சார்பு நிலைப்பாடு எடுப்பதைத் தவிர கிழக்கு மாகாண மக்களின் அபிலாஷைகளை ஒரு பொருட்டாகவே ஐ.தே.க.விவை மிஞ்சி மு.கா.வினால் கருத முடிய வில்லை. இந்த இலட்சணத்தில் யானை மீதேறி யானைப் பாகனாகப் போவதாக மரத்தின் மீதேறிக் காணும் கனவை நம்பிக் களத்தில் குதிக்கும் நிலைமையில் கிழக்கு மாகாணம் தற்போது இல்லை.

கிழக்கில் பல்வேறு காங்கிரஸ்கள் முளைத்திருக்கும் நிலையில் மக்கள் முஸ்லிம் காங்கிரஸை மறந்து போனாலும் தலைவர் அஷ்ரப் வளர்த்த மரத்தையும் மரத்தை ஒட்டி அவர் வடித்த இலட்சிய வரிகளையும் என்றுமே மறக்கப்போவதில்லை. அந்தளவுக்கு மரச்சின்னம் அவர்களுடன் ஒன்றித்துப் போயிருக்கிறது.

ஐ.தே.க.வுடனான தேனிலவுக்காக இப்போது இந்த மரச்சின்னம் கிழக்கு மாகாணத்திலேயே அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இலச்சினையல்ல, இலட்சியம் தான் முக்கியம் என்று வேறு பிரச்சாரமும் செய்யப்படுகிறது. (பக்.14)

# வெட்கக் கேடான அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டிய நேரம்

• லத்தீப் பாரூக்

இலங்கையில் அழிவில் மூழ்கிக் கொண்டிருக்கும் முஸ்லிம் சமூகத்தின் அதிலும் குறிப்பாக கிழக்கின் முஸ்லிம் சமூகத்தின் அடுத்த கட்ட அரசியல் வங்குரோத்து நிலையை புலப்படுத்துவதாகவே எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அமையவுள்ளது. பேரினவாத அரசியல் கட்சிகளின் இனவாத அரசியலின் துரதிஷ்டவசமான வெளிப்பாடான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இஸ்லாம் மற்றும் ஒற்றுமை ஆகிய சுலோகங்களோடு அரசியலுக்கு வந்தாலும் கூட இன்று அது கேவலமான அரசியலின் தெருமுனைக்கு வந்துவிட்டது.

மக்களை ஏமாற்றுவதற்காக முஸ்லிம் காங்கிரஸ் மிகக் கொடூரமான முறையில் சமயச் சுலோகங்களைப் பாவித்தது. அதன் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரபின் மறைவோடு அங்கே ஒற்றுமையும் மாயமாகிவிட்டது. முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டு சுமார் நான்கு தசாப்தங்களின் பின் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் நிலை மிகவும் துரதிஷ்டவசமாகிவிட்டது. அந்தக் கட்சியின் பிரதான பிரிவு இப்போது தனது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காகவும், சுயநலன்களுக்காகவும் பதவிகளுக்காகவும் பகட்டுகளுக்காகவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சங்கமம் ஆகிவிட்டது.

பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களால் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலின் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற குழுக்கள் இப்போது தமது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக எந்தக் கட்சியோடு அணி சேருவது என்பதில் மும்முரமாக உள்ளன. ஆனால் இந்தக் கூட்டணிகள் எதுவுமே முஸ்லிம் சமூகத்தின் நலன் சார்ந்தவை அல்ல என்பதை மட்டும் இங்கு தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில் கிழக்கு மாகாண அரசியல் நிலை சிரேஷ்ட அரசியல்வாதிகளின் கட்சித் தாவலால் குழப்ப நிலைக்கு வந்துள்ளது. எல்லா விதமான கொள்கைகளையும் கைவிட்டு விட்டு அவர்கள் தற்போது பதவி மோகத்தால் ஏதாவது ஒரு பதவி எங்காவது கிடைக்காதா என்று குழம்பிப் போய் உள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்ப காலம் முதல் அதன் உறுப்பினராக இருந்து வந்த அதன் செயலாளர் ஹஸன் அலி கடந்த வாரம் சில உண்மைகளைக் கக்கி உள்ளார். முஸ்லிம் சமூகத்தின் கௌரவம் அதன் உரிமைகள் என்பனவற்றை கைவிட்டு விட்டு பிரதான கட்சிகளின் முகவர்களாகப் பணியாற்றும் கலாசாரத்தை முஸ்லிம் காங்கிரஸும் அதிலிருந்து பிரிந்து சென்ற குழுக்களும் கைவிட வேண்டும் என அவர் கேட்டுள்ளார். அரசாங்கத்தில் இருக்கும் போது சமூகத்தின் கொழுந்துவிட்டு எரியும் பிரச்சினைகளில் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. பட்டம் பதவிகளைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே இதற்கு காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது குற்றச்சாட்டுக்களை நியாயப் படுத்தும் ஹஸன் அலி சுதந்திரம் முதல் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அனுபவித்து வரும் பிரச்சினைகளை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மை சமூகத்தின் பிரதான குற்றச்சாட்டு 1946 இல் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் 9.8 வீதமாக இருந்த பெரும்பான்மை சமூகத்தின் சனத் தொகை காலனித்துவ குடியேற்றங்கள் காரணமாக இப்போது 25 வீதமாக அதிகரித்துள்ளது. மாவட்டங்களின் எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட்டமையும் இதற்கு பங்களிப்புச் செய்துள்ள பிரதான காரணங்களில் ஒன்றாகும். அதேபோல் 1987 ஜூலையில் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை



கைச்சாத்திடப்பட்ட போது வடக்கு கிழக்கில் 32.5 வீதமாக இருந்த முஸ்லிம்களின் சனத் தொகை தற்போது 17 வீதமாகக் குறைந்துள்ளது.

1948 இல் நாடு சுதந்திரம் அடைந்த போது கிழக்கில் திருகோணமலை முதல் மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் வரை மட்டக்களப்பு மாவட்டம் என்ற பெயரின் கீழேயே இருந்தது. கிழக்கு முழுவதும் சிங்கள் மக்களின் சனத் தொகை 4000 மாகவே காணப்பட்டது. அப்போது அம்பாறை சம்மாந்துறையின் கீழ் இருந்தது. ஆனால் 1952 இல் கல்ஓயா திட்டம் தொடங்கப்பட்டதோடு இரவோடு இரவாக சிங்கள மக்களின் எண்ணிக்கை இருந்ததை விட 500 வீதம் அதிகமாகியது.

1961 இல் அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. அண்டிய பகுதிகளான தெஹியத்த கண்டிய, பதியதலாவ, பின்டானபட்டு போன்ற இடங்கள் இதனோடு இணைத்துக் கொள்ளப்பட்டன. கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை, மூதூர் உட்பட ஏனைய இடங்களையும் உள்ளடக்கிய முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டம் உருவாகுவதை தடுப்பதற்கான ஒரு முயற்சியாகவே அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது என்பதே முஸ்லிம்களின் கருத்தாகும். புதிதாக அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டதோடு கல்ஓயா திட்டமும் தொடங்கப்பட்டு சிங்கள மக்களின் சனத்தொகை 500 வீதத்துக்கும் அதிகமான தொகையால் அதிகரிக்கப்பட்டது.

அன்று முதல் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் பறிக்கப்படுகின்றமை ஒரு பாரிய பிரச்சினையாக உருவாகத் தொடங்கியது. இந்த காணி பறிப்பு நடவடிக்கையால் முஸ்லிம்கள் தமக்கு சொந்தமான சுமார் 60,000 ஏக்கர் காணிகளை இழந்துள்ளதாக சில மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. மாறிமாறி பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என இரு தரப்புமே தமக்கு கீழ் இருந்த அரச இயந்திரத்தைப் பயன்படுத்தி இந்தக் காணி அபகரிப்புக்குத் தாராளமாக ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளன. தொல்பொருள் அகழ்வு, ஆராய்ச்சி, புராதனச் சின்னங்கள் கண்டுபிடிப்பு என பல்வேறு வகையான போர்வைகளின் கீழ் இன்றும் இந்தக் காணி அபகரிப்பு தொடருவது கவலைக்குரிய ஒன்றாகும்.

1987 இல் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதேச சபைகள் என்பனவற்றின் எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்பட்ட போது 7085 பெரும்பான்மை மக்களை மட்டுமே கொண்டிருந்த லஹுகல உள்ளூராட்சி மன்றத்துக்கு 368.2 சதுர மைல் பரப்பளவு ஒதுக்கப்பட்டது. சிறுபான்மையினர் 19,831 பேரை கொண்ட பகுதிக்கு 103.9 சதுர மைல் பரப்பளவு மட்டுமே ஒதுக்கப்பட்டது. வெவகம் பற்று உள்ளூராட்சி அலகு 6585 பெரும்பான்மை மக்களைக் கொண்டிருந்தது. அவர்களுக்கு வழங்கப்பட்ட காணி 260 சதுர மைல். ஆனால் சம்மாந்துறை பற்றில் 40,704 சிறுபான்மை மக்கள் வசித்தனர். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட காணி வெறும் 99 சதுர மைல்கள் மட்டுமே.

மாவட்ட மட்டங்களிலும் கூட சிறுபான்மை மக்கள் மீது பாரபட்சம் காட்டப்பட்டு புறந்தள்ளப்பட்டார்கள். அம்பாறை மாவட்டத்தில் 36 வீதமாக இருந்த சிங்கள மக்களுக்கு 66 வீதமான காணி வழங்கப்பட்டது. திருகோணமலையில் 34 வீதமாக இருந்த சிங்கள மக்களுக்கு 70 வீதமான காணி ஒதுக்கப்பட்டது. இவை மாறிமாறி பதவிக்கு வந்த அரசுகளின் எழுத்தில் வடிக்கப்படாத நிகழ்ச்சி நிரலையே புலப்படுத்துகின்றன. இன்றும் கூட அம்பாறை மாவட்டத்தின் சனத்தொகையில் 74 வீதமான மக்கள் தமிழ் பேசும் மக்களாகவே இருக்கின்றனர். ஆனால் இதுவரை இந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபராக ஒரு தமிழரோ அல்லது முஸ்லிமோ நியமிக்கப்படவில்லை. இதுதான் நாம் குறிப்பிடும் பதவியில் இருந்த, இருக்கின்ற எல்லா அரசுகளினதும் எழுத்தில் வடிக்கப்படாத கொள்கைகள்.

இதற்கு மேலதிகமாக 1987 இல் சரியான எல்லை மீள் நிர்ணய ஆணைக்குழு இன்றியும் பிரதேச முஸ்லிம்களிடம் ஆலோசனை நடத்தாமலும் உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகள் மீள் வடிவமைக்கப்பட்டன. இதன் மூலம் லஹுகல மற்றும் பானம பகுதிகளில் வாழும் சிங்கள மக்களுக்கு மேலதிகமாக காணிகள் வழங்கப்பட்டன. ஆனால் அதிகளவான (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# ஒன்றுபட்டு வெல்ல வேண்டிய தருணம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சூடுபிடிக்கத் துவங்கியுள்ளன. கமே சந்த என்று சொல்லப்படும் ஊரணித் தேர்தல் இம்முறை வாக்காளர்களை தத்தமது பிரதேசத்தைப் பற்றிச் சிந்திக்க வைத்திருக்கின்றன. முஸ்லிம் அரசியல் கட்சிகள் இழந்து போன தமது செல்வாக்குகளைச் சரிப் படுத்திக் கொள்வதற்காக இந்தத் தேர்தலைப் பயன்படுத்த முயற்சித்த போதிலும், மக்கள் தத்தமது பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பில் கண்ணும் கருத்துமாய் உள்ளனர்.

ஏதோ ஜனாதிபதித் தேர்தலோ, பொதுத் தேர்தலோ வந்து விட்டது போல முஸ்லிம் கட்சிகள் உரிமைகளையும் ஆட்சியமைப்பையும் பேசி மக்களை ஏமாற்றி வருகின்றன. ஊருக்குள்ளால் வேட்பாளர்களைத் தூண்டி விட்டு தேர்தல் வன்முறைகளுக்கும் தூபமிட்டு வருகின்றன. சில இடங்களில் முஸ்லிம் சமூகம் வெட்கப்படும் அளவுக்கு முஸ்லிம்களுக்குள்ளால் சண்டைகளை மூட்டி வைப்பதில் முஸ்லிம் கட்சிகள் பங்காற்றி வருகின்றன.

நாட்டில் கூட்டாட்சி நடத்தும் பிரதான கட்சிகளுக்கு வேண்டுமானால் இந்தத் தேர்தல் தமது பலத்தை உரசிப் பார்ப்பதற்கான உரைகல்லாக இருக்கலாம். ஆனால் முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை இது அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டு இழக்கப்பட்ட தமது அரசியல் இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பமாகும். முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்கின்ற வட்டாரப் பிரிப்பு, கலப்புத் தேர்தல் முறைகள் சட்டமாகும் போதெல்லாம் அமைதியாகவிருந்து அங்கீகாரம் அளித்தவர்கள் இன்று மக்களின் முன்னால் வந்து உரிமைகளைப் பற்றிப் பேசுவதும் நீலிக் கண்ணீர் வடிப்பதும் முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காக வல்ல என்பதை மக்கள் நன்கு புரிந்து வைத்திருக்கிறார்கள்.

இதனால் கட்சிக்காகச் சண்டைபிடிப்பதை விட்டு விட்டு அரசியல்வாதிகளால் தாரைவார்க்கப்பட்ட உரிமைகளை வென்றெடுப்பதற்கு மக்கள் ஒன்றிணைய வேண்டும். வாக்களித்து பதவியில் அமர்த்தப்பட்ட பின்னர் தமது இஷ்டம் போல சமூகத்தைப் பகடைக் காயாக்கி வியாபாரம் செய்ய முடியும் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற அரசியல்வாதிகளுக்கு ஒன்றுபட்டுப் பாடம் புகட்டும் தருணமாக இதனை மக்கள் பயன்படுத்த வேண்டும்.

இந்த வகையில் அரசியல் கட்சிகளின் வாக்குறுதிகளுக்கும் வெற்று முழக்கங்களுக்கும் ஏமாந்து போகாமல் ஒவ்வொரு ஊரும் ஒன்றிணைந்து தமக்கான பிரதிநிதியை வெல்வதற்கு முயற்சிப்பது தான் புத்திசாலித் தனமான அரசியலாக அமையப் போகிறது.

நாட்டின் பல இடங்களிலும் மக்கள் இவ்வாறு சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்பதை கள நிலவரங்கள் எடுத்துச் சொல்கின்றன. கூட்டாட்சியின் இரண்டு கட்சிகளும் முன்னைய அரசாங்கம் செய்த அதே புண்ணியத்தைத்தான் முஸ்லிம்களுக்குச் செய்துவருகின்றன. முஸ்லிம் அரசியல் கட்சிகளும் முன்னைய அரசாங்கத்தில் இருந்தது போலவே வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றன.

மாற்றத்தை மக்கள் தான் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அதற்கான தருணமும் இப்போது வாய்த்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கட்சிகளுக்கப்பால் சமூகத்துக்காக உழைக்கின்றவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பது தான் உசிதமானது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. 96, கிருல வீதி, கொழும்பு 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : pcc@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# யார் திருடர்? யார் குற்றவாளி?

• பிலிப் ஷாந்த

மத்திய வங்கி பிணை முறிகள் கொள்வனவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் தொடர்பில் விசாரணை செய்யவென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது. அதனைத் தொடர்ந்து சில தினங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வறிக்கை குறித்து நாட்டு மக்களுக்கு விஷேட அறிவித்தலொன்றை விடுத்தார். இவ்வறிவித்தல் அரசியல் உலகில் பாரிய சர்ச்சைகளை தோற்றுவிக்கக் காரணமாய் அமைந்துள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து விவாதம் செய்ய பாராளுமன்றை கூட்டிய போதும் அதுவும் சர்ச்சையில் முடிந்துள்ளது. கடந்த பாராளுமன்ற அவையின் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஒரு தடவை மஹிந்த ராஜபக்ஷ மீது திருட்டுப் பழியை சுமத்தி விட்டு தப்பிக்க முனைந்துள்ளார். மஹிந்த அணியைச் சேர்ந்தவர்களும் ரணில் விக்ரமசிங்கவை திருடனாக்கி, கிடைத்த சந்தர்ப்பத்தில் பிரயோசமடைய முயற்சித்தார்கள்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கன்னி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி பிட்பொகட் கதையொன்றையும் உதாரணம் காட்டி வித்தியாசமான பாணியில் ''அதோ திருடன்'' எனக் கூறியுள்ளார். மத்திய வங்கி பிணை முறிகள் விசாரணை அறிக்கையால் கொதிப்படைந்துள்ள அரசியலில் தனது ரொட்டியையும் சுட்டுக்கொள்ளவே அவர் முயற்சி செய்திருக்கிறார். குறுகிய காலப் பகுதியில் இடம்பெற்ற இவ்வாறான நிகழ்வுகளை வைத்துப் பார்க்கும் போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதான கட்சிகளும் ஒரு பக்கத்தில் ஒதுங்கிக் கொண்டு தங்களைச் சுத்தவாளிகளாகக் காண்பிக்கும் அரசியல் விளையாட்டை ஆடி வருகின்றதைக் காண முடிகின்றது.

ஊழல் முறைகேடுகள் தொடர்பில் கூட்டரசாங்கத்திற்கு எதிராக சுமத்தப்பட்டு வருகின்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஒரு தரப்பு இன்னொரு தரப்பை சாடை காட்டி விட்டு, தங்களது பொறுப்பிலிருந்து விடுபட எவருக்கும் உரிமை கிடையாது. அரசாங்கத்திற்கு எதிராக குற்றம் சுமத்தப்படுமாக இருந்தால் வெஸ்மினிஸ்டர் முறைப்படி அவ்விடயம் குறித்து அமைச்சரவை கூட்டாக பொறுப்புச் சொல்ல வேண்டும். ஆனால் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் சிறு பிள்ளைத்தனமான முறையில் ஒரு சாரார் இன்னொரு சாராரை குற்றம் சுமத்திவிட்டு கூட்டுப் பொறுப்பிலிருந்து விடுபட முயற்சிக்கின்றார்கள். இது ஆட்சித் தத்துவத்தின் அடிப்படைகளுக்கு கூட முரணான விடயம் என்பதை மறந்துள்ளார்கள்.

இதேவேளை நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரொருவரான சுசில் பிரேமஜயந்த தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக மாத்திரமே போராடுவதென பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார். என்றாலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஐ.தே.க.வுக்கு எதிராகப் போராடுவதாக இருந்தால் எந்த அடிப்படையில் இன்னும் கூட்டாக ஆட்சியிலுள்ளார்கள் என்பது சிக்கலான விடயமாக உள்ளது. குறைந்தபட்சம் கூட்டாட்சியின் அடிப்படைத் தத்துவங்களுக்கமைய பணியாற்ற முடியாத அரசியல்வாதிகளிடமிருந்து நல்லாட்சியை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாமல் போகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் மற்றும் பதுளை மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி போன்ற புதுமுகங்கள் ஆவேசமான முறையில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதை காண முடிகிறது. ஐ.தே.க. தனி அரசாங்கமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றனர். எனவே கூட்டரசாங்கத்தின் அர்த்தத்தையேனும் புரிந்துகொள்வதற்கு இவர்கள் பொறுமையற்றவர்களாக ஆவேசப்படுவதை காண முடிகின்றது.

பிரதான இரண்டு கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெரும்பாலானவர்கள் தங்களுக்கானதொரு தனி அரசாங்கம் அமைய வேண்டும் என்ற கொள்கையில் நின்று செயலாற்றி வருகின்றார்கள். அரசியல் சாக்கடையில் முடியுமான அளவு சுதந்திரமாக நீச்சல் அடிக்கும் இயலுமைகள் தனி அரசாங்கம் அமையும் போதே கிடைக்கும்.

ஆரம்பத்தில் இனிமையாக இருந்த நல்லாட்சி போகப் போக மக்களுக்கு ஓரளவு புளிக்க ஆரம்பித்திருக்கிறது. காரணம், இரண்டு பிரதான கட்சிகளும் தங்களது அரசியல் சுயநலன்களுக்காக நல்லாட்சின் கொள்கைகளை பச்சை பச்சையாக சிதைத்து வருகின்றன. இவ்விடயத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் விதிவிலக்கல்ல.

கடந்த தினம் பிரதமர் பாராளுமன்றில் நடந்துகொண்ட விதமும் ஜனாதிபதி அநுராதபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நடந்து கொண்ட விதமும் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். தங்களது கட்சிதான் தூய்மையானது எனக் கூறி கையைத் துடைத்துக்கொள்ள ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் முடியாது. தங்களது அரசின் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை ஒருவர் மீது ஒருவர் சுமத்தி விட்டு பொறுப்புக்களிலிருந்து நழுவ முடியாது. ஊழல், மோசடியை அவர்கள் தேசியப் பிரச்சினையாகப் பார்த்து அவற்றைத் தடுப்பதற்கு பரந்ததொரு திட்டத்தை வகுக்க வேண்டியுள்ளது. இது குறித்து அவர்களுக்கு உண்மையான தேவை இருந்தால் திட்டமிட்ட பொறிமுறையொன்றை உருவாக்கி அக்குற்றச்சாட்டுக்களுக்கு முகம்கொடுக்க முடியும்.

2015 ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது சுமத்தப்பட்ட பாரதூரமான குற்றச்சாட்டுக்களுள் ஊழல், மோசடிக் குற்றங்களே பிரதானமாக காணப்பட்டது. அக்குற்றச் சாட்டுக்கள் பாரதூரமான விடயமாகத் தெரிந்ததால் நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த மக்களின் வாக்குகள் பொதுவேட்பாளர் மைத்திரி பால சிறிசேனவுக்கு கிடைக்க காரணமாய் அமைந்தது. ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து மூன்றாண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மாத்திரம் குற்றச்சாட்டுக்களை சுமத்திவிட்டு நாடகத்தை முடிவுக்கு கொண்டுவர பிரதமர் முயற்சித்திருப்பது துரதிஷ்டமானது.

கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டு மூன்றாண்டுகள் நிறைவடைந்த பின்னரும் கடந்த ராஜபக்ஷ ஆட்சியில் குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வர முடியாமல் இருப்பது வெட்கித்தலை குனிய வேண்டிய விடயமாக உள்ளது.

கடந்த மஹிந்த ஆட்சியில் ஊழல் குற்றங்கள் புரிந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தேவை இவ்வரசாங்கத்திற்கு உண்மையில் இருக்கும் என்றிருந்தால் அக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு பாரம்பரிய விசாரணை முறைகளை பின்பற்றியிருக்க மாட்டார்கள். கடந்த ஆட்சியின் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு தனியானதொரு விசாரணைப் பிரிவை உருவாக்கி, பிரத்தியேக நீதிமன்றமொன்றினால் அவற்றை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் இயலுமைகள் காணப்பட்டது.

எனினும் இலங்கையில் நீதி நிலைநாட்டப்படும் பொறிமுறை மந்தகதி நிலை என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டும் ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தின் திருடர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தற்போதைய நீதிக் கட்டமைப்பிடம் ஒப்படைக்கப் பட்டது. நீதி நிலைநாட்டப்படும் ஆமை வேகத்திற்குள் ''திருடன், திருடன், யார் திருடன்?'' போன்ற கேள்விகள் இன்று நகைப்புக்கிடமான வார்த்தைகளாக அனைத்துத் தரப்பாலும் ஜபிக்கப்பட்டு வரும் நிலையை காண முடிகிறது.

திருடர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை பெற்றுக் கொடுக்கும் கடப்பாடும், தேவையும் அரசாங்கத்திற்கோ அல்லது மஹிந்த அணியினருக்கோ இல்லை. ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்றுக்கொள்வதே சகலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. உண்மையில் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் தேவை இருந்திருப்பின் அவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு மூன்று வருடங்கள் தாராளமானது.

இந்நிலையில் அரசாங்கத்தில் நெருக்கடிகள் தோன்றலாம் என்கின்ற சந்தேகங்கள் மக்களிடம் வலுப்பது நியாயமானது. அரசாங்கத்தின் உள்ளக சக்திகள் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கும் போது வெளிச்சக்திகள் பலம்பெறுவதுடன் அது அரசாங்கத்தின் பயணத்திற்கும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாய் அமைகின்றன.

2015 ஜனவரி 08 ஆம் திகதி பலம் பெற்றிருந்த மக்கள் அபிலாஷைகளையும் விட ஒரு மிகப்பெரும் சக்தி உருவானாலும் ஆச்சரியமில்லை. ஒருவரை ஒருவர் குற்றஞ் சுமத்தி புதியதோர் அரசியல் விளையாட்டை அரங்கேற்றுவதல்ல ஜனவரி 08 ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்களின் எதிர்பார்ப்பு. யார் குற்றவாளியானாலும் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே அம்மக்களின் எதிர்பார்ப்பு. அத்துடன் மீண்டும் அக்குற்றங்கள் நடைபெறாத வண்ணம் புதிய சட்ட ஏற்பாடுகள் அமைக்கப்பட வேண்டும் என்பதும் ஆட்சி மாற்றத்திற்கு பங்களித்த மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. ஆனால் எல்லாம் புஸ்வாணமாய் போயுள்ளன.

நாடு இன்று ஒரு தீர்க்கமானதொரு கட்டத்திற்கு வந்துள்ளது. மக்கள் ராஜபக்ஷ அரசியலை தோற்கடித்தது மாற்றீடாக மீண்டும் அதையே தெரிவுசெய்துகொள்வதற்காக அல்ல. ஆனால் தற்போதைய அரசாங்கம் ராஜபக்ஷ அரசியலை ஒரு மாற்றீடாக கொள்ளும் நிலைக்கு மக்களை மெதுவாக நகர்த்தி வருவதை காண முடிகின்றது.

எனவே தற்போதைய ஆட்சியாளர்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய சில விடயங்கள் காணப்படுகின்றன. ஒன்று பிணை முறிகள் கொள்வனவில் தொடர்புற்றிருக்கும் குற்றவாளிகளுக்கு தராதரம் பாராமல் தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அரசாங்கத்தில் அந்தரத்தில் தொங்கிக் கொண்டு ஆட்சியை விமர்சிக்கின்ற அமைச்சர்களை பதவி நீக்க வேண்டும், இரண்டாவது, ஆட்சியை ஸ்திரப்படுத்தி ஜனவரி 08 வெற்றிக்கு பங்களித்த மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான விஷேட பொறிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இவை இடம்பெறுமாக இருந்தால் மக்களின் போராட்டம் வீணாகாது. இதில் முதலாவது விடயம் பெப்ரவரி 10 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் இடம்பெறுமாக இருந்தால் கூட்டாட்சி குறித்து மக்களுக்கு ஓரளவு நம்பிக்கை பிறக்கும். இன்றேல் கிடைத்த வாய்ப்பு கை நழுவிப்போகும் துர்ப்பாக்கிய நிலையை இவ்வரசாங்கம் எதிர்கொள்ள வேண்டி வரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்ன்

# உள்ளகப் பிணக்குகளும் உள்ளூராட்சித் தேர்தலும்

மூன்றாவது ஒரு அணி இலங்கை அரசியலில் இல்லை என்பதனால் இலங்கை மக்களுக்கு முன்னால் பாரிய அரசியல் சவால்கள் எழுந்துள்ளன. இன்னொரு புறம் நல்லாட்சி அரசாங் கத்தில் உட்பூசல்கள் இறுக்கமடைந்து வருகின்றன. ஐ.தே.க. மற்றும் ஸ்ரீ லங்கா சு.க. கூட்டரசாங்கத்தில் பாரிய முரண் பாடுகள் வலுத்து வருகின்றன. குறிப் பாக, கட்சி தாவியவர்களின் விமர்ச







இலங்கை அரசியல் வரலாற்றில் நிறைவேற்று அதிகார முறையைக் கொண்டு வந்தவர் ஜே.ஆர். ஜெயவர் தன. ''போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்'' என இனப் பிரச்சி னையை சிங்கள, பௌத்த இனவாதத் தோடு எதிர்கொண்டவர் அவர். திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்ததனால் ஒரு புறம் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தன. இன்னொரு புறம் இலங்கை மீதான வெளிநாடுகளின் ஆதிக்கம் இறுகியது. இதுவே ஜே.ஆர். இன் சாதனை.

ஆர். பிரேமதாச சமுர்த்தி, ஜனசவிய, கம்உதாவ போன்ற திட்டங்கள் மூலம் கிராமிய அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கியவர். ஜே.ஆர். உடன் ஒப்பிடும் போது ஏன், பின்னர் வந்த ஜனாதிபதி களோடு ஒப்பிடும்போது ஓரளவு தேசிய கொள்கையும் தூர நோக்கும் கொண்ட, அபிவிருத்தித் திட்டங்களை அறிமுகம் செய்தவர் பிரேமதாஸவே.

அவரது சடுதியான மரணத்தை அடுத்து டி.பீ. விஜேதுங்க ஜனாதிபதி யாக சத்தியப் பிரமாணம் செய்தார். அடுத்த தேர்தல் வரை மிகச் சிறிது காலம் ஜனாதிபதியாக இருந்த விஜேதுங்க, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமை யாளராக இருந்து, அரசியலுக்கு வந்த வர். அவரது குறுகிய காலத்தில் எந்த சாதனையையும் நிலைநாட்டவில்லை.

அடுத்த தேர்தலில் சந்திரிக்கா ஜனாதி பதியானார். யாழ்ப்பாணத்தைப் புலி களிடமிருந்து மீட்டெடுத்தார். பொருளா தார ரீதியிலோ அரசியல் ரீதியிலோ குறிப்பிடத்தக்க எந்த சாதனையையும் அவர் நிகழ்த்தவில்லை. அவரது பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த போரை வியாபாரமாய் செய்து வந்தார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானார். இரு முறை பதவிலியிருந்த சந்திரிக்காவின் காலத்தில் புலிகளின் குண்டுத் தாக்குதல் களால் பல கோடிப் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

2005 இல் மஹிந்த ஜனாதிபதியானார். அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் போரை முடிவுக்குக் கொண்டு வந்து வெளி நாட்டுக் கடனுதவியோடு வீதி அபிவி ருத்தியையும் துரிதமாக ஏற்படுத்தினார். எனினும், சர்வதிகாரமிக்க ஊழல் நிறைந்த ஒரு குடும்ப ஆட்சி என்று அவரது ஆட்சி விமர்சிக்கப்பட்டதோடு, 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக் கப்பட்டார்.

2015 ஜனவரியில் மைத்திரி நிறை வேற்று ஜனாதிபதியாக பதிவிப் பிரமா ணம் செய்தார். மஹிந்தவுக்கு எதிராக சரத் என். சில்வா, சரத் பொன்சேகா, ரணில் விக்ரமசிங்க, மாதுலுவாவே சோபித தேரர் போன்றோரில் யாரைக் களமிறக்குவது என்ற விவாதத்திற்கு மத்தியில் சுதந்திரக் கட்சியின் செயலா ளராகவும் சுகாதார அமைச்சராகவும் இருந்த மைத்திரி பொது அபேட்சகராகக் களமிறக்கப்பட்டார்.

மஹிந்தவின் ஆட்சிக்கு எதிராகத் திரண்ட அணியினர் மஹிந்தவின் குடும்ப ஆட்சி, அதன் சர்வதிகாரப் போக்குகள், ஊழல் மோசடிகள் என்பவற்றுக்கு எதிராக நாட்டில் ஒரு ஜனநாயக மாற்றம் வேண்டும் என வாதிட்டனர். அப்போது நாட்டில் காணப்பட்ட இனவாத செயற்பாடுகளும் சிறுபான்மை மக்களின் அதிருப்தியும் மைத்திரியை தேர்தலில் வெல்ல வைத்தது. இதுவே மைத்திரி வென்றதன் அரசியல் பின்னணி.

சமூக நீதிக்கான இயக்கத்தின் தலைவர் சோபித தேரரின் தலைமையில் வரையப்பட்ட 100 நாள் வேலைத் திட்டத்தில் நிறைவேற்று அதிகார முறையை இல்லாதொழிப்பதும் ஜனாதி பதி, பிரதமர் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளாகக் குறைப்பதும் உள்ள டங்கியிருந்தது. துரதிஷ்டவசமாக மூன்றாண்டுகள் கடந்தும் நிறைவேற்று அதிகார முறை நீக்கப்படவில்லை.

ஆனால், 2015 மே 14 இல் பாராளு மன்றத்தில் கொண்டு வரப்பட்ட அரசிய லமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. ஏற்கனவே இதனை 4 ஆண்டுகளாகக் குறைப்பேன் என்று தேர்தலின் போது வாக்குறுதியளித்த மைத்திரி, அதனை 5 ஆண்டுகளாகக் குறைத்ததோடு, மீண்டும் ஒருமுறை தான் தேர்தலில் நிற்கப் போவதில்லை என்றும் உறுதியளித்திருந்தார். தற்போது தனது பதவிக்காலத்தை 6 ஆண்டு களாகப் பூர்த்தி செய்யலாமா என்று உச்சநீதிமன்றத்தில் ஆலோசனை வேண்டியுள்ளார்.

ஐந்து நீதிபதிகளைக் கொண்ட குழு மைத்திரியின் பதவிக் காலம் 5 ஆண்டு களே என்று அறிவித்துள்ளது. ஏற்கனவே பதவியிலிருந்த ஜனாதிபதிகள் தமது பதவிக் காலத்தை நீடிப்பது குறித்து உச்ச நீதிமன்றத்திடம் ஆலோசனை கேட்டி ருந்தனர். சந்திரிக்கா தனது முதலாவது பதவிக் காலத்தின் எஞ்சிய நாட்களை யும் 2 ஆவது பதவிக் காலத்துடன் சேர் த்து பதவியில் இருக்க முடியுமா என்று உச்ச நீதிமன்றத்திடம் ஆலோசனை கேட்டிருந்தார்.

மஹிந்த, தனது சர்வதிகார தோற் றத்தை மறைக்க 2 ஆவது பதவிக் காலத் திற்கு தெரிவுசெய்யப்பட்ட அவர், அது எப்போது தொடங்கி, எப்போது முடி கின்றது என உச்ச நீதிமன்றத்திடம் கேட்டிருந்தார். 3 ஆவது பதவிக் காத் திற்கு போட்டியிட முடியுமா? என்ற அவரது கேள்விக்கு உச்ச நீதிமன்றம் சாதகமாய்ப் பதிலளித்தது. மஹிந்தவின் நீதிமன்ற ஆலோசனைகள் அனைத்தும் அவருக்குச் சாதகமாகவே இருந்தன.

எந்த வாக்குறுதியையும் நிறைவேற் றாத நிலையில் 3 ஆண்டுகள் கடந்து விட்டதை எண்ணி கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் ஜனாதிபதி பதவிக் காலத்தை 6 ஆண்டுகளாய் பூர்த்தி செய்யலாமா என்று ஆலோசனை கேட்டுள்ளார். உச்ச நீதிமன்றமோ அதனை அனுமதிக்கவில்லை.

இலங்கை மக்கள் இன்று ஒரு பெரும் அரசியல் சங்கடத்தில் மாட்டி யுள்ளனர். மீளவும் இலங்கையில் ஊழ லும் சர்வதிகாரமும் நிறைந்த குடும்ப ஆட்சியொன்றையே தாம் ஆதரிப்பதா அல்லது கிராம சேவகர் பதவிலிருந்து அரசியலுக்கு வந்து, எதையும் சாதிக்கத் திராணியற்ற நிலையிலுள்ள மைத்திரியின் ஆட்சியை ஆதரிப்பதா என்பதே அந்தச் சங்கடமாகும்.

னங்கள் முரண்பாடுகளைக் கூர்மைப் படுத்தியுள்ளன.

எஸ்.பி. திஸாநாயக்க, தயாசிறி, மங்கள, மஹிந்த சமரசிங்க, லக்ஷ்மன் கிரியெல்ல, காமினி லொகுகே, கெஹெ லிய ரம்புக்வெல்ல போன்றோர் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் குற்றம் சுமத்துகின்றனர். துறைமுக நகரம், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, சைட்டம், இலங்கை விமான சேவை, மத்திய வங்கியின் ஆளுனர் நியமனம், பிணை முறி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக் கள் அரசாங்கத்தில் நீடிக்கின்றன.

உள்ளூராட்சி தேர்தலுக்குப் பின்னர் தேசிய நல்லிணக்க அரசாங்கம் நீடிக் குமா என்ற ஐயத்தை எழுப்பியுள்ளது. குறிப்பாக, பிணைமுறி விவகாரமும் முன்னாள் ஆட்சியாளர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகள் தாமதிப்பதும் உள்ளூராட்சித் தேர்தலில் பெருமளவு செல்வாக்குச் செலுத்தும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு ஜனாதிபதி மைத்திரி, தனது பதவிக் காலத்தை 6 ஆண்டுகளாய் பூர்த்தி செய்ய நீதிமன்றத்திடம் வேண்டி யமை எதிரணியினரின் பிரச்சாரத்திற்கு சாதகமாய் மாறியுள்ளது. இன்னொரு புறம் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவீனம் நல்லாட்சி அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் என்பனவும் தேர்த லில் பிரதிபலிக்கும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

# உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பது எவ்வாறு?

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து பின்னர் 1977 இற்கு முன்னர் காணப்பட்ட வாக்களிப்பு முறையை விட புதியதோர் முறையில் இலங்கை மக்கள் வாக்களித்தனர். தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு முறை சற்று மாறுபட்டது. 1977 இற்கு முன்னர் காணப்பட்ட தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறை மற்றும் 1977 இற்குப் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட விகிதா சாரத் தேர்தல் முறை ஆகிய இரண்டையும் இணைத்த ஒரு கலப்புத் தேர்தல் முறையாக இப்புதிய தேர்தல் முறை காணப்படுகின்றது.

எவ்வாறாயினும், இத்தேர்தலில் வாக்களிக்கும் முறைமையானது தொகுவாரிப் பிரதிநிதித்துவத்தின் கீழ் வாக்களித்த முறைக்கு பெரும்பாலும் ஒத்த தாகும். அதாவது குறித்த உள்ளூராட்சி சபையில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் பெயர்கள் சிங்கள அகர வரிசைப்படி மும்மொழிகளிலும் வாக்குச் சீட்டில் அச்சிடப்பட்டிருக்கும். கட்சிப் பெயருக்கு எதிரே ஒரு கூட்டில் அக்கட்சிக்கென குறித்தொதுக்கப்பட்ட தேர்தல் சின்னம் அச்சிடப் பட்டிருக்கும். அரசியல் கட்சிகளுக்குக் கீழே சுயேச் சைக் குழுக்கள் போட்டியிடுவதாக இருந்தால் சுயேச்சைக் குழுக்களின் இலக்கங்களுக்கு அமைய அவற்றின் பெயர்கள் மும்மொழிகளிலும் அச்சி டப்பட்டு அவற்றின் சின்னங்களும் காணப்படும்.

ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே ஒரு வெற்றுக் கூடு இருக்கும். ஏற்கனவே 1977 இற்கு முன்னர் இருந்த வாக்களிப்பு முறையிலும் 1977 இற்குப்



பின்னர் இருந்த வாக்களிக்கும் முறையிலும் இருந்த வாக்குச் சீட்டின் மேற்பகுதி இவ்வாறுதான் காணப் பட்டது. கீழ்ப் பகுதியில் போட்டியிடும் வேட்பாளர் களின் இலக்கங்கள் அச்சிடப்பட்ட விருப்பு வாக்கு களை அடையாளமிடும் பகுதி காணப்படும்.

தற்போது விருப்பு வாக்குகள் இல்லை என்ற படியால் கீழ்ப் பகுதி இல்லாமல், மேல்பகுதி வாக்குச் சீட்டு மாத்திரமே தேர்தலில் பயன்படுத்தப்படும். இதில் வாக்காளர் ஒருவர் தான் விரும்பிய கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிப்பதாக இருந்தால் அதை கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக் கூட்டினுள் புள்ளடியிட வேண்டும்.

இது வட்டாரத் தேர்தல் முறை என்பதனாலும் வட்டாரத்திற்குள் வைத்து வாக்குகள் எண்ணப்படும் என்பதனாலும் மாற்று முறைகளைப் பயன்படுத்தி வாக்களித்திருந்தால் அவ்வாக்குகள் நிராகரிக்கப் படும். இதற்கொரு காரணம் இருக்கிறது. புள்ளடி என்பது எல்லோராலும் பயன்படுத்தப்படுவதால் வாக்குகளை எண்ணுவது இலகு. இல்லையென்றால் ''நான் சரி அடையாளத்தை இட்டுள்ளேன், எனது வாக்கு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்'' என வீம்பு பேசும் வாக்காளன், தான் யாருக்கு வாக்களித்துள்ளேன் என்பதற்கு இனங்கண்டு கொள்வதற்கு ஒரு ஊடகமாக இந்த மாற்று வழிகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றபடியினால் வேறு அனைத்து மாற்று வழிகளையும் நிராகரித்துள்ளது தேர்தல் திணைக்களம்.

இதேபோன்று வாக்குகள் நிராகரிக்கப்படுவதற்கு வேறு பல வழிகளும் உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளுக்கு வாக்களிக்கப்பட்டிருந்தால் அவ்வாக்கு கள் நிராகரிக்கப்படும். அல்லது ஒரு கட்சிக்கும் ஒரு சுயேச்சைக் குழுவுக்கும் அல்லது பல கட்சிகளுக்கும் வாக்களிக்கப்பட்டிருந்தால், அல்லது சுயேச்சைக் குழு இரண்டுக்கு கலவையாக வாக்களித்திருந்தால் அதுவும் நிராகரிக்கப்படும்.

இல்லாவிட்டால் குறித்த வாக்களிக்கும் புள்ளடி எக்கட்சிக்கு இடப்பட்டிருக்கிறது என்பதை நிச்சயித் துக் கொள்ள முடியாத வகையில் இரண்டுக்கு மத்தி யில் இடப்பட்டிருந்தால், அதுவும் நிராகரிக்கப்படும். அத்துடன் முழு வாக்குச் சீட்டிலும் புள்ளடியிடப் பட்டிருந்து, அதன் வெட்டுப் புள்ளி குறித்த ஒரு கூட்டினுள் வருகின்றது. ஆகவே, அவ்வாக்கு செல்லு படியாகும் என நினைத்து வாக்களித்திருந்தாலும் அவ்வாக்கு நிராகரிக்கப்படும்.

யாராவது ஒருவர் தன்னுடைய பெயரை அல்லது தன்னை அடையாளப்படுத்தக் கூடிய ஒரு தகவலை வாக்குச் சீட்டில் எழுதுவாராக இருந்தால், அவருடைய ஆள் அடையாளத்தைக் கண்டுகொள்ள அது துணை நிற்கும். எனவே தனது ஆள் அடையாளத்தை வெளிப்படுத்த ஏதாவது வாக்குச் சீட்டில் எழுதப் பட்டிருந்தால் அதுவும் நிராகரிக்கப்படும்.

பயன்படுத்தப்படும் வாக்கு சீட்டு குறித்த வாக்களிக்கும் நிலையத்தால் விநியோகிக்கப்பட்ட வாக்குச் சீட்டு அல்ல மாறாக, அது வேறெங்கோ விநியோக்கிப்பட்ட வாக்குச் சீட்டு எனத் தெரிய வந்தால், அல்லது அந்த வாக்களிப்பு நிலையத்தில் இடப்படுகின்றது உத்தியோகபூர்வ முத்திரை குத்தப் படாத வாக்குச் சீட்டாக அது இருந்தால், அந்த வாக்குச் சீட்டும் நிராகரிக்கப்படும்.

பல அங்கத்தவர் வட்டாரங்களும் காணப்படு கின்றன. அதாவது ஒரு கட்சியைச் சேர்ந்த இரு வரோ அல்லது மூவரோ போட்டியிடுகின்ற வட் டாரங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் இருவர் தெரிவுசெய்யப்படுகின்ற வட்டாரங்கள் 165 இருக் கின்றன. அவ்வற்றிலிருந்து 330 பேர் தெரிவுசெய் யப்படவிருக்கிறார்கள். மூன்று பேர் தெரிவுசெய் யப்பட வேண்டிய வட்டாரங்கள் 4 இருக்கின்றன. அவற்றிலிருந்து 12 பேர் தெரிவுசெய்யப்பட விருக்கின்றனர்.

பல் அங்கத்தவர் வட்டாரத்திலிருந்து வேட் பாளர்களைத் தெரிவுசெய்கின்றபோது ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு கட்சியிலும் இருவர் அல்லது மூவர் போட்டியிடுவர். ஒரு கட்சி வெற்றி பெறும் பட்சத்தில், அவ்வட்டாரத்தில் அக்கட்சி யைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடுகின்ற இருவரும் அல்லது மூவரும் வெற்றி பெற்றதாக பிரகடனப்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சமூகங்களுக்கிடையிலான உறவுகள் வலுப்பெறுவது அவசியம்

வரலாறு என்பது மிக முக்கியமானதொரு விடயம். நாம் எமது வரலாற்றை தெரிந்துகொள்ள வேண்டும். அதுபோன்று ஏனைவர்களது வரலாற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் எமக்கு நாடென்ற வகையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும். எமக்கு ஆயிரம் வருட கால வரலாறுள்ளது. போர்த்துக்கேயர்கள் இலங்கைக்கு ஆக்கிரமிப்பாளர் வந்தார்கள், ஒல்லாந்தரும், ஆங்கிலேயர்களும் ஆக்கிரமிப்பாளர்களாகவே இலங்கைக்கு வந்தார்கள்.

ஆனால் முஸ்லிம்கள் இங்கு ஆக்கிரமிப்பாளர்களாக வரவில்லை. முஸ்லிம்கள் ஆக்கிரமிப்பாளர்களாக வந்தார்கள் என வரலாற்றில் எங்கும் பதிவிடவில்லை. போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள், ஆங்கிலேயர்கள் பற்றிக் குறிப்பிடும் போது அவர்கள் இலங்கையின் வளங்களை சூறையாடினார்கள், பிரித்தாளும் கொள்கையைப் பேணினார்கள் என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம்கள் இந்நாட்டின் வளங்களை சூறையாடினார்கள் என்று எங்கும் பதிவுசெய்யப்படவில்லை. அவர்கள் பிரித்தாளும் கொள்கைகளை கடைபிடிக்கவுமில்லை. தெற்காசியாவில் இஸ்லாத்தின் பரவல் குறித்து தோமஸ் ஆர்னல்ட் (Thomas Arnold) எழுதிய The preaching of Islam எனும் நூல் எனக்கு நினைவு வருகிறது. தெற்காசியாவில் இஸ்லாம் ஆயுத பலத்தால் பரவவில்லையென அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவே எமது வரலாறு. ஆனால் கடந்த காலப் பகுதியில் உலகில் சில சக்திகள் தமது ஆயுதங்களை விற்பனை செய்துகொள்வதற்காகவும், நாடுகளை ஆக்கிரமிப்பதற்காகவும் போராட்டங்களை மூட்டுகிறார்கள். நாடுகளில் ஜனநாயகத்தை தாபிப்பதற்காகவே நாம் ஆயுதப் படையை அனுப்புகின்றோம் எனக் கூறுகிறார்கள். ஆனால் அந்நாடுகளில் ஆயிரக் கணக்கிலான உயிர்கள் காவுகொள்ளப்படுவது அவர்களுக்கு ஜனநாயக மீறலாகத் தென்படுவதில்லை. டொனி பிளேயர் இன்று ஒரு தவறு நடந்துள்ளது மன்னித்துக் கொள்ளுங்கள் என கூறுகிறார். ஆயிரக் கணக்கிலான உயிர்களுக்கான நஷ்டஈடுதான் அது. இஸ்லாம் குறித்த பீதி (Islamophobia) இன்று பரவலாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு அவற்றிலிருந்து விடுபட முடியாது. காரணம், பலம்பொருந்திய ஊடக அமைப்புக்கள் அவற்றை பிரச்சாரப்படுத்துகின்றன. அறிந்தோ அறியாமலோ ஒரு சிலர் அதன் தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளனர். நாம் அதன் பாதிப்புக்களுக்கும் உள்ளானோம். இந்நிலையில் முஸ்லிம் சமூகத்தின் பொறுப்புக்கள் என்ன? எமக்கு தனிமைப்பட்டு ஒதுங்கியிருக்க முடியாது. இஸ்லாம் தொடர்பான புரிதல் காணப்படுமாக இருந்தால் அதனை இல்லாமல் செய்யும் பொறுப்பு எமது சமூகத்திற்கு உள்ளது. கடந்த காலப்பகுதிகளையும் விட எமது சமூக உறவுகள் மென்மேலும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

நான் ஒரு முறை திருமண வீடொன்றில் முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்க அவர்களின் பாரியாரைச் சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் இம்தியாஸ்! முஸ்லிம் பெண்கள் ஏன் கருப்பு ஆடைகளை அணிகிறார்கள்? கண்களை மட்டும் திறந்து கொண்டு மற்ற இடங்களையெல்லாம் ஏன் மறைக்கிறார்கள்? முன்னர் நாம் முஸ்லிம் பெண்களுடன் ஒன்றாகக் கற்றோம். முன்பு இப்படியிருக்கவில்லை. ஏன் புதிதாக இப்படியொரு வழிமுறை பின்பற்றப்படுகின்றது? நான் கூறினேன், நான் சிறு பராயத்தில் இருக்கும் போது எனது பாட்டி காரில் செல்லும் போது ஒரு சீலையால் மூடிக்கொள்வார்.

ஆனால் இன்று அப்படியில்லை. இன்று போட்டித் தன்மைமிக்க சூழல் பொருளாதார பிரச்சினைகளின் காரணமாக பெண் பிள்ளைகளும் தொழில்களுக்கு செல்கின்றார்கள். அவர்களுக்கு காரில் செல்ல முடியாது. அதனால் ஏனைய போக்குவரத்து வாகனங்களில் பயணிக்கிறார்கள். வெட்கம், அச்சம் காரணமாக ஏனைய மக்களால் கவரப்படாத வகையில் ஆடைகளை அணிய வேண்டியுள்ளது. இதனாலேயே அவர்கள் அப்படி ஆடை அணிந்து செல்கிறார்கள் என்றேன்.

எனவே எமக்கு மத்தியிலான புரிந்துணர்வின்மையே தேவையற்ற பிரச்சினைகளுக்கு மூல காரணமாக அமைகின்றன. எனவே சமுதாயத்தில் தனித்திருக்க முடியாது. எமது மத்தியிலான புரிதல்கள் வலுப்பெற வேண்டும். நாம் ஏனைய சமூகங்களுடனான உறவை கட்டியெழுப்ப வேண்டும். அப்போது எம்மை பற்றிய சந்தேகங்கள், அவர்களிடம் காணப்படுகின்ற புரிதலின்மைகள் அற்றுப்போகும். நாம் தனிமைப்பட்டிருக்கும் போது எம்மை பற்றிய சந்தேகங்கள் அவர்களிடம் வலுக்கும்.

# சிந்தனா வறுமைக்குக் காரணமாகிய மொழிக் கொள்கை

மறுமலர்ச்சி இயக்கம் இலகுவான ஆட்சி மாற்றத்தையன்றி அதைவிட ஆழமான சமூக மாற்றத்தையே நாடுகிறது. ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் எந்தவித மாற்றங்களையும் செய்ய முடியாத இழிநிலையில் ஆட்சிகள் அழுக்கடைந்திருக்கின்றன. இந்த நிலையில் யார் ஆட்சியைக் கைப்பற்றினாலும் அவர்களும் இந்தக் குப்பையில் அமிழ்ந்து விடுவதைத் தவிர வேறெதனையும் செய்யப் போவதில்லை.

இதற்கு மாற்றமாக சமூக மாற்றமென்பது, ஆத்மார்த்தமாய் நலிந்து போயுள்ள ஒரு சமுதாயத்தைக் குணப்படுத்தி, அழுகிப் போயிருக்கும் அரசைப் புனர்நிர்மாணம் செய்வதற்குத் தேவையான பலமான சமூக அரசியல் சூழலொன்றை தோற்றுவிப்பதாகும். சமூக சிந்தனையில் மட்டுமன்றி அதனுடன் பிணைந்திருக்கின்ற சமூக அசைவியக்கத்தின் முறைமைகளிலும் ஆழமான மாற்றத்தைக் கொண்டு வருவதே மறுமலர்ச்சி இயக்கத்தின் கோட்பாடு.

விமர்சனங்கள், தர்க்கங்கள் என்ற ரவைகளினூடாக சமூகத்தின் முன்னோக்கிய பயணத்துக்குத் தடையாகவிருக்கின்ற இத்துப் போன பாரம்பரிய சிந்தனைகளினதும் அதனுடன் இணைந்த முறைமைகளினதும் கேந்திரங்களை மறுமலர்ச்சி இயக்கம் இலக்கு வைக்கிறது. இதனூடாக மக்களின் புத்தியிலும் சிந்தனையிலும் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அது நாடுகிறது. பாரிய அளவில் விளைவுகளைத் தரும் வகையில் சமூக அரசியல் விவகாரங்களில் புரட்சிகரமான சக்தியாக அது பரிணமிக்க விளைகிறது.

அரசியலோ கொள்கைகளோ கைவைப்பதற்கு அஞ்சிய இடங்களில் மறுமலர்ச்சி இயக்கம் கைவைத்திருக்கிறது. இலங்கையின் வரலாற்றுக் கதை வர்க்கவாத உணர்வுகளை வளர்க்கும் வகையிலேயே எழுதப்பட்டிருக்கிறது. தமது தர்மத்தை கொண்டு செல்வதற்கு புத்தரினால் தெரிவுசெய்யப்பட்ட விஷேட இனக்குழுமமாகவே அது சிங்களவரைச் சித்திரிக்கிறது. அனுராதபுர, பொலன்னறுவ நாகரிகங்கள் தான் உலகின் தலைசிறந்த நாகரிகங்கள் என்று கருதும் அளவுக்கு வரலாறு புனையப்பட்டுள்ளது. வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள் கூட வர்க்க உணர்வுகளைத் தூண்டும் வகையிலேயே வரலாற்று நூல்களில் எழுதப்பட்டுள்ளன.

விஜய புராணம் துவங்கும் காலத்துக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர், அதாவது கி.மு.8 ஆம் நூற்றாண்டளவில், மட்பாண்டங்கள் பாவித்து நெல் போன்ற தானியங்களை விதைத்து விவசாயம் செய்து நாகரிகமாக வாழ்ந்த மக்களைப் பற்றி அனுராதபுர உட்பட்ட நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளினூடாக பேராசிரியர் ஷிரான் தரணியகல குறிப்பிடுகின்றார். ஆனாலும் மகாவம்சம் குறிப்பிடுகின்ற புத்தருக்கு முந்திய காலம் பற்றிய விபரங்கள், மகா சம்மத ராஜவங்சய, இலங்கைக்கு புத்தர் மூன்று தடவைகள் தரிசித்ததாகச் சொல்லப்படுவது, சிங்கபாகு-விஜய புராணங்கள், தேவர்கள் வானத்திலிருந்து இறங்கியமை போன்ற விடயங்களை உண்மையானவைகளாக வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

இலங்கையின் ஆதிவாசிகளாக வேடுவர்களே கணிக்கப்படுகிறார்களேயன்றி விஜயனல்ல. அந்த வேடுவர்களும் கூட சுதேசப் பண்புகளன்றி வெளியுலகப் பண்புகளையே கொண்டிருந்தனர். ஏனெனில் விஜயன் இலங்கைக்கு வருமுன்னர் இலங்கையில் வசித்த கோத்திரங்களில் பல இந்தியாவில் இருந்து வந்தவைகளாகவே உள்ளன. இலங்கையின் ஆரம்ப வரலாற்றுத் தலங்கள் பலவற்றிலும் கண்டெடுக்கப்பட்ட சுற்றாடல் உபகரணங்களும், ஆதிகால மனிதர்கள் உபயோகித்த இரும்பு, பித்தளை மூலங்களிலாலான சிறியளவிலான உலோக உபகரணங்கள், முத்து உற்பத்திகள், மயான ஒழுங்குகள், மட்பாண்டத் தொழில், சுட்ட மட்பாண்டங்களிலான வேலைப்பாடுகள் எல்லாமே தென்னிந்தியாவில் இருந்து வந்தவைகள் என ஆராய்ச்சியாளர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

விஜயனுக்கு முன்னரேயே இங்கு இரும்பு பாவனையில் இருந்துள்ளது என்பதோடு, இரும்புப் பாவனை எமக்கு அறிமுகமாகியது இந்தியாவில் இருந்தே என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. கட்டியெழுப்ப விளைகின்ற சிங்கள வாதத்தில் தமிழ்வாதமும் ஆரம்பம் முதலே பிணைந்திருக்கிறது என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

விஜயனும் பரிவாரங்களும் போர்த்துக்கேயர் நாட்டுக்கு வந்தது போல தற்செயலாகவே வந்தார்கள். விஜயனுக்கு அசுர பலம் கொண்ட




பின்னணியொன்று இருந்தாலும், உள்ளூர் அரசியை தனது துணைவியாகக் கவர்ந்து கொள்வதன் மூலமே அவன் அரசைக் கைப்பற்றினான். தனது வாரிசாக இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த பின்னரே விஜயன் குவேனியை துரத்தி விடுகிறான். விஜயனுக்கு சிறப்பிடம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அவனது சிங்க உறவு தொடர்பான கதையை 'பதகுஸல' மானிட புராணத்திலிருந்து மகாவம்சத்தின் நூலாசிரியர் இரவலாகப் பெற்றிருக்கலாம்.

குவேனி கதையை வலாஹஸ்ஸ புராணத்திலிருந்து எடுத்திருக்கலாம். விஜய கதையில் வரலாற்று விடயமாக அடையாளப்படுத்த முடியுமான ஒரே விடயம், கி.மு. ஆறாவது நூற்றாண்டளவில் வடஇந்தியாவிலிருந்து வந்தவர்கள் இங்கிருந்த சுதேசிகளை அடிமைப்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள் என்பதே.

பின்னர் நடந்த வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் தொடர்பில் சொல்லப்பட்டிருப்பவைகளும் தவறானவை. அக்காலத்தில் பக்கத்திலுள்ள சிறிய நாட்டை பெரிய நாடுகள் ஆக்கிரமித்து கைப்பற்றிக் கொண்டன. அல்லது கொள்ளையடித்தன. நாடுகளை ஆக்கிரமித்து கைப்பற்றிக் கொள்வது அக்காலத்தில் மோசமானதொரு விடயமாகவன்றி நாடுகளின் பலத்தையும் அதிகாரத்தையும் பறைசாற்றுவதாகவே அமைந்திருந்தன.



இலங்கை சிறிய தீவாக இருந்தாலும் இந்த மரபு இலங்கையையும் பாதித்தது. இலங்கை பலம் பெற்றிருந்த போதுகளிலும் கூட இந்தியாவின் சில ராஜ்ஜியங்கள் இலங்கையை ஆக்கிரமித்த சந்தர்ப்பங்களும் உள்ளன. இலங்கை ஈன்றெடுத்த சிறந்த தலைவராகக் கருதப்படும் முதலாம் பராக்கிரமபாகு, பர்மாவை மட்டுமன்றி இந்தியாவின் பாண்டிய நாட்டையும் கைப்பற்றினார். வெல்ல முடியாத இந்த யுத்தத்துக்காக இலங்கை மிகப்பெரும் நஷ்டஈட்டைச் செலுத்த வேண்டியிருந்தது.

இவ்வாறு கட்டியெழுப்பப்பட்ட இலங்கையின் இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலான வரலாற்றில், அறிவைப் பெறுவதற்கான மூலமாக பௌத்த மதமே இருந்து வந்துள்ளது. இந்த நீண்ட காலப்பகுதியில் மொழியையும் மதத்தையும் தவிர்த்து வேறு எந்த விடயங்களிலும் நூல்கள் எழுதப்படவுமில்லை, வேறுநாடுகளில் எழுதப்பட்ட புத்தகங்கள் மொழிபெயர்க்கப்படவுமில்லை. சிந்தனையிலும் அறிவிலும் இலங்கை கடந்து வந்துள்ள பிற்போக்கினை இதனூடாக அறிந்து கொள்ள முடியும்.

இந்தப் பிற்போக்கான சிந்தனைதான், சுதந்திரத்தின் பின்னர் தோன்றிய இரத்தப் பெருக்குகளுக்கும் அதனைத் தொடர்ந்து வந்த பண்பாடற்ற செயற்பாடுகளுக்கும் வழிகோலின. பாரம்பரிய நோக்கில் மோதல்களுக்கான காரணமாக வர்க்க பேதம் நோக்கப்பட்டது போல

ஜாதி நோக்கப்படவில்லை. மறுமலர்ச்சிச் சிந்தனைதான் இதனை முதலில் நோக்கியது. இப்போது இது வாதத்துக்குரிய விடயமாக மாறி இருக்கிறது.

ஜாதி பேதம் மறைகரமாகவே வேலை செய்தது. பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே அதன் வலியை உணர்ந்தார்கள். தெற்கில் சிங்களவரது போராட்டத்திலும் வடக்கில் தமிழரது போராட்டத்திலும் சாதியம் தாக்கம் செலுத்தியது. இந்த பேதங்களிலிருந்து மக்களை மீட்டு சகல மனிதர்களையும் சமானமாக மதிக்கின்ற கொள்கையைத் தான் மறுமலர்ச்சி முன்னெடுத்துச் செல்கிறது.

மறுமலர்ச்சி களத்துக்கு வருமுன்னர் அரசியலமைப்பு தான் நாட்டின் பிரச்சினைக்கான மூலகாரணம் எனக் கருதப்பட்டது. நாட்டில் வெடித்த வன்முறைகளில் மட்டுமன்றி, மொத்த சமூகத்திலும் நிர்வாகச் சீர்கேடுகளிலும் ஏற்பட்டுள்ள பாரிய பின்னடைவில் இருந்தும் நாட்டைக் கட்டியெழுப்புவற்குத் தவறியமை, நாடு எதிர்நோக்கியுள்ள உண்மையான பிரச்சினைகளின் பிரதான காரணியாகக் கருதப்பட வேண்டும் என்பது மறுமலர்ச்சி இயக்கத்தின் கோட்பாடுகளில் அடங்கியிருக்கிறது.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தவறியமையினால், ஜனநாயக அரசொன்றில் இருக்க வேண்டிய நீதியும் பாரபட்சமின்மையும் தொடர்பான அடிப்படைகளைப் பாதுகாத்துச் முன்செல்வதற்கு அரசு தவறியுள்ளது. அரசு ஒரு இனத்துக்கு, ஒரு மதத்துக்கு, ஒரு ஜாதியினருக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டது. இதனால், அனைத்து மக்களதும் நம்பிக்கையையும் கௌரவத்தையும் பாதுகாப்பதில் இருந்து அரசு தவறிவிட்டது.

இந்தக் கொள்கை வன்முறைகளுக்கு இட்டுச் சென்றதோடு, ஈவிரக்கமின்றி வன்முறைகளைக் கட்டுப்படுத்துவற்கு அரசினைத் தள்ளவும் செய்ததனால் நரவேட்டை அரசாக அரசாங்கங்கள் மாறின. இந்த நிலைமை, அரசியலமைப்பு, நிறைவேற்றதிகாரம், நீதித்துறைகளிலும் தாக்கம் செலுத்தியது. விளைவாக, இந்த நிறுவன அமைப்புக்களை மலினப்படுத்தவும், அழியச் செய்யவும், மோசடி நிறைந்ததாகவும் மாற்றுவதற்கு அவை காரணமாயின. கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளுக்கும் இவை தான் காரணம்.

எல்லா மாணவர்களும் தமது தாய் மொழியில், ஆரம்பக் கல்வியைப் பெற்று, படிப்படியாக ஆங்கில மொழியில் கருமமாற்ற முடியுமான வகையில் இரட்டை மொழிப் புலமையுள்ளவர்களாக மாற வேண்டும் என்பது கன்னங்கரவுடைய சுயாதீனக் கல்விமுறையில் உள்வாங்கப்பட்டிருந்த மொழிக் கொள்கையாகவிருந்தது. 1956 இல் கொண்டுவரப்பட்ட சிங்களத்தை அரச மொழியாக்கும் கொள்கை, கல்வியில் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தியது.

இரு மொழிகள் தெரிந்தவர்களை உருவாக்குவதை விட்டு, சிங்க ளத்தை மட்டும் அல்லது தமிழை மட்டுமே கற்ற மனிதர்களை இந்தக் கொள்கை நாட்டிலே உருவாக்கியது. இது மொத்தக் கல்வித் திட்டத்தையும் பின்னடையச் செய்ததோடு, புதிதாக அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு மக்களுக்கு இருந்த வாய்ப்புக்களையும் மூடி, சமூகத்தில் சிந்தனா வறுமைக்குக் காரணமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வாக்களிக்காவிட்டால் தகைமையற்றவர் தொகுதியில் உறுப்பினராக தெரிவுசெய்யப்படலாம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் உள்ள சிக்கல்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படும் முறை, 25 வீத பெண்கள் பிரதிநிதித்துவம் எவ்வகையில பகிர்ந்தளிக்கப்படுகிறது ?, வாக்களிக்காவிட்டால் என்ன நடக்கும்? கலப்பு முறை தேர்தலில் உள்ள சாதக பாதகங்கள் என்ன? என்பவை பற்றி பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி வழங்கிய நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

-ஹெட்டி ரம்ஸி-



**ரோஹண ஹெட்டியாரச்சி**
(பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர்)

தாம் விரும்பிய கட்சிக்கு முன்னால் புள்ளடியிட்டு வாக்களிக்க முடியும். அதனால் வாக்களிப்பது மிக இலகுவானது. ஆனால் தேர்தல் முறை சற்று சிக்கலானது. வாக்காளர் தனது வாக்கை அளிப்பது தேர்தல் முறை தொடர்பில் முழுமையான புரிதலொன்றுடன் அல்ல. அதற்கு சில காரணங்கள் உள்ளன.

இத்தேர்தல் முறை குறித்து வாக்காளருக்கு தெளிவுபெறுவதற்கான காலப்பகுதியொன்று இருக்கவில்லை. இத்தேர்தல் முறை பல்வேறு சந்தர்ப்பங்களில் சீர்திருத்தங்களுக்கு உள்ளாயின. தொகுதி அடிப்படையில் 70 வீதமும் விகிதாசார முறையில் 30 வீதமுமாக வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதாக ஆரம்பத்தில் கூறப்பட்டு, தற்பொழுது தொகுதி முறையில் 60 வீதமும் விகிதாசார முறையில் 40 வீதமும் என்றவாறு அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்ற நிலைக்கு வந்துள்ளது. அதிக தடவைகள் திருத்தங்களுக்கு உள்ளான இத்தேர்தல் முறை இறுதியாக கடந்த வருடம் டிசம்பர் 14ஆம் திகதி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

- **இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து மக்களிடம் போதிய புரிதல் இல்லையென நீங்கள் கூற வருகின்றீர்கள்?**

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் மக்களுக்கு இத்தேர்தல் முறை குறித்து தெளிவூட்டுவதற்கான வழிகள் இல்லாமல் போயுள்ளன. தேர்தல் முறையின் படி, வாக்காளர் ஒரு கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவிற்கே வாக்களிக்கிறார். ஒருவர் கட்சிக்கு அளிக்கின்ற வாக்குகளின் அடிப்படையிலேயே தொகுதி முறையில் அல்லது விகிதாசார முறையில் எந்த வேட்பாளர் வெற்றி பெறுகின்றார் என்பது தீர்மானிக்கப்படுகின்றது.

அத்துடன் 25 வீத பெண் பிரதிநிதிகள் எப்படித் தெரிவாகின்றார்கள் என்பது முடிவாகின்றது. எனினும் தனது வாக்கு எந்தளவுக்கு இதில் தாக்கம் செலுத்துகின்றது என்பது வாக்காளனுக்குத் தெரியாது. கட்சிக்கு வாக்களிப்பதை மாத்திரமே அவர் அறிகின்றார்.

- **இப்புதிய தேர்தல் முறைக்கூடாக அபேட்சகர்கள் எப்படி தெரிவுசெய்யப்படுகிறார்கள்?**

அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களை தாக்கல் செய்கின்ற போது தொகுதி அடிப்படையில் தெரிசெய்யப்படுகின்ற அபேட்சகர்கள் யார் என்பதை உறுதியாக குறிப்பிட்டிருக்க வேண்டும்.

- **இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முதற் தடவையாக தொகுதிவாரி மற்றும் விகிதாசார கலப்பு முறையில் நடைபெறவுள்ளது. இது சிக்கலான தேர்தல் முறையொன்றென சிலர் விசனம் தெரிவிக்கின்றனர். இது குறித்து நீங்கள் தெரிவிக்க விரும்புவது என்ன?**

இத்தேர்தல் முறை வாக்காளருக்கு வாக்களிப்பதற்கு சிக்கலான முறையொன்றல்ல. இது இலகுவானதொரு முறை. வாக்குச் சீட்டில் கட்சியின் பெயர், கட்சியின் சின்னம் மற்றும் அதற்கு முன்னால் வாக்காளருக்கு தனது வாக்கை அல்லது புள்ளடியிடுவதற்கான கட்டம் உள்ளது.

உதாரணமாக 12 தொகுதிகள் (வட்டாரங்கள்) உள்ள பிரதேச சபையொன்றை எடுத்துக் கொள்வோம். 12 தொகுதிகளையும் 60 வீதமாக கொண்டு, பின்னர் விகிதாசார முறையின் கீழ் அதற்கு 40 வீதத்தையும் சேர்க்க வேண்டும். இதன்படி, இன்னும் 8 உறுப்பினர்கள் தொகுதி முறையிலான 12 உறுப்பினர்களுடன் சேர்கிறார்கள். இதன் படி, 12 தொகுதிகள் உள்ள பிரதேச சபையொன்றுக்கு 20 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களை தாக்கல் செய்கின்ற போது சகல அரசியல் கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் இப்பன்னிரெண்டு தொகுதிகளுக்குமான 12 பேரை பெயரிட வேண்டும். இதன்பிரகாரமே வாக்காளர் தனது வட்டாரத்தின் (தொகுதியின்) வேட்பாளரை தெரிந்து கொள்கிறார். இவ்வுறுப்பினர் எண்ணிக்கையில் 10 வீதம் பெண்களாக இருக்கவும் வேண்டும். பிரதேச சபைக்கு தெரிவாகின்ற முழு உறுப்பினர் எண்ணிக்கையில் 10 வீதம் என்பதாகவே 10 வீதம் தீர்மானிக்கப்படுகின்றது.

எமது உதாரணத்தின் படி, தொகுதி அடிப்படையில் 12 பேர். விகிதாசார முறையில் 08 பேர். மொத்தம் 20 பேர். இவ்வெண்ணிக்கையில் 10 வீதம் பெண்களாக இருக்க வேண்டும். இதன்படி 12 தொகுதிகள் உள்ள உள்ளூராட்சி சபையொன்றுக்கு 2 பெண்கள் சகல கட்சிகளிலிருந்தும் போட்டியிட வேண்டும். விகிதாசாரப் பட்டியலில் 50 வீத பெண் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்க வேண்டும். விகிதாசாரப் பட்டியல் தயாரிக்கப்படுகின்ற போது அப்பட்டியலுக்கு தேவையான உறுப்பினர்களை விட 3 பேரை அதிகமாக கொண்டே அது தயாரிக்கப்படுகின்றது.

இதன் பிரகாம், 12 தொகுதிகள் உள்ள பிரதேச சபைக்கு விகிதாசார உறுப்பினர்கள் 08 பேருடன் இன்னும் 3 பேரை சேர்த்து பட்டியலை தயாரிக்க வேண்டும். எனவே இப்பதினொரு பேர்களுக்கான 50 வீதம் 5.5 ஆகும். தசம எண்ணை கணக்கில் கொள்ளாமல் முழு எண் மாத்திரமே கவனத்திற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அதன்படி, இதில் ஐவர் பெண்களாக இருக்க வேண்டும். இதன் அடிப்படையில் 12 தொகுதிகளைக் கொண்ட சபையில் போட்டியிடுவதற்கு 2 பெண்களும் விகிதாசாரப் பட்டியலில் 5 பெண்களுமாக மொத்தம் 7 பெண்கள் பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும்.

- **வேட்புமனுப் பட்டியலை தயாரிப்பது போன்று உறுப்பினர்களை தெரிவுசெய்து கொள்வதும் ஓரளவு சிக்கலான விடயமல்லவா? 20 வட்டாரங்களை (தொகுதிகளை ) கொண்ட பிரதேச சபைக்கு 20 உறுப்பினர்கள் எப்படி தெரிவுசெய்யப்படுகிறார்கள்?**

வாக்களிப்பின் பின்னர் தேர்தல் வட்டாரத்தில் வைத்தே வாக்குகள் எண்ணப்படும். ஒரு வட்டாரத்தில் 1, 2 அல்லது கூடிய பட்சம் 5 வாக்குச் சாவடிகள் காணப்படலாம். எனினும் ஓரிடத்திலேயே வாக்கெண்ணும் பணிகள் நடைபெறும். 12 வட்டாரங்கள் எனில் 12 வாக்கெண்ணும் நிலையங்கள் அங்கு காணப்படும். உதாரணமாக ஒரு வட்டாரத்தில் 2000 வாக்குகள் காணப்படுமாக இருந்தால் அந்தந்தக் கட்சிகளின் ஒரு உறுப்பினர் 500 வாக்குகள், மற்றுமொருவர் 495 வாக்குகள், மற்றுமொருவர் 450 என்ற வகையில் வாக்குகளை பெற்றிருப்பார்கள். இதில் கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ள கட்சி தெரிவு செய்யப்பட்டு, அதில் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர் வெற்றிபெறுவார். அவருக்கு எதிராக 1500 வாக்குகள் அளிக்கப்பட்டாலும் சாதாரண பெரும்பான்மையை பெற்றவர் இங்கு தெரிவு செய்யப்படுகிறார். இதன்படி, 12 வட்டாரங்களிலும் யார் வெற்றியாளர்கள் என்பது வாக்கெண்ணப்பட்டு முடிந்ததும் தெரிந்துகொள்ளலாம்.

- **பெண்கள் பிரதிநிதித்துவம் 25 வீதம் காணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் எப்படி உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவுசெய்யப்படுகிறார்கள்?**

12 வட்டாரங்களில் 20 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய பிரதேச சபைக்கு 25 வீதம் பெண்கள் என்ற அடிப்படையில் பார்த்தால் அங்கு 5 பெண்கள் நியமிக்கப்பட வேண்டும். 12 வட்டாரங்கள் உள்ள ஒரு உள்ளூராட்சி சபைக்கு 2 வட்டாரங்களில் பெண் அபேட்சகர்கள் காணப்பட வேண்டும். அவ்விரண்டு வட்டாரங்களும் வெற்றிபெறுமாக இருந்தால் அப்பெண்கள் உள்ளூராட்சி சபைக்குத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

12 வட்டாரங்கள் உள்ள ஒரு சபைக்கு 5 பெண்கள் இருக்க வேண்டும் என்பதுடன், அதில் 2 வட்டாரங்களை பெண்கள் வெற்றிகொள்வார்கள் என்றால் இன்னும் 3 பெண்கள் விகிதாசார முறையில் தெரிவுசெய்யப்பட வேண்டும். எந்தவொரு வட்டாரத்திலும் பெண்கள் வெற்றி பெறவில்லை என்றால் விகிதாசார முறையில் 5 பெண்கள் நியமிக்கப்பட வேண்டும். ஏதாவதொரு கட்சி வட்டாரங்களை வெற்றி கொண்டவர்களை நியமித்து முடிந்ததும் விகிதாசார முறையில் உறுப்பினர்களை தெரிவுசெய்யும் விடயம் மாத்திரம் எஞ்சியிருந்தால் அதில் பெண் களையே நியமிக்க வேண்டியுள்ளது.

எனினும் இங்கு ஒரு அரசியல் கட்சி பெற்றுள்ள மொத்த வாக்கெண்ணிக்கையில் 20 வீதத்திற்கு குறைவான வாக்குகளை பதிவுசெய்திருந்தாலோ அல்லது 3 உறுப்பினர்களை விட குறைவானவர்களை பெற்றிருந்தாலோ அங்கு பெண் பிரதிநிதித்துவம் கட்டாயமில்லை. எனினும் 9 உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்ட கட்சி 3 பெண்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

- **இத்தேர்தலில் காணப்படுகின்ற அனுகூலங்கள் என்ன?**

இத்தேர்தலின் மூலம் தொகுதிக்கு பொறுப்புச் சொல்லக்கூடிய உறுப்பினர் ஒருவர் கிடைப்பார். கடந்த காலத்தை போன்று முழு உள்ளூராட்சி மன்றப் பிரதேசத்திலும் அலைந்து திரிந்து வாக்குச் சேகரிக்க முடியாது. ஒரு அபேட்சகர் பிரதிநிதித்துவம் செய்யும் வட்டாரத்திலுள்ள கிராம சேவகர் பிரிவு ஒன்று அல்லது இரண்டிற்குள் சேவையாற்றாவிட்டால் அடுத்த தடவை மக்கள் அவரை நிராகரிப்பர். அத்துடன் அபேட்சகர் தொகுதி அமைப்பாளருடனும் இதுபோன்றதொரு தொடர்பில் இருக்க வேண்டும். தொகுதி அமைப்பாளர் அவரது பெயரை வேட்புமனுப் பட்டியலில் சேர்க்காது போனால் அவருக்கு சிக்கலாக அமையும்.

இதுபோன்று முதற் தடவையாக 25 வீத பெண்கள் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியதொரு விடயமாகும். பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கின்ற போது ஊழல்களை குறைத்து உள்ளூராட்சி மன்றப் பிரதேசத்தில் சுகாதாரம், கல்வி, சூழல் அலங்காரம் போன்ற விடயங்களை மேம்படுத்தலாம். ஆண்களை விட பெண்கள் சுறுசுறுப்பு உற்சாகமுடையவர்களாக இருப்பதனால் விரைவில் நாட்டை அபிவிருத்தி செய்ய முடிகிறது. பெயரளவில் பெண்களாக இருப்பவர்கள் உறுப்பினர்களானால் இவையொன்றும் நடைபெறாது போகும். அத்துடன் வாக்கெண்ணும் நடவடிக்கை வட்டாரத்திலேயே இடம்பெறுவது மற்றுமொரு சிறப்பம்சமாக காணப்படுகின்றது.

- **வாக்களித்தல் என்பது மனிதனின் உரிமை. அவ்வுரிமைக்காக வேண்டி மக்கள் முன்வரா வேண்டுமல்லவா?**

மக்கள் அரசியல் குறித்து அதிருப்தியில் உள்ளார்கள். அதன் அடிப்படையில் நீங்கள் வாக்களிக்காமல் இருந்தால் நீங்கள் எதிர்பார்க்காத தகைமையற்ற நபர் உங்களது வட்டாரத்தில் உறுப்பினராக தெரிவுசெய்யப்படலாம்.

## எழுவாய், பயனிலை



அபூ ஷாமில்

## வளர்த்த கடா மார்பில் பாயும் வரை...

நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிவாசல்களும் ஏதோ ஒரு சக்தியின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. சில இடங்களில் அது அரசியல்வாதிகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில இடங்களில் வியாபாரிகளினால் ஆளப்படுகிறது. இன்னும் சில இடங்களில் குடு வியாபாரிகளினால் ஆளப்படுகிறது. சில இடங்கள் மதம் பிடித்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பல இடங்கள் பொருத்தமே இல்லாத வீணர்களால் ஆளப்பட்டு வருகின்றன.

மத்திய கொழும்பு பிரதேசத்திலுள்ள பள்ளிவாசலொன்று குடு வியாபாரிகளினால் ஆளப்பட்டு வருவதாக ஓர் அன்பர் என்னிடம் தகவல் தெரிவித்தார். இந்தப் பள்ளிவாசலைச் சூழ சிறியவர்கள், பெரியவர்கள், பெண்கள் என்ற பாகுபாடின்றி அனைத்துத் தரப்புமே குடு விற்பனையில் ஈடுபட்டிருக்கின்றன. பள்ளிவாசலைச் சூழவும் குடு வியாபாரம் களைகட்டியிருக்கிறது. பொலிசாரைப் போலவே பள்ளிவாசலும் இவர்களுக்கு எதிராக எதுவுமே செய்ய முடிவதில்லை.

இதற்கான முக்கியமான காரணம் பள்ளிவாசலின் வருமானத்துக்கு இவர்களில் தங்கியிருப்பது தான் என அந்த அன்பர் என்னிடம் விபரித்தார். பள்ளிவாசலின் இமாம், முஅத்தினுக்கான சம்பளத்துக்கெல்லாம் பள்ளிவாசல் இவர்களைத் தான் எதிர்பார்த்திருக்கிறது. இதனால் இவர்களுடைய ஈனச் செயலுக்கு எதிராக ஒரு குத்பாவைக் கூட பள்ளிவாசலால் செய்ய முடியாமல் இருக்கிறது. இவ்வளவு தூரம் அந்தப் பள்ளிவாசல் குடு வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்த பள்ளிவாசலுடைய நிலை மட்டுமல்ல. பெரும்பாலான பள்ளிவால்கள் ஏதொவொரு பெரும்புள்ளியின் அடிவருடிகளாகத் தான் செயற்படுகின்றன. வட்டிக்கு வியாபாரம் செய்யும் முதலாளிமார்களின் கைகளில் எத்தனையோ பள்ளிவாசல்கள் இருக்கின்றன. இவர்களின் வியாபார மேசடிகள் சம்பந்தமாக இந்தப் பள்ளிவாசல்கள் பேச முடியாது. ஹஜ், உம்ரா வியாபாரிகள், வழிகாட்டிகளின் ஆக்கிரமிப்பில் பல பள்ளிவாசல்கள் இருக்கின்றன. ஹஜ்ஜையும் உம்ராவையும் ப்ரமோட் பண்ணுவதைத் தவிர இதில் நடக்கும் அநியாயங்களுக்கு எதிராக இந்தப் பள்ளிவாசல்கள் எதுவுமே செய்ய முடியாது.

இதுபோலத் தான் சில பள்ளிவாசல்கள் அரசியல்வாதிகளின் கைப்பொம்மையாகச் செயற்படுகின்றன. பள்ளிவாசல் ட்ரஸ்டி என்பதை ஒரு அந்தஸ்தாக நினைத்துக் கொண்டு சில ட்ரஸ்டிமார் தமது அரசியலுக்கூடாக பள்ளிவாசலையும் ஜமாஅத்தார்களையும் ஆட்டிப்படைக்க நினைக்கிறார்கள்.


இதற்குக் காரணம் என்ன? இந்த ஆக்கிரமிப்புக்களில் இருந்து பள்ளிவாசல்களை விடுவிப்பதற்கு சமூகம் முன்வரக் கூடாதா ? உண்மையில் பள்ளிவாசல்கள் தமது வருமானத்துக்கு ஒரு வழியாகவே இப்படியானவர்களிடம் தஞ்சமடைகிறார்கள். பள்ளிவாசலை நடத்திச் செல்வதற்கான வருமானத்தைப் பெறுவதற்கான நிலையான திட்டமொன்று பெரும்பாலான பள்ளிவாசல் நிர்வாகங்களிடம் காணக் கிடைப்பதில்லை. இதனால் அங்கத்தவர்களில் பணம்படைத்தவர்களில் அவர்கள் தங்கியிருக்க நேரிடுகிறது. இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்த அவர்கள் பள்ளிவாசலில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

இது உண்மையில் நிர்வாகச் சீர்கேடேயன்றி வேறில்லை. பள்ளிவாசல்களுடைய பிரதான அம்சம் அங்கத்தவர்கள். அவர்களைப் பயிற்றுவிப்பதில் பள்ளிவாசல்கள் கவனம் செலுத்துவதில்லை. அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு பள்ளிவாசல்கள் முன்வருவதில்லை. இந்தவகையில் அங்கத்தவர்களை இந்த நிலையில் விட்டு வைத்ததற்கான பிரதான காரணி பள்ளிநிர்வாகம் தான். அவர்கள் உருவாக்கி வைத்திருக்கின்ற அங்கத்தவர்களின் இலட்சணம் தான் பள்ளிவாசல்களை இந்த நிலைமைக்கு மாற்றியிருக்கிறது.

பள்ளிவாசல்கள் தமது அங்கத்தவர்களின் உருவாக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும். தமது பள்ளிவாசலின் அங்கத்தவர்களை நல்லடியார்களாக வார்த்தெடுக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் தாமே வளர்த்த கடா தமது மார்பில் பாய்வதை தடுக்க முடியாமல் போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைல் நதி குறித்து சூடான்-எகிப்து-எதியோப்பிய என்பவற்றுக்கிடையில் கடும் பிணக்கு



## சர்வதேசப் பார்வை

நைல் நதியின் நீர் குறித்து எரிட்ரியா, சூடான், எதியோப்பியா, எகிப்து ஆகியவற்றுக்கிடையில் பாரிய கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. நைல் நதி நீரைப் பயன்படுத்துவது குறித்து இந்நான்கு நாடுகளுக்கு மத்தியிலும் எழுந்துள்ள கருத்து வேற்றுமைகள் போராக வெடிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

ஏற்கனவே எரிட்ரியா, சூடான் எல்லைகளில் எகிப்திய படைகள் குவிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய அறபு அமீரகத்தின் உதவியோடு எரிட்ரியாவின் சானா துறைமுகத்தில் குவிக்கப்பட்டுள்ள எகிப்திய படை, நைல் நதிக்குக் குறுக்காக எதியோப்பியா அமைத்து வரும் அணைக்கட்டைத் தாக்குதவற்குத் திட்டமிட்டுள்ளது. இதேவேளை, எரிட்ரியாவில் எகிப்து அமைத்து வரும் இராணுவ முகாமை எரிட்ரியா கண்டித்துள்ளது.

இது குறித்து அமீரகம், எகிப்து மற்றும் எரிட்ரியா அரசாங்கத்திற்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இதற்கிடையில் நைல் நதி நீரில் உரிமை கொண்டாடும் சூடான், தனக்குள்ள சட்ட உரிமையை மீளவும் வலியுறுத்தியுள்ளது. சம்பந்தப்பட்ட நாடுகள் சூடானைப் புறக்கணிப்பது பாரிய விளைவுகளை உருவாக்கும் என சூடான் ஜனாதிபதி உமர் பஷீர் எச்சரித்துள்ளார்.

இதற்கமைய எகிப்து மற்றும் எதியோப்பியாவின் நீர்ப்பாசன அமைச்சர்கள் கார்டூமில் சூடான் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

## கட்டார் - அமீரக முரண்பாடு வலுக்கின்றது

கடந்த ஆண்டு கட்டாரைத் தனிமைப்படுத்திய வலைகுடா அறபு நாடுகள் தற்போது கட்டாருடனான உறவுகளை மென்மேலும் காயப்படுத்தி வருவதாக அந்நாடு கவலை தெரிவித்துள்ளது. கட்டாருக்குச் சொந்தமான வான் பரப்பில் எமிரேட்ஸ் இராணுவ விமானங்கள் பறக்க விடப்பட்டதன் மூலம் அமீரகம் வான் பரப்பு தொடர்பான சட்டங்களை மீறியுள்ளதாக கட்டார் தெரிவித்துள்ளது.

அமீரக விமானங்களுக்கு கட்டார் அரச விமானங்கள் இடையூறு விளைவித்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் கட்டார் மறுத்துள்ளது. பஹ்ரைன், அமீரகம், சவூதி என்பன தொடர்ந்தும் கட்டாருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றது.

இதற்கிடையில் பயங்கரவாதத்திற்கு எதிராக கட்டார் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பாராட்டியுள்ளார். கட்டார் பயங்கரவாதத்திற்கு எதிராக செயல்பட்டு வருகின்றது என்பதே அமெரிக்காவினதும் அறபு நாடுகளினதும் பிரதான குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சவூதி அறேபியா தடுப்புக் கைதிகளை இடம் மாற்றுகின்றது



சமீபத்தில் சவூதி அறேபியாவில் கைதுசெய்யப்பட்ட இளவரசர்கள் ரிட்ச் கோல்டன் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தற்போது ரியாதுக்கு தெற்காகவுள்ள அல் ஹெயா சிறைக்கு அவர்களை மாற்றியுள்ளதாக அல் அறபி அல் ஜதீத் பத்திரீகை தெரிவித்துள்ளது. ரிட்ச் கோல்டன் என்பது பிரபலமான ஹோட்டல் ஒன்றாகும். அதன் சில பகுதிகள் தடுப்புக் காவல் போன்று பயன்படுத்தப்பட்டு வந்தது.

அங்கிருந்து சுமார் 60 தடுப்புக் கைதிகள் அந்நாட்டின் அதிபாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கும் அல் ஹெயா சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர். மாற்றப்பட்டுள்ள கைதிகளுள் அல் வலீத் பின் தலால், துருக்கி பின் அப்துல்லாஹ் உள்ளிட்டு அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் பலரும் அடங்குவர்.

தம்மை விடுவிப்பதாயின் மிகப் பெருந்தொகை பணம் செலுத்த மறுத்தவர்களே இவ்வாறு தடுப்புக் காவலிலிருந்து நேரடிச் சிறைக்கு மாற்றப்படுகின்றனர். 11 இளவரசர்கள் இதில் உள்ளடங்குவதாக அல் ஜதீத் பத்திரிகை கூறுகின்றது. கடந்த இரு மாதங்களாக ரிட்ச் கால்டன் ஹோட்டலைச் சூழ பெருந்தொகை இராணுவம் அரச ரோயல் பாதுகாப்பு அதிகாரிகள் நிறுத்தப்பட்டிருந்தனர். தற்போது அவர்கள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதோடு, கைதிகளும் இடம் மாற்றப்பட்டுள்ளனர்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் கடந்த வாரத்தின் இறுதியில் 200 இளவரசர்கள் இவ்வாறு கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர்களிடமிருந்து 100 பில்லியன் அமெரிக்க டொலர்களை சவூதி அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

# அமெரிக்காவின் திட்டத்தைத் தடுக்கும் வகையில் துருக்கிய படை



சிரியாவின் எல்லைப் புறத்தில் அமெரிக்க இராணுவ முகாம் அமைக்கும் திட்டத்திற்கு எதிராக அங்காரா தனது சொந்த இராணுவ முகாமை அமைத்து வருகின்றது. துருக்கியின் அணியில் டமஸ்கஸ், மொஸ்கோ என்பனவும் இணைந்துள்ளன. மூன்று நாடுகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து சிரியாவில் வெளிநாட்டுத் தலையீடுகளை, குறிப்பாக இஸ்ரேல் ஆதரவான இராணுவத் தலையீடுகளை இல்லாதொழிக்கும் நோக்கில் இப்புதிய அணி இணைந்து இராணுவ மூலோபாயமொன்றை முன்னெடுத்து வருகின்றது.

சிரியாவிலுள்ள குர்திஷ் மக்கள் பாதுகாப்புப் படைப்பிரிவு நிலைகொண்டுள்ள அப்ரின் நகருக்கு எதிராக வடக்கு சிரியாவில் துருக்கிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என துருக்கிய ஜனாதிபதி அர்துகான் தெரிவித்துள்ளார். எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்தி வரும் அங்காரா, அதேவேளை சிரியாவில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. குறிப்பாக, சிரியப் பிரச்சினையில் மூக்கை நுழைக்க முனையும் அமெரிக்காவின் செல்வாக்கைத் தடுப்பதற்கு ரஷ்யாவும் சிரியாவும் இணைந்து செயல்படுகின்றன.

# அஹத் தடுப்புக் காவலை இஸ்ரேல் மேலும் நீடித்துள்ளது



மேற்குக்கரையைச் சேர்ந்த 16 வயதான பலஸ்தீனின் சமூக செயற்பாட்டாளர் அஹத் அல் தமீமியின் தடுப்புக் காவலை 48 மணித்தி யாலங்களுக்கு மேலும் நீடித்துள்ளதாக இஸ் ரேல் அறிவித்துள்ளது. ஏற்கனவே இவ்வாறு நான்கு முறை தடுப்புக் காவல் நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் இராணுவத்தோடு தர்க்கத்தில் ஈடுபட்டார் என்று கடந்த டிசம்பர் மாதம் அஹத் கைதுசெய்யப்பட்டார். இராணுவ நீதி மன்றத்தில் விசாரிக்கப்படாமல் தடுப்புக் காவல் நீடிக்கப்படுவது பாரிய மனித உரிமை மீறல் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. சிவிலியன்களை இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கும் ஒரே நாடு இஸ்ரேல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமீமியின் நீதிமன்ற விசாரணையில் வெளிநாட்டு ராஜதந்திரிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என்போரும் கடந்த மாதம் பங்குகொண்டிருந்தனர். அஹதின் தந்தை தமீம் பஸ்ஸாம் தனது மகளுக்கு ஆறு தலளித்துள்ளதோடு, உறுதியாக இருக்குமாறும் ஊக்கமளித்துள்ளார். டிசம்பர் 19 இல் ராமல்லாஹ் கிராமமொன்றைச் சுற்றிவளைத்தபோது இஸ்ரேல் இராணுவம் அஹத் தமீமியைக் கைதுசெய்தது.

## அல்ஜீரியாவில் வைத்தியர்கள் தொடர்ந்தும் பணிப் பகிஷ்கரிப்பு

அல்ஜீரியாவில் தொடர்ந்தும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் மறியல் போராட்டங்களும் நிகழ்ந்து வருகின்றன. அரசாங்க ஊழியர்களில் பல தரப்பும் மாறி மாறி மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தத்தின் பட்டியலில் இப்போது அந்நாட்டின் வைத்தியர்களும் இணைந்துள்ளனர். சில வாரங்களாக அரச மருத்துவர்கள் தலைநகர் அல்ஜீயஸில் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், இராணுவம் இவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து வருவது பாரிய விமர்சனங்களை எழுப்பியுள்ளது.

வடஆபிரிக்க முஸ்லிம் நாடாகிய அல்ஜீரியாவில் பாராளுமன்ற ஜனநாயகம் நடைமுறையில் இருந்து வருகின்றபோதும், ஆட்சியாளர்கள் சர்வதிகாரிகள் என்ற குற்றச்சாட்டு பலமாக உள்ளது. ஜனாதிபதி அப்துல் அஸீஸ் பூதப்லிகா ஐந்தாவது முறையாகவும் ஜனாதிபதிப் பதவி வகிப்பது ஜனநாயக விரோத செயல் என விமர்சிக்கப்படுகின்றது. நாட்டின் பொருளாதாரம் மற்றம் சேவைத் துறை என்பன பாரிய பின்னடைவை எதிர்கொண்டுள்ளன. குறிப்பாக வேலையற்றோர் வீதம் அதிகரித்துள்ளதோடு வாழ்க்கைச் செலவீனமும் உயர்ந்துள்ளதாக அல்ஜீரியாவின் எதிர்க்கட்சியினர் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர்.

# கடத்தப்பட்ட சிறுமிகளைக் காண்பிக்கும் போக்கோ ஹராமின் வீடியோ ஒளிநாடா



நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்ட சிறுமிகளைக் காண்பிக்கும் வீடியோ ஒளிநாடா ஒன்றை போக்கோ ஹராம் வெளியிட்டுள்ளது.

இப்பயங்கரவாத இயக்கம் நைஜீரியாவில் 2014 ஏப்ரலில் இரண்டாம் நிலை பாடசாலை மாணவிகள் 276 பேரை கடத்திச் சென்றிருந்தது. அவர்களுள் 57 பேர் கடத்தி செல்லப்பட்டு சில தினங்களிலேயே தப்பி வந்தனர். சில மாணவிகள் விடுவிக்கப்பட்டனர். எனினும், 100 பேர் தொடர்ந்தும் போக்கோ ஹராம் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒளிநாடாவில் தோன்றும் சிறுமிகள் தமது பெற்றோரைப் பார்த்து உரையாடுவது போன்று தோன்றுகிறது. ''நாங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் அழுகின்றீர்கள். ஆனால், அல்லாஹ்வின் உதவியால் நாம் ஒருபோதும் வீடு திரும்ப மாட்டோம்'' என சிறுமிகளில் ஒருவர் கூறுகின்றார்.

அவளது கருத்தில், சிறுமிகள் அனைவரும் போக்கோ ஹராமின் கட்டுப்பாட்டில் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் அவர்களது இயக்கத்தில் இணைந்துள்ளதாகவும் திருமணம் செய்துள்ளதாகவும் தெரித்துள்ளார். குழந்தைகளை வைத்திருக்கும் சிறுமிகளின் காட்சிகளும் ஒளிநாடாவில் பதியப்பட்டுள்ளன. ஒளிநாடாவில் தோன்றும் அனைவரும் போல் வடக்கு நைஜீரியாவில் கடத்தப்பட்ட சிறுமிகள்தானா என்பதை உறுதிசெய்ய முடியவில்லை என்பதை நைஜீரியாவுக்கான அல் ஜஸீரா செய்தியாளர் அஹ்மத் இத்ரீஸ் குறிப்பிடுகின்றார்.

கடும் தாக்குதலுக்கு உள்ளான இப்பயங்கரவாத இயக்கம் இன்னும் வலுவாக உள்ளது என்பதற்கு ஓர் ஆதாரமாகவே இவ்வொளிநாடாவை வெளியிட்டுள்ளனது என்று அஹ்மத் இத்ரீஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• றவூப் ஸெய்ன்

ஜனாதிபதித் தேர்தலின் பிரச்சாரத்தின் போது ட்ரம்ப் பதவிக்கு வருவாரா என்ற சந்தேகமே அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நிலவி வந்தது. பெரும்பாலும் அவர் ஜனாதிபதியாகத் தெரிவாக மாட்டார் என்றே நம்பப்பட்டது.

தனது கணவரின் தேர்தல் வெற்றியினால் அதிர்ச்சியடைந்த ட்ரம்பின் மனைவி மெலானியா கண்ணீர் சிந்தி அழுததாகவும், அன்றிலிருந்து ட்ரம்பும் அவரும் வெவ்வேறு படுக்கை அறைகளில் உறங்கி வருவதாகவும் கூறப்படுகின்றது. ட்ரம்ப் இன்னும் மன ஆரோக்கியத்துடன்தான் இருக்கிறாரா என்ற பெயரில் ஐரோப்பிய பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகள் வெளிவரத் துவங்கியுள்ளன.

உலக அதிகாரத்தின் உச்சத்தில் உட்கார்ந்திருக்கும் ஒற்றைப் பூதம் டொனால்ட் ட்ரம்ப். அமெரிக்காவை ஆளும் உறுதியான மனோ திடத்துடனும் மனநலத்தோடும்தான் அவர் இருக்கிறாரா என்ற சர்ச்சையோடு 2018 ஆம் ஆண்டு அமெரிக்கர்களுக்கு முன்னால் தலை நீட்டுகின்றது.

மைகல் வொல்ப், இந்நூலில் குறிப்பிட்டுள்ள சில கருத்துக்கள் அமெரிக்கர்களுக்கும் அமெரிக்கர்களோடு பக்தி பூர்வமான உறவை வைத்திருக்கும் ஐரோப்பியர்களுக்கும் அதிர்ச்சியையும் திகிலையும் ஏற்படுத்தியுள்ளது.

ட்ரம்பின் மனைவி மெலானியா தனது கணவர் தேர்தலில் வெற்றி பெற்ற தினத்தில் கண்ணீர் சிந்தி அழுததாகவும் அதனைத் தொடர்ந்து அவரும் ட்ரம்பும் வெவ்வேறு படுக்கை அறைகளில் உறங்கி வருவதாகவும், ட்ரம்பின் மகள் இவன்காதான் அமெரிக்காவின் முதலாவது பெண் ஜனாதிபதியாக வருவதற்குத் திட்டமிட்டிருந்தார் எனவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டொனி பிளேயருக்கும் ட்ரம்புக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருந்தது என்றும், ட்ரம்ப் வெற்றி பெற்றால் மத்திய கிழக்கின் தூதுவராக தன்னை நியமிக்குமாறு பிளேயர் கூறியிருந்ததாகவும் The Times of London பத்திரிகையை வொல்ப் மேற்கோள் காட்டி யுள்ளார்.

ட்ரம்பின் தனிப்பட்ட வாழ்வு, 71 வயதைத் தாண்டிய அவரது மனநலம் மனவெழுச்சிகளை முகாமை செய்வதில் அவருக்குள்ள

மான உதவியாளரால் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது என்பது அதன் அர்த்தகம்.)

பயர் என்ட் பியூரி எனும் நூலின் பிரதிபலிப்புக்களே இவை. ஆயினும், நூல் வெளிவருவதற்கு முன்பதாகவே ட்ரம்பைப் பற்றிய இவ்வாறான கருத்துக்கள் ஐரோப்பியர்களிடையே நிலவி வந்தது. பிரான்ஸிலிருந்து வெளிவரும் Le monde இந்நூலை 'தாக்கமுள்ளது' என வர்ணிக்கின்றது.


மேற்போந்த பத்திரிகைகள் தத்தமது நாடுகளில் மிகப் பிரபல்யம் வாய்ந்தவை. பெரும் பெரும் வணிகப் புள்ளிகள், அரசியல்வாதிகள் மற்றும் ராஜதந்திரிகளால் படிக்கப்படுகின்றவை. ஜேர்மன், பிரான்ஸ், பிரிட்டன் மூன்றும் அமெரிக்காவின் நீண்டநாள் நட்பு நாடுகள். ஆட்சியிலிருப்பது பழமைவாதக் கட்சிகள். இந்நிலையில் ஆசிரியர் தலைப்புக்களும் முன்பக்க பிரதான செய்திகளும் ட்ரம்பின் மனநலத்தை கேள்விக் குறியாக்குவது சாதாரணமானதல்ல. பொது அபிப்பிராயத்தை மாற்றும் தன்மை வாய்ந்தது.

ஜேர்மனின் பல்கலைக்கழக மொன்றில் அத்லாந்திக் உறவுகள் துறையில் பேராசிரியராகப் பணியாற்றும் ஸ்டீபன் பீர் லிங்க் என்ப

# நெருப்பு, முரட்டுக் கோபம் மற்றும் மனநோய்

## டொனால்ட் ட்ரம்பின் உள ஆரோக்கியம் பற்றிய விவாதம் தொடர்கிறது!

இத்தனைக்கும் காரணமாக இருப்பர் மைகல் வொல்ப். அவர் எழுதியுள்ள நெருப்பு மற்றும் முரட்டுக் கோபம் (Fire and Fury) எனும் சர்ச்சைக்குரிய நூல். ஜனவரி 04 நள்ளிரவில் வெளியிடப்பட்டது. புத்தகம் முன்கூட்டியே வெளியிடப்படுவதை அறிந்த அமெரிக்கர்கள், புத்தக விற்பனை நிலையங்களுக்கு முன்னால் அணியணியாகத் திரண்டிருந்தனர். விற்பனை ஆரம்பமானதும் முண்டியடித்துக் கொண்டு அதனை வாங்கிச் சென்றனர்.




ட்ரம்பின் அரசாங்கத்திற்கும் ட்ரம்பிற்கும் அவரது குடும்பத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனால் புத்தகத்தைத் தடைசெய்யும் முயற்சியில் அவரது சட்டத் தரணிகள் தீவிரமாக இறங்கியிருந்த நிலையில், புத்தகம் முற்கூட்டியே வெளியானது. ட்ரம்பின் ஜனநாயகத்திற்கு மட்டுமன்றி, அமெரிக்க ஜனநாயகத்திற்கும் இந்நூல் பெரிய அறைகூவலாகும். கருத்துச் சுதந்திரம் குறித்த ஒரு விஷப் பரீட்சையை இந்நூல் உருவாக்கியுள்ளது.

ஐரோப்பா முழுவதும் ட்ரம்பின் மனநலம் குறித்த விவாதங்களை இந்நூல் எழுப்பியுள்ளமை அமெரிக்கர்களுக்கு பெரும் அவமானமாகும். ட்ரம்ப் பதவியேற்றதிலிருந்து ஐரோப்பிய தலைவர்கள் உள்ளிட்டு அமெரிக்க அரசியல்வாதி ஒவ்வொருவருக்கும் இருந்த சந்தேக மொன்றை இந்நூல் விவாதத்திற்குக் கொண்டு வந்துள்ளது. அதனது அரசியல் தாக்கமும் வலுவாக இருக்கும் என்று நம்பபடுகின்றது.

ட்ரம்பின் பிரதிமையை (Image) உடைத்துத் தகர்க்கும் இந்நூலுக்கு பெரும்பாலான தகவல்களை ட்ரம்பின் முன்னாள் தலைமை தந்திரோபாய ஆலோசகர் ஸ்டிவ் பெனன் வழங்கியுள்ளார்.

பெனன், ட்ரம்பிற்கு நெருக்கமாக இருந்தவர். அவரது ஒவ்வொரு அசைவையும் உன்னிப்பாகக் கவனித்தவர். பெனன் உள்ளிட்டு ட்ரம்புக்கு நெருக்கமான 200 பேரை செவ்வி கண்டு இந்நூலை எழுதியுள்ளார் மைகல் வொல்ப். அரச இயந்திரத்தின் அச்சுறுத்தல்களைத் தாண்டி நூல் பிரதிகள் மிக வேகமாக விற்பனையாகின்றன.

ட்ரம்பின் சட்டத்தரணிகள் பெனனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் எச்சரிக்கை அறிவித்தலொன்றை வழங்கியுள்ளனர். வெள்ளை மாளிகையின் அந்தரங்கமான ரகசியங்களை பெனன் வெளிப்படுத்தியுள்ளமை ஒரு தேசத் துரோக குற்றம் என்று ட்ரம்பின் சட்டத்தரணிகள் எச்சரிக்கின்ற போதும், இந்நூலிலுள்ள அரசியல், ராஜதந்திர செய்திகளுக்கு அப்பால், ட்ரம்ப் குறித்த விம்பங்களும் பிரதிமைகளும் அவரது மனநலம் பற்றிய வர்ணனைகளும் மிகுந்த சர்ச்சையைக் கிளறியுள்ளன.

நெருக்கடிகள் இவற்றையெல்லாம் விவாதத்திற்கு உட்படுத்தும் இந்நூல், அவற்றின் முழு மொத்த விளைவாக அமெரிக்காவை வழிநடாத்தும் ஆற்றல் அவருக்கு உள்ளதா என்ற கேள்வியை மறைமுகமாக எழுப்புகின்றது.

ட்ரம்பின் மனநலம் மற்றும் பொருத்தப்பாடு குறித்து ஏற்கனவே அரசியல் தலைவர்களுக்கு மத்தியில் காணப்பட்ட சந்தேகங்களை நூல் உறுதிசெய்துள்ளது என்கிறார் ரிக் நோக் எனும் பத்தியாளர். அமெரிக்காவிலிருந்து வெளிவரும் The Washington Post எனும் பத்திரிகைக்கு அவர் எழுதியுள்ள கட்டுரையில் இந்நூல் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.

ட்ரம்ப் ஐரோப்பாவில் மிகவும் பிரபல்யமானவர் அல்ல. எனினும், ஜனாதிபதித் தேர்தலின் போது அவர் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்களும் ஆவேஷமான வார்த்தைகளும் அவரைப் பற்றிய சில விம்பங்களை ஐரோப்பாவில் உருவாக்கியிருந்தது.

ஜேர்மனியில் அதிகளவு விற்பனையாவதும் தேசிய பெருமை பெற்றதுமான Zeitung எனும் பத்திரிகை, தனது மனநலம் எனும் பகுதியில் Is Trump still sane? எனும் தலைப்பை வரைந்துள்ளது. 'ட்ரம்ப் இன்னும் மனநலத்தோடுதான் இருக்கிறாரா என்பதே இதன் அர்த்தம். இதேவேளை, பிரிட்டனிலிருந்து வெளிவரும் பிரபல்யமான The Times of London பத்திரிகையின் முன்பக்கத் தலைப்புச் செய்தி பின்வருமாறு வரையப்பட்டுள்ளது. Trump's mental health questioned by top aide (ட்ரம்பின் மனநலம், அவரது நெருக்க

வர் ட்ரம்ப் குறித்து வெளியிட்டுள்ள கருத்து அதிர்ச்சியளிக்கக் கூடியது. "இன்று உலக நாடுகளுக்கு தலைமை வகிப்பது அமெரிக்கா. அதன் தலைவராக இருப்பவர் ட்ரம்ப். உலகின் மிகப் பெரிய இராணுவக் கூட்டு நேட்டோ. அதற்குத் தலைமை வகிப்பவரும் அவரே. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒன்று அமெரிக்கா. வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தும் பலம் கொண்டவர் ட்ரம்ப். மிகப் பெரிய பொருளாதாரம் எனக் கருதப்படும் பிரிட்டன், ஜேர்மன், பிரான்ஸ் என்பவற்றின் முதன்மை நேச நாடு அமெரிக்கா. இவ்வாறிருக்கையில், தனது அதிகாரத்தையும் பொறுப்புக்களையும் சரியாக நிறைவேற்றும் நிலையில் ட்ரம்ப் உள்ளாரா? நேச நாடுகளுடன் அறிவார்ந்த நிலையிலும் உரையாடலில் ஈடுபடும் ஆற்றல் ட்ரம்பிற்கு உள்ளதா? இந்த சந்தேகத்தையும் ஐயத்தையும் பயர் என்ட் பியூரி எனும் நூல் வலுவாக உருவாக்கியுள்ளது.

ஏற்கனவே ஜேர்மனியின் தலைவர் அன்ஜலா மேர்கல், பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோன், பிரிட்டன் பிரதமர் மே போன்றோர் மறைமுகமாக ட்ரம்ப் அமெரிக்க நிறுவாகத்திற்குப் பொருத்தமற்றவர் என்ற கருத்தினைக் கொண்டுள்ளனர். பல்வேறு சந்தர்ப்பங்களில் அவற்றை மறைமுகமாக தெரிவித்தும் வந்துள்ளனர். அவர்களின் இக்கருத்தை மிகத் தூக்கலாகச் சொன்னவர் மேர்கல்.

இவற்றையெல்லாம் உண்மைப்படுத்தும் வகையிலேயே பயர் என்ட் பியூரி நூல் வெளிவந்துள்ளது. "ட்ரம்பை அவரது அமைச்சரவை பதவி விலக்குவதற்கு முன்பாக அவர் தானாகவே பதவி விலகிச் செல்ல வேண்டும் என்பதுதான் தனது எதிர்பார்ப்பு" என்கிறார் ஸ்டீபன் பேர்லின்.

இத்தனை சூடான விவாதங்களும் சர்ச்சைகளும் அதன் உச்சத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கையில், ட்ரம்ப் மீள மீள அனுப்பும் டுவிட் செய்தியில், "அமெரிக்க ஜனாதிபதியாக இருப்பதற்கு திடகாத்திரம் மட்டுமன்றி புத்திசாலித்தனமும் தேவை. நான் மிகவும் ஸ்திரமான மனநிலையோடு புத்திசாலியாகவே இருக்கிறேன்" என்று எழுதுகிறார்.

துக்ளக் அரசியல் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு இடம்மாறியுள்ளது போலவே தோன்றுகின்றது. ஜனநாயகம் இருட்டில் இறந்து கொண்டிருக்கிறது என்று வொஷிங்டன் போஸ்ட் சொல்வது போல், அமெரிக்காவிலேயே அது இறந்து கொண்டிருக்கிறது என்பதற்கு பயர் என்ட் பியூரி வலுவான ஆதாரமாய் எழுந்து நிற்கின்றது.

ஜனநாயகத்திற்கு இப்போது மனநலம் தேவையில்லை. வாழ்க ஜனநாயகம்.

# பொஸ்பரஸ் கரையினிலே...

## துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 25



### 2016 ஜூலைப் புரட்சி

அரசாங்க தொலைக்காட்சி நிலையத்தைக் கைப்பற்றிய சிறுதொகை இராணுவம், நாட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டதாக அறிவித்ததை அடுத்தே பதட்டம் ஏற்பட்டது. புரட்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட விமானங்களும் யுத்த தாங்கிகளும் மிகவும் குறைவாகும். மக்கள் வீதிக்கு இறங்கியதன் மூலம் புரட்சியில் ஈடுபட்ட இராணுவத்தின் உளவியலில் பாரிய அடி விழுந்தது. புரட்சி ஒருவாறாக முடிவுக்கு வந்தது.

1971 இல் நடந்த புரட்சி, இரத்தம் சிந்தா இராணுவப் புரட்சி எனவும், 1997 இல் நடைபெற்ற இராணுவப் புரட்சி பின்நவீனத்துவ இராணுவப் புரட்சி எனவும் அழைக்கப்படுகின்றது. காரணம், அரசாங்கங்களின் உள்ளக முரண்பாடு மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் நாட்டில் அமைதி குலைந்த போது இராணுவம் அச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, பிரதமர்களையும் ஜனாதிபதிகளையும் பதவி விலகுமாறு பயமுறுத்தியதன் மூலம் அதிகாரத்திற்கு வந்தது.

அந்த வகையில் 1971ல் துருக்கியில் பாரிய பொருளாதார நெருக் கடி நிலவியது. பணவீக்கம் உயர்ந்து வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்ததனால் மக்கள் கொந்தளிக்கத் தொடங்கினர். லீராவின் பெறுமதி கணிசமாக இறங்கியது. சிவில் சமூகத்திற்கு மத்தியில் அமைதியின்மையும் கொந்தளிப்பும் உருவானது.

இந்தச் சூழலில் நாட்டில் அமைதியை உருவாக்கப் போகின்றோம் என்ற கோஷத்தோடு இராணுவம் வீதிக்கு இறங்கியது. பிரதமர் தெமிரல் பதவி விலகினார். அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு காபந்து அரசாங்கம் உருவாக்கப்பட்டது. 1973 இல் கடற்படை தளபதியான பஹ்ரி குர்தூக் ஜனாதிபதியாக தன்னைப் பிரகடனம் செய்தார்.

1997 இல் துருக்கியின் பிரதமராக இருந்தவர் பேராசிரியர் நஜ்முதீன் அர்பகான். 1924 இல் கிலாபத் உத்தியோகபூர்வமாக ரத்துச் செய்யப்பட்ட பின்னர் துருக்கியின் நவீன வரலாற்றில் தோன்றிய முதல் இஸ்லாமியக் கட்சி அவருடையது.

ஆரம்பத்தில் துருக்கிய இராணுவம் அர்பகான் அதிகாரத்தைக் கையேற்றபோது துருக்கி இருந்த நிலைமைகளைக் கருத் திற் கொண்டு அர்பகானினால் எதனையும் செய்ய முடியாது என்று விட்டு விட்டது. பின்னர் அவரது அதிரடியான இஸ்லாமிய மாற்றங்களைக் கூர்ந்து கவனித்த இராணுவம் தொடர்ச்சியாக அவர் மீது பல அழுத்தங்களை ஏற்படுத்தியது.

துருக்கிய மாணவர்கள் மத்ரஸா கல்வி முறையில் இணையக் கூடாது என்பதற்காக இராணுவம் கட்டாயக் கல்வியை 8 ஆண்டுகளாக உயர்த்தியது. ஹிஜாப் தடைச் சட்டத்தையும் தொடர்ச்சியாக அமுல்நடத்தியது. இத்தகைய இராணுவ அழுத்தங்கள் அதிகரித்த நிலையில், அர்பகானின் கூட்டணி அரசாங்கம் கலைக்கப்பட்டது. 1998 இல் அவரது கட்சிக்கு ஐந்தாண்டு காலத் தடை விதிக்கப்பட்டதோடு, அர்பகானுக்கு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இம் முறையும் இராணுவம் நேரடியாக களத்தில் இறங்கவில்லை. இஸ்லாம் ஆதரவு அரசாங்கத்தைப் பதவி கவிழ்ப்பதற்கு மறைமுகமாகச் செயல்பட்டு, அதிகாரத்தைக் கைப்பற்றியது.

முழு இராணுவக் கட்டமைப்பும் 2016 ஜூலைப் புரட்சியில் ஈடுபடவில்லை என்பது முக்கியமான அம்சமாகும். அதே போன்று இதற்கு முந்திய எந்தப் புரட்சியிலும் சிவில் சமூகம் வீதிகளில் இறங்கி, இராணுவத்திற்கு எதிராகச் செயற்பட்டதில்லை. ஆட்சியாளர்களுக்கு ஆதரவான பெருந்தொகை இராணுவம் நாட்டில் இருந்த நிலையிலேயே புரட்சி நடைபெற்றுள்ளது என்பது மூன்றாவது முக்கிய விடயம்.

இராணுவத்தில் பலரை கடந்த காலங்களில் களையெடுத்தமைக்கான பிரதான காரணம் அவர்கள் அவ்வப்போது சதிப் புரட்சியில் ஈடுபடுவதுதான் என்று அர்தூகான் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். தற்போது தனது ஜனநாயக ஆட்சிக்கு எதிரானவர்கள் இனங்காணப்பட்டுள்ளதால் அவர்கள் தொடர்பான கடும் நடவடிக்கையை அர்தூகான் அரசு எடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டங்கள்

## கவனிக்க வேண்டிய சில விடயங்கள்

• ஹெட்டி ரம்ஸி

உள்ளூராட்சி மன்றங்கள் ஜனநாயகத்தின் அத்திவாரமாகவும் மாகாண சபைகளின் அரணாகவும் விளங்குகின்றன. இலங்கையின் அடிப்படைப் பிரச்சினைகளான இனப்பிரச்சினை, மதச் சார்பின்மை, பொருளாதார சீர்திருத்தம், கூட்டாட்சி முறை, தொழில்வளர்ச்சி, நிலையான ஆட்சி, வேலையில்லாத் திண்டாட்டம், பெண்கள் மேம்பாடு, மாகாண சபைகளின் உரிமைகள், மொழி என்பன போன்ற முக்கிய பிரச்சினைகளைப் பொறுத்தவரை மக்களின் பொதுவான அபிப்பிராயம் எப்படி இருக்கிறது என்பதை மத்திய அரசு கணிக்கவும் உதவப் போவதால் வாக்காளர் மிகக் கவனமாக வாக்களிப்பது யாருக்கு என்பதை தீர்மானிக்க வேண்டும். இத்தேர்தல் ஆட்சியை மாற்றப் போவதில்லை என்பது உண்மையாயினும் மக்களின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதால் இது முக்கியத்தும் பெறுகின்றது எனலாம்.

### வாக்காளர் கவனிக்க வேண்டியவை

பொதுசன அபிப்பிராயம் எப்படி இருக்கின்றது என்பதை தீர்மானித்து இறுதி பாராளுமன்றத் தேர்தல் வரையும் ஆட்சி எப்படி நடைபெற வேண்டும் என்பதை சகல மக்களுக்கும் காட்ட இத்தேர்தல் உதவப் போவதால் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்பதுடன், இதற்கு உதவியாக முன்கூட்டியே வாக்காளர்கள் தம் பிரதிநிதிகள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்வது நல்லது. எனவே வாக்காளர்கள், அபேட்சகர்கள் கிறிமினல் குற்றவாளிகளாக இருக்கக் கூடாது என்பதை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். தேசிய ஒருமைப்பாட்டுக்கு உலை வைக்கும் தீய சக்திகளை கொண்ட கட்சி அங்கத்தவராக இருக்கக் கூடாது என்பதையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கள்ளக் கடத்தல் செய்பவர்கள், மாபியா கும்பலுடன் தொடர்புடையவர்கள், ஒழுக்கம் கெட்ட சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களாகவோ அவர்களுடன் நெருக்கமான தொடர்பு உள்ளவர்களாகவோ இருக்கக் கூடாது. அடிப்படைக் கல்வி இல்லாதவராக இருந்தாலும் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ளும் வகையில் அறிவு உள்ளவராக இருக்க வேண்டும்.

இவ்விடயங்களை கருத்திற் கொண்டு தேர்தலின் போது வாக்காளர்கள் சில முக்கியமான சட்டங்களையும் அவற்றை மீறுவதால் வழங்கப்படும் தண்டனைகளையும் தெரிந்து வைத்துக் கொள்வது சிறந்தது. இவ்வாறான தேர்தல் சட்டங்கள் மீறப்படும் போது அவற்றை உரிய முறையில் காவல் துறையினரிடம் முறைப்பாடு செய்து ஜனநாயகபூர்வமானதொரு தேர்தல் நடைபெறுவதற்கு பொதுமக்களாகிய நாம் பங்களிப்பு செய்ய வேண்டும். வாக்காளர்கள் அறிய வேண்டிய தேர்தல் சட்டங்கள் குறித்து 2017 ஆம் ஆண்டு உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 262 ஆம் அத்தியாயத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

### வாக்காளர் அட்டை

தனது வாக்காளர் அட்டையை வேறெந்த ஆளுக்கும் வழங்குகின்ற ஆள் ஒவ்வொருவரும் அல்லது உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டை எதனையும் வேறு எந்த ஆளுக்கும் விற்பனை செய்கின்ற அல்லது விற்பனை செய்ய முன்வருகின்ற அல்லது வேறெந்த ஆளிடம் இருந்தும் உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டை எதனையும் கொள்வனவு செய்கின்ற அல்லது கொள்வனவு செய்ய முன்வருகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

அத்துடன், நீதவான் ஒருவரினால் சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் 500 ரூபாவிற்கு மேற்படாத தண்டப் பணத்திற்கு அல்லது 6 மாத காலத்திற்கு மேற்படாத சிறைத் தண்டணைக்கு அல்லது தண்டப் பணம், சிறைத் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும். அத்துடன் இத்தவறுகளை செய்வதற்கு உதவிபுரிகின்ற ஆள் ஒவ்வொருவரும் இத்தவறுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட அதே தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

### வாக்களிப்பின் போது

ஆள் எவரும் வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பு நடத்தப்படுகின்ற தினத்தன்று அவ்வாக்களிப்பு நிலையத்தின் வாசலிலிருந்து கால் மைல் தூர எல்லைக்குள் அல்லது பொலிஸார் கூறுகின்ற இடத்திற்கு அப்பால் செல்லாமல் நின்று பின்வரும் செயல்களைச் செய்யக்கூடாது.

1. அபேட்சகர்களுக்கு ஆதரவு தேடுதல்
2. வாக்காளரின் வாக்கை பரிந்து கேட்டல்
3. குறித்தவொரு அரசியற் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவிற்கு வாக்களிக்கும் படி வாக்காளரை வற்புறுத்துதல்.
4. தேர்தலில் குறித்த கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கூறுதல் அல்லது வற்புறுத்தல்.
5. அபேட்சகர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட சின்னங்களை விநியோகித்தல்.
6. ஒலிபெருக்கியை அல்லது மனிதக் குரலின் ஒலியை பெரிதாக்குவதற்கான அல்லது மீள வெளியிடுவதற்கான உபகரணத்தை உபயோகித்தலாகாது.
7. தனிப்பட்ட நபர்களின் வாகனத்தில் வாக்காளர்களை ஏற்றிச்செல்வதற்கு வாடகைப் பணம் கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.
8. தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் நாளன்று அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழுவின் வேட்பாளர் தெரிவுசெய்யப்படுதலுக்கு ஆதரவு திரட்டுவதற்கான நோக்கத்திற்காக அப்பிரதேசத்தில் ஏதேனும் கட்டடத்தை அல்லது கட்டட அமைப்பை பயன்படுத்தலாகாது.
9. எத்தேர்தலிலும் நியமன காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்கி அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் தேதியை உடனடுத்து வரும் நாளன்று முடிவடையும் காலப்பகுதியின் போது வரை வரும் மே தின ஊர்வலம் மற்றும் சமய ஊர்வலங்கள் தவிர்ந்த வேறு ஊர்வலங்களை கூட்டுதல், நடாத்துதல் அல்லது அதில் பங்குபற்றுதல் ஆகாது.


எனவே மேற்படி விடயங்களை செய்யும் ஒவ்வொருவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவானொருவரினால் சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து 100 ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத காலத்துக்கான இருவகையில் ஒருவகை மறிய தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறிய தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

மேற்படி விடயங்களை மீறாமல் தடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், அத்தகைய மீறுதலுக்கென உபயோகிக்கப்பட்ட ஏதேனும் உபகரணத்தை கைப்பற்றவும் முடியும். அத்துடன் ஒவ்வொரு தவறும் குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைச் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட, பிடியாணையின்றிக் கைதுசெய்யக்கூடியதொரு தவறாகவும் உள்ளது.

### துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகளை வெளிக்காட்டி வைத்தல்

ஏதேனும் தேர்தலுக்கான நியமன காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்கி அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் நாளை அடுத்து வரும் நாளன்று முடிவடையும் காலப் பகுதியின் போது அரசியற் கட்சியொன்றின் அல்லது சுயேட்சைக் குழுவொன்றின் வேட்பாளர் எவரும் ஆதரவு திரட்டும் நோக்கங்களுக்காக போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனத்தில் கொடியையோ அல்லது பதாகையையே காட்சிப்படுத்தக் கூடாது.

பொது இடங்களில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், விளம்பரங்கள் மற்றும் சுவரொட்டிகளை ஒட்டுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இது தவிர அமைச்சர், பிரதியமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் அல்லது வேறு அதிகாரியொருவர் ஏதேனும் அரசியற் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவுக்கு சாதகமான முறையில் நியமனங்கள் எதனையும் செய்ய முடியாது. அத்தியாவசியமான பொதுநலன் தேவையை நிறைவேற்றும் நோக்கத்துக்காக மட்டும் அத்தகைய நியமனங்கள் செய்யப்படலாம். அத்துடன், மேற்குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகள் வாக்களிக்கும் நோக்கத்திற்காக அன்றி வாக்கெடுப்பின் போது அல்லது வாக்குகளை எண்ணும் போது ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தில் பிரவேசித்தலாகாது.



Graphic: Mahil Wijesinghe

எனவே மேற்படி விடயங்களுள் ஏதாவதொன்றை மீறும் ஒருவர் குற்றவாளியாக கருதப்பட்டு, நீதவானினால் குற்றவாளியாக்கப்பட்டால் 100 ரூபாவிற்கு மேற்படாத தண்டப்பணத்திற்கு அல்லது ஒரு மாத சிறைத் தண்டனைக்கு அல்லது அவையிரண்டிற்கும் உட்படுத்தப்படுவார்கள்.

### ஊழல் புரிதல் மற்றும் ஆள்மாறாட்ட வாக்களிப்பு

ஏதாவதொரு தேர்தலில் நேரடியாக அல்லது அஞ்சல் மூலமாக வேறாளாக வாக்களிப்பில் ஈடுபடும் ஒவ்வொருவரும் மூல நபர் உயிருடன் இருந்தாலும், உயிருடன் இல்லாவிட்டாலும் கற்பனை ஆளாக இருப்பினும், ஆள்மாறாட்டம் எனும் தவறுக்கு குற்றவாளியாக கருதப்படுவார். இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டவர் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பிடியாணையின்றிக் கைதுசெய்யப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆள்மாறாட்டம் என்னும் தவறைப் புரிபவர்கள் அல்லது அதற்கு உடந்தையாக இருப்பவர்கள், உபசாரம் செய்தல், தகாத செல்வாக்கு அல்லது இலஞ்சம் எனும் தவறைப் புரிபவர்கள் அல்லது தேர்தலொன்றுக்கு முன்னர் அல்லது தேர்தலின் போது தேர்தலிலிருந்து எவரேனும் வேட்பாளர் ஒதுங்குவதாக தேர்தல் முடிவை பாதிக்கும் வகையில் பொய்யான கூற்றை வெளியிட்டால் அதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் ஊழல் பழக்கமொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவானொருவரால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டால் 12 மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான கடூழிய சிறைத்தண்டனைக்கும் வேறு ஏதேனும் விடயத்தில் 500 ரூபாவை விஞ்சாதவொரு தண்டப்பணத்திற்கு அல்லது 6 மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான இருவகையில் ஒருவகை சிறைத்தண்டனைக்கு அல்லது அவையிரண்டுக்கும் ஆளாக்கப்படுவார்.

ஊழல் பழக்கமொன்றுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அவருக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட திகதியிலிருந்து 7 ஆண்டுகளை கொண்டதொரு காலப்பகுதிக்கு தேருனர் ஒருவராகப் பதிவு செய்திருப்பதற்கு அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தலில் வாக்களிப்பதற்கு அல்லது ஓர் உள்ளூரதிகார சபை உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுப்பதற்கு தகுதியற்றவராதல் வேண்டும் என்பதுடன், அந்தத் திகதியில் அவர் ஓர் உள்ளூரதிகார சபை உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அத்தகைய குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட திகதியிலிருந்து அவரது தேர்தல் வறிதாக்கப்படுதலும் வேண்டும்.

தேர்தலொன்றில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படாத எவரேனும் வேட்பாளரினால் அல்லது அவர் அறிந்திருக்க அல்லது அவரது சம்மதத்துடன் எவரேனும் அவரது முகவரால் ஊழல் பழக்கமொன்று புரியப்படுகின்றவிடத்து, அத்தகைய வேட்பாளர், நீதவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஆள்மாறாட்டத் தவறின் விடயத்தில், 12 மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான சிறைத் தண்டனைக்கு அத்துடன் வேறு ஏதேனும் விடயத்தில் 500 ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது 6 மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான இருவகையில் ஒருவகை சிறைத் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், சிறைத் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

### சட்ட முரணான பழக்கங்கள்

தேர்தலொன்றில் வாக்களிப்பு தொடங்கப்படும் நேரத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரான காலப்பகுதியின் போதும் வாக்கெடுப்பு முடிவடையும் நேரத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்கு பின்னரான காலப்பகுதியின் போதும் ஒரு வேட்பாளர் ஏதேனும் வாகனத்தை வாடகைக்கு விடவோ் கடனாகக் கொடுக்கவோ, இரவலாக பெறவோ, அல்லது பயன்படுத்த உதவியாகவோ அல்லது உடந்தையாகவோ இருக்கக்கூடாது.

இவற்றை மீறிச் செயலாற்றும் எவரேனும் ஒருவர், சட்டமுரணான பழக்கம் ஒன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும். ஏதேனும் வாகனம் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி பயன்படுத்தப்படுவதாக இருந்தால் அத்தகைய வாகனத்தை கைப்பற்றல் வேண்டும் என்பதுடன், அதை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்று வாக்கெடுப்பு முடிவடையும் வரை அங்கு அதனை தடுத்து வைக்க வேண்டும். இவ்வாறான சட்ட முரணான பழக்கமொன்றை புரிந்தமைக்காக எவரேனும் ஆளுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டால் நீதவானொருவர் அவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வாகனத்தை அரசுடமையாக்கலாம்.

### அச்சு, இலத்திரனியல் ஊடகங்களில் பிரசுரமாகும் பொய்யான தகவல்கள்

தேர்தலொன்றில் போட்டியிடும் எவரேனும் வேட்பாளர் அல்லது ஏதேனும் அரசியற் கட்சி அல்லது சுயேட்சைக் குழு அத்தகைய தேர்தலில் கூறியவை அல்லது செய்தவை சம்பந்தமாக அல்லது அவை தொடர்பாக, அல்லது தேர்தல் நடாத்தப்பட்ட முறை அல்லது முகாமைசெய்யப்பட்ட முறை சம்பந்தமாக அல்லது அவை தொடர்பாக பொய்யான கூற்று எதுவும் வெளியிடப்பட்டு அல்லது ஒலிபரப்பப்பட்டு அத்தகைய கூற்று தேர்தல் முடிவில் மாற்றத்தை உண்டுபண்ணினால் அச்செய்தித்தாள், ஒலிபரப்பு நிலையத்தின் தலைவர் குறிப்பிட்ட விடயம் தனது அனுமதியின்றி பிரசுரிக்கப்பட்டது அல்லது ஒலிபரப்பப்பட்டது என எண்பித்தாலே ஒழிய அவர் சட்டமுரணான பழக்கமொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

### முடிவாக

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தல்களைப்போல் விகிதாசார முறையில் மட்டும் நடைபெறவில்லை. வட்டார மட்டத்திலும் வட்டாரம் அமைந்துள்ள தொகுதியின் விகிதாசார வாக்குகளின் மட்டத்திலும் அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படவிருக்கிறார்கள். இதுவொரு புதிய முறையாகும். வாக்குச்சீட்டில் விருப்புரிமை வாக்குகள் என்ற அம்சம் இல்லை. முன்னைய முறையில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு எமது விருப்பத்தை தெரிவிக்க முடியும். இம்முறை உங்களுக்கு விருப்பமான ஒருவரையே உங்களது வட்டாரத்தில் இருந்து தெரிவு செய்து நீங்கள் வாக்களிக்க வேண்டும். விசேடமாக பெண்களுக்கு 25 வீத மான அந்தஸ்து ஒதுக்கப்பட்டுள்ளது. இது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டங்களை புரிந்து, தேர்தல் கால வன்முறைகளைத் தடுப்பதற்கு பொதுமக்களாகிய நாம் முன்வர வேண்டும். அத்துடன் எம்மை அறியாமல் சட்டங்கள் மீறப்படு வதிலிருந்து நாம் தவிர்ந்து கொள்வதற்கு இத்தேர்தல் சட்டங்கள் உந்துசக்தியாக அமையும் என்பது சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொலிஸ் காற்பந்து கழகத்தைக் கலக்கும் முஸ்னி

• அனஸ் அப்பாஸ்






19 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிரிவில் இலங்கை சார்பில் ஈரான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளில் தனது திறமையை பறைசாட்டிய ஒரு இளம் காற்பந்து வீரர் A.M.M. முஸ்னி.

19 வயதேயான முஹம்மது முஸ்னி, நீர்கொழும்பு பலஹத்துறையைச் சேர்ந்த அப்துல் முத்தலிப் - பாத்திமா நஸ்ரியா தம்பதிகளின் அன்பு மகன். இவர் நீர்/அல்-ஹிலால் மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடரும் போதே கல்லூரியின் காற்பந்துக் கழகத்தில் இணைந்தார். 13 வயதிலேயே கல்லூரி காற்பந்து கழகத்தில் அபார திறமையை வெளிப்படுத்திய இவர், தனது 14 வயதில் பெரியமுல்லை Western காற்பந்து கழகத்தில் இணையும் வாய்ப்பைப் பெற்றார். Milo Matches, Socker Tournaments, National Jersey Meets என பல போட்டிகளில் இவரால் தொடர்ந்து தனது திறமைகளை வெளிக்காட்ட முடிந்தது.

ஈரானில் இடம்பெற்ற சர்வதேச போட்டிக்கு இலங்கையில் இருந்து 800 பேரில் திறமை அடிப்படையில் தேசிய ரீதியாக தெரிவாகிய 18 பேரில் முஸ்னியும் இடம்பிடித்தார். ஈரானில் இரு போட்டிகள் தோல்வியும், ஒரு போட்டியில் வெற்றியையும் சுவீகரித்தது இலங்கை. அடுத்து, தஜிகிஸ்தானில் நடைபெறும் சர்வதேச போட்டிக்கு இலங்கையில் தேசிய ரீதியாக 700 பேர் போட்டியிட்டு 23 பேர் தெரிவாகினர். இத்தெரிவிலும் உள்வாங்கப்பட்டார் முஸ்னி. (ஈரானுக்கு தெரிவான 18 பேரில் 8 பேர் மாத்திரமே இம்முறை தஜிகிஸ்தான் போட்டிக்கு தகுதி பெற்றனர்.) தஜிகிஸ்தானில் இன்னும் முன்னேற்றம் கண்ட இலங்கை அணி ஒரு முறை தோல்வியும், இரு முறைகள் வெற்றியையும் சுவீகரித்தது.

சர்வதேச ரீதியான போட்டிகளில் தனது அபார திறமையை வெளிப்படுத்தி விட்டு நாடு திரும்பிய முஸ்னிக்கும் இன்னும் மூவருக்கும் இலங்கை பொலிஸ் காற்பந்து கழகத்தில் இணையுமாறு அழைப்பு கிடைத்தது. இதன்படி இப்போட்டிகளில் பங்கெடுத்த முஸ்னியும், அவரது சக வீரர் ஒருவரும் தற்போது மாத சம்பளத்துடன் தொடர் பயிற்சி பெற்று இலங்கை பொலிஸ் காற்பந்து கழகப் போட்டிகளில் கலக்கி வருகின்றனர்.

காற்பந்து விளையாட்டில் மாவட்ட மட்டத்திலும், தேசிய ரீதியிலும் ஒரு காலத்தில் நீர்/அல்-ஹிலால் மத்திய கல்லூரி பிரகாசித்து வந்தது. காற்பந்து விளையாட்டில் அதன் அடைவுகள் காலம் கடந்தாலும் கனி தருகின்றமை மகிழ்ச்சிக்குரிய அம்சம்.

இயல்பிலேயே கடல், ஆறு, கழிமுகம் என பல வளங்களுடன் சிறந்து விளங்கும் பலஹத்துறை கிராமத்தில் முஸ்னி போன்ற பலதிறமைகள் இலைமறை காயாக மறைந்து கிடக்கின்றமையை மாலை வேளைகளில் பலஹத்துறை கடற்கரை திடலிலும், ஏனைய மைதானங்களிலும் அவதானிக்கலாம்.

சமையல் தொழில் செய்யும் ஒரு சாதாரண தொழிலாளியின் மகனாகப் பிறந்த முஸ்னியின் நகர்வுகள் பாராட்டத்தக்கவை. சர்வதேச ரீதியாக இளம் காற்பந்து வீரர்களின் நட்சத்திரமாக விளங்கும் கிறிஸ்டியானோ ரொனால்டோவையே தனது முன்மாதிரி விளையாட்டு நட்சத்திரமாக முஸ்னி கூறுவதுடன், எதிர்காலத்தில் இன்னும் பல சர்வதேச போட்டிகளில் இலங்கையின் காற்பந்து திறமையை வெளிப்படுத்தும் ஒரு தேசிய வீரராக தன்னை உருவாக்கவே இவர் முயல்கின்றார்.

தனது பாடசாலை விளையாட்டுக் கழகம் ஹிலாலியன்ஸ், பெரியமுல்ல 'Western' காற்பந்துக் கழகம், பயிற்றுனர்களான தாஜுதீன், அஜ்மல் ஆசிரியர், பெற்றோர், பலஹத்துறை ஊர் மக்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் என சகலருக்கும் தனது நன்றிகளை சமர்ப்பிக்கின்றார் முஸ்னி.

பண்டை காலம் தொட்டு, உலகம் முழுவதும் மக்கள் பந்தை உதைத்தல் அல்லது நகர்த்தல் சார்ந்த விளையாட்டுக்களை விளையாடி இருக்கின்றனர்.

இருந்தாலும் கால்பந்தின் பெரும்பாலான நவீன நெறிமுறைகள் அவற்றின் பிறப்பிடமான இங்கிலாந்தில் தோன்றியவை.1952 இல் FIFA (Federation Internationale de Football Association) பன்னாட்டுக் கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்ற இலங்கை, Football Federation of Sri Lanka எனும் இலங்கை அரச அமைப்பினால் கண்காணித்து பயிற்றுவிக்கப்படுகின்றது. FIFA சர்வதேச தரப்படுத்தலில் இலங்கை தற்போது 200 ஆவது இடத்தில் இருப்பதுடன், ELO சர்வதேச தரப்படுத்தலில் 219 ஆவது இடத்தையும் வகிக்கின்றது.

சர்வதேச ரீதியாக கிரிக்கட் போட்டிகளில் இலங்கை அணியின் பெயர் பிரசித்தம் பெற்றபோதும், காற்பந்து விளையாட்டுத் துறையில் அதன் அடைவுகள் மேலோங்க இன்னும் பல முஸ்னிகள் இந்த நாட்டுக்குத் தேவை.

---

கடந்த மீள்பார்வை இதழில் சாதனையாளர்கள் தொடரில் வெளியான, ''இலங்கையின் தன்னிகரில்லாத இளைஞர்களுள் ஒருவராக ரஸ்னி ராஸிக்'' என்ற ஆக்கத்தில் ரஸ்னி ராஸிக் துருக்கி அமைப்பொன்றின் நிதிப்பங்களிப்புடன் சிறந்த பராமரிப்பு நிலையமொன்றை (Pearls of Paradise) இலங்கையில் நிறுவ உதவினார்'' என்று குறிப்பிட்டிருந்தமை தவறாகும் என ரஸ்னி ராஸிக் தெரிவித்துள்ளார்.

அத்தோடு Pearls of Paradise நிலையத்தின் பணிப்பாளர் ஷாஜஹான் உடையார் இது தொடர்பாக கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில், சுவனத்தின் முத்துக்கள் (Pearls of Paradise) அனாதைகளுக்கும் அனாதரவானவர்களுக்குமான நிறுவனமானது அனாதைகளுக்கும் அனாதரவான பிள்ளைகளுக்கும் சகல விதமான வசதிகளையும் பாதுகாப்பையும் வழங்கி பாடசாலைக் கல்வியையும் ஆன்மீகக் கல்வியையும் தொழிற்கல்வியையும் படிக்கும் வாய்ப்புக்களை அளித்து சிறந்த இஸ்லாமிய ஆளுமைகளை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். இந்நிறுவனம் அஸ்ரபி சமூக சேவைகளுக்கும் கல்வி வளர்ச்சிக்குமான தொண்டு நிறுவனத்தின் ஓர் அங்கமாகும்.

இந்நிறுவனத்தை உருவாக்குவதற்கு பல தனவந்தர்களும் நலன் விரும்பிகளும் ஆரம்பம் தொட்டு அயராது பாடுபட்டுள்ளனர். இந்நிறுவனம் குறுகிய காலத்தில் நாடுபூராகவும், அறிமுகமாவதற்கு மிகவும் உந்துசக்தியாக விளங்கியது Serendib Foundation for Relief and development &SFRD எனும் நிறுவனமாகும். அவர்கள் துருக்கி குடியரசின் ஸதகதாஷி (sadakatasi) அமைப்பின் ஊடாக உயிர்த்தியாகி ஷஹீத் ஹலீல் கந்தர்ஜி அவர்களுடைய நினைவாக மூன்று மாடிக் கட்டடத்தைக் கொண்ட அங்கசம்பூர்ணமான ஒரு அனாதை நிலைய (Sehit Halil Kantarci Orphanage) கட்டடத்தை நிர்மாணித்துத் தந்தனர். இதில் SFRD தவிர்ந்த எந்தவொரு இலங்கையரதும் உதவியோ பங்களிப்போ கிடையாது என்பதனை இந்நிறுவனத்தின் பணிப்பாளர் என்ற வகையில் ஆணித்தரமாக அறிவிக்கிறேன் என பணிப்பாளர் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ரஸ்னி ராஸிக் எமது சமூக சேவைப் பிரிவுக்குப் பொறுப்பானவராகச் செயல்படுபவர் என்பதோடு மாணவர் உளநலன் விருத்திக்கும் பெரிதும் பங்களிப்புச் செய்பவர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஆக்கத்தில் இருந்த கருத்துக்களில் எதுவும் கட்டுரையாளரால் புனையப்பட்டவையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, குறித்த ஆக்கத்தினால் யாரேனும் பாதிக்கப்பட்டிருந்தால் அதற்காக வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ-ர்)

---

# பள்ளிவாசல்களின் போதை ஒழிப்புப் பணி

• இப்னு மரைக்கார்

மனிதன் தனக்குத் தானே தீங்குகளையும் கெடுதல்களையும் தேடிக் கொள்ளக் கூடியவன். அது அவனது இயல்போடு ஒட்டிய ஒரு பண்பாகும். அதிலும் இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் இவற்றைத் தேடிக் கொள்ளக் கூடிய முன்னணிப் படைப்பாக மனிதன் விளங்குகின்றான். இவ்விடயத்தில் அவனை முந்திச் செல்ல எந்தப் படைப்பாலும் முடியாது. இதன் விளைவாக அவன் தன் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் பலவிதமான கெடுதல்களுக்கும், தீங்குகளுக்கும் முகம் கொடுக்கின்றான். இதற்கு அவனது நடத்தைகளும் பழக்க வழக்கங்களும் அதிகளவில் பங்களிப்பு செய்கின்றன. இருந்தும் அவை தொடர்பில் கவனயீனமாக நடந்து கொள்பவர்கள் தான் மக்கள் மத்தியில் அதிகமுள்ளனர். இது வேதனைக்குரிய விடயமாகும்.

அதேநேரம் இக்கெடுதல்களையும் தீங்குகளையும் தேடித்தரக் கூடிய நடத்தை மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அறிவும், தெளிவும் கிடைக்கப் பெறுமாயின் அவற்றிலிருந்து தவிர்ந்து பாதுகாப்பு பெறக் கூடிய பண்பும் மனிதனிடம் காணப்படவே செய்கின்றது. அதனால் தவறானதும் பிழையானதுமான நடத்தை மற்றும் பழக்கவழக்கங்கள் குறித்த அறிவையும் தெளிவையும் மக்களுக்கு பெற்றுக் கொடுத்து அவற்றின் தீங்குகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் மனிதனுக்கு உடல், உள ரீதியாக மாத்திரமல்லாமல் சமூக, பொருளாதார ரீதியிலும் தாக்கங்களையும், தீங்குகளையும் தேடித்தரக் கூடியதாகப் போதைப் பொருட்கள் தான் உள்ளன. இவற்றின் கடத்தல், விநியோகம், விற்பனை மற்றும் பாவனை ஆகியன இப்போது ஒரு பொதுப் பிரச்சினையாக மாறியுள்ளன. ஆனால் இலங்கை போதைப்பொருட்கள் முற்றிலும் தடை செய்யப்பட்ட ஒரு நாடாகும்.



இருந்தும் கேரளா கஞ்சா, கொக்கைய்ன், ஹெரொய்ன், மர்ஜுவானா, கெனபிஸ், மாவா, போதை தரும் மாத்திரைகள், பாக்குகள், சம்பியாவில் வளர்க்கப்படும் ஒரு வகை போதைச் செடி எனப் பல்வேறு வகையிலான போதைப்பொருட்கள் இந்நாட்டுக்குள் வந்து சேருகின்ற அதேநேரம் சட்ட விரோதமான முறையில் கஞ்சா உள்நாட்டிலும் வளர்க்கப்படுகின்றன.

இப்போதைப்பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கடத்திக் கொண்டு செல்வதற்காக சூட்சுமமான வழிமுறைகள் போதைப்பொருள் வியாபாரிகளால் கையாளப்படுகின்றன. குறிப்பாக 'பொதியைக் கொண்டு செல்லல்' என்ற பெயரில் இடம்பெறுகின்ற இக்கடத்தலுக்கு வயதான மூதாட்டிகள் கூட பயன்படுத்தப்படும் அளவுக்கு நிலைமை வளர்ச்சி பெற்றுள்ளது.

அத்தோடு பாடசாலைகளில் ஏழாம், எட்டாம், ஒன்பதாம் வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களும் கூட இதன் நிமித்தம் பாவிக்கப்படுகின்றனர். இதற்காக இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய்கள் வழங்கப்படுவதாக தகவல்கள் உள்ளன.

இவ்வாறு போதைப்பொருள் கடத்துதலும், விநியோகமும், விற்பனையும், பாவனையும் பெரிதும் அதிகரித்துள்ளது. அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான வசதி மிகவும் இலகுவாகியுள்ளது. கிராமம், நகரம் என்ற வேறுபாடின்றி எல்லா இடங்களிலும் இவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை உருவாகியுள்ளது. பொலிஸாரும், பாதுகாப்பு தரப்பினரும் அன்றாடம் மேற்கொள்ளும் கைதுகளும், கைப்பற்றுதல்களும் இதனை மேலும் உறுதிப்படுத்தக் கூடியனவாக உள்ளன. குறிப்பாக பாடசாலைகளுக்கு அருகில் மாணவர்களை இலக்கு வைத்துக் கூட இந்நாட்டில் போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அத்தோடு போதைப் பொருட்களைப் பாவித்த நிலையில் பாடசாலை மாணவர்கள் வகுப்பறையின் ஆசிரியர்களால் கண்டுபிடிக்கப்பட்டுமுள்ளனர்.

மனிதனுக்கு எவ்விதத்திலும் நன்மைகள் அளிக்காத போதிலும் பல்வேறு வழிகளிலும் தீங்குகளையும், பாதிப்புக்களையும் தேடித்தராக் கூடிய இப்போதைப்பொருட்களை அவன் ஏன் பாவிக்கின்றான் என்றொரு வினா எழுகின்றது. அது நியாயமான வினா தான். போதை பொருட்கள் மனிதனின் உணர்ச்சியில் கிளர்ச்சி நிலையை ஏற்படுத்தக் கூடியன. குறிப்பாக ஒருவாது இயல்பான செயற்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி கிளர்ச்சி நிலையைத் தோற்றுவிக்க இதன் பாவனை பக்க துணையாக அமையும்.

குறிப்பாக மனிதனின் உடலியக்கத்தை ஒழுங்கு முறையாகப் பேணி இயக்கும் பொறுப்பு மூளையின் மூளியிடம் உள்ளது. அதன் செயற்பாட்டில் போதைப்பொருள் பாவனையின் ஊடாகக் கிளர்ச்சி நிலை தூண்டப்படுகின்றது. அத்தோடு இக்கிளர்ச்சி நிலைமையை ஏற்படுத்துவதற்காகப் பாவிக்கப்படும் இப்போதைப் பொருட்கள் மனிதனின் நரம்பு கட்டமைப்பிலும் தாக்கத்தையும் அழுத்தத்தையும் ஏற்படுத்தும். அதன் விளைவாகவும் இக்கிளர்ச்சி நிலை ஏற்பட்டு போதை நிலை தோற்றம் பெறுகின்றது. இவ்வாறு இயல்புக்கு மாற்றமாக போதைப்பொருட்களைப் பாவித்து தொடர்ந்து உடலில் கிளர்ச்சி நிலையை ஏற்படுத்தும் போது நரம்புகளின் சீரான இயக்கம் பாதிக்கப்படுவதோடு, மூளியின் கட்டுப்பாட்டையும் உடல் இழக்கலாம். இதன் விளைவாக நரம்புத் தளர்ச்சி உள்ளிட்ட மிகப்பயங்கரமான விளைவுகள் தோற்றும் பெறும்.

அதேநேரம் இவற்றினால் தோற்றம் பெறும் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவென பெருந்தொகை நிதியைச் செலவிட நேரிடும். அதிலும் புற்று நோய்கள் போன்ற சில நோய்களைக் குணப்படுத்தவும் முடியாது. இவை இவ்வாறிருக்க, போதைப்பொருள் பாவனையாளர்கள் வறுமை நிலைமைக்கு உள்ளாவதையும், அவர்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமூக வாழ்வில் பலவிதமான தாக்கங்களுக்கு முகம் கொடுப்பதையும் தவிர்க்க இயலாது. அத்தோடு அவர்களது எதிர்கால சந்ததியினரும் கல்வி துறை அடங்கலாகப் பலவித பின்னடைவுகளுக்கும் உள்ளாகவே செய்வர். இருந்தும் போதைப்பொருள் பாவனையின் தாக்கம், பாதிப்பு என்பன உடனடியாக வெளிப்படுவதில்லை. அதற்கு சிறிது காலம் எடுக்கும். இதன் விளைவாகவே இந்த அரக்கனின் பிடிக்குள் மனிதனால் இலகுவாகச் சிக்கிக் கொள்ள முடிகின்றது.

இவ்வாறு மிக மோசமான விளைவுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் போதைப்பொருட்களின் கடத்தல், விற்பனை மற்றும் பாவனையிலிருந்து இந்நாட்டினரை பாதுகாப்பதற்காகப் பொலிஸாரும், பாதுகாப்பு தரப்பினரும் நீதித்துறையும் பரந்தடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இருந்தும் அவற்றின் கடத்தல், விற்பனை, பாவனை என்பன குறைந்ததாக இல்லை.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை முஸ்லிம்களின் அரசியல் போராட்டம்

## தவிர்க்க முடியாத ஒரு மார்க்கக் கடமை



• முஹம்மத் பகீஹுத்தீன்

இலங்கை வாழ் முஸ்லிம்கள் தாய் நாட்டின் நலன்களை கட்டியெழுப்புவதில் பங்காளிகளாக இருப்பதும் ஒரு தார்மீகக் கடமையாகும். ஒரு முஸ்லிம் சிறந்த தனிமனித ஆளுமைகளை உருவாக்கும் பிரசாரகனாகவே வாழ்ந்து மடிவான். பிராசாரத்தை அவனது வாழ்வியல் கடமையாகவே அவன் கருதுவான். அந்த வகையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் குடிமகன் தனது நாட்டின் அரசியல் வாழ்விலும் தேர்தல் வழிமுறைகளிலும் முன்மாதிரியாக நடந்து கொண்டால் அதுவே ஒரு சிறந்த, உயர்ந்த தஃவாவாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

தேர்தல் என்பது அரசியல் போராட்டத்திற்கான ஒரு பலமான சாதனம். சிறுபான்மையாக வாழும் இலங்கை முஸ்லிம்கள் தேர்தல் அரசியலில் போராடுவதற்கு ஷரீஆ தாராளமாக அங்கீகாரம் வழங்குகிறது. பின்வரும் சட்டவிதிகள் அரசியற் போராட்டம் மற்றும் வாக்குரிமையை பயன்படுத்தல் என்பன ஷரீஆ அங்கீகாரம் கொண்டவையே என வலியுறுத்துகின்றன.

1) 'ஒரு கடமையை நிறைவேற்றல் இன்னொன்றை நிறைவேற்றுவதில் தங்கியிருக்குமாயின் அந்த விடயத்தை நிறைவேற்றுவதும் கடமையாகும்.'' இது ஒரு சட்ட விதி. இந்த விதியின் படி முஸ்லிம்கள் தமது மார்க்க, கலாசார, சமூக உரிமைகளைப் பெறும் அரசியற் போராட்டம், தேர்தலில் கலந்து கொள்வதில் தங்கியிருக்குமாயின் தேர்தலில் பங்கு கொள்வதும் வாக்களிப்பதும் அவர்கள் மீது கடமையாகும். வாக்குரிமை என்ற கடமையைப் புறக்கணித்து விட்டு மாற்றம் வேண்டும் என கனவு காணமுடியாது.

2) ''செயல்கள் யாவும் நோக்கங்களை வைத்தே தீர்மானிக்கப்படும்.'' இது சட்ட அறிஞர்களுக்கு மத்தியில் ஏகோபித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட இன்னொரு சட்ட விதியாகும். எனவே அரசியல் போராட்டத்தில் கலந்து கொள்வது முஸ்லிம்களின் உரிமையைப் பெறல், மார்க்க சுதந்திரத்தைப் பெறல், கலாசார தனித்துவத்தையும் முஸ்லிம் அடையாளத்தையும் காத்தல் என்ற எண்ணத்தோடும் நோக்கத்தோடும் இருப்பின் அது கூலியை பெறும் ஒரு வணக்கமாகும். காலத்தின் தேவையை பொறுத்து மார்க்க ரீதியான கடமையும் கூட. எனவே விழுமிய அரசியலுக்காக களத்தில் இறங்குவதும் உயர் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஒரு பிரதிநிதியை சட்ட மன்றம் அனுப்புவதும் நல்ல நோக்கங்களாகும். நல்ல நோக்கம் நிச்சயமாக நாளை மறுமையில் தராசை கனதியாக்கும் நற்கூலியை பெற்றுத் தரும்.

3) ''தீமைகளுக்கு இட்டுச் செல்லும் வழிகளை அடைத்தல்'' என்பதும் ஒரு ஷரீஆ சட்ட விதியாகும். அரசியல் போராட்டத்தின் முக்கிய ஆயுதமான தேர்தலில் பங்கு கொள்ளாது ஒதுங்குவது மார்க்க சமூகக் கூட்டிருப்புக்கு அபாயமாக அமையும். நாட்டில் முஸ்லிம்கள் ஒதுக்கப்பட்ட நிலைக்கு உள்ளாவர். நிறைய நன்மைகளை இழப்பதோடு பல சீர்கேடுகளும் தீமைகளும் உருவாகவும் இடமுண்டு. சிலபோது தேர்தல் புறக்கணிப்பானது முஸ்லிம்களின் இருப்புக்கே ஆப்பு வைத்து விடும்.

இத்தகைய பாரிய தீமைகளிலிருந்து தடுக்கும் அரணாகவே தேர்தல் அரசியலும் காணப்படுகிறது. எனவே பாதுகாப்பிற்கும் சீர்கேடுகளைக் குறைப்பதற்கும் வாக்குரிமை சிறந்த அரசியல் போராட்ட சாதனம். அதனைப் பயன்படுத்துவதில் அலட்சியமாக இருப்பது நிச்சயமாக பெரும் குற்றமே.

4) ''அத்தியாவசிய நிலைகள் தடுக்கப்பட்டவற்றையும் ஆகுமாக்கும்'', மேலும் ''தேவை அத்தியாவசிய நிலையின் தரத்தைப் பெறலாம்'' என்ற அடிப்படைகள் அரசியல் போராட்டத்தை நியாயப்படுத்தும் சட்ட விதிகளாகும். அரசியல் போராட்டம் சிறுபான்மை முஸ்லிம்களின் ஒரு தேவை. அது சமூகத்தின் உரிமைகளைக் காக்க வேண்டிய அத்தியாவசிய நிலைக்கு இன்று மாறியுள்ளது. எனவே இந்நிலையில் சில தீமைகளையும் இழைக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை இருப்பினும் அதில் பங்குபற்றுவது ஆகும் என்பதையே இந்த விதி கூறுகிறது.

அதாவது பாராளுமன்றம் செல்பவர் அல்லது அது போன்ற ஒரு சட்ட சபைக்கு பிரதிநிதியாக செல்லும் ஒருவர் ஷரீஆவுக்கு மாற்றமான விடயங்களைக் கொண்டுள்ள யாப்பை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டியுள்ளது. அல்லது ஷரீஆவிற்கு முரண்படும் யாப்புக்களையுடைய கட்சிகளுடன் கூட்டிணைய வேண்டியுள்ளது. சிறுபான்மை முஸ்லிம்களின் வாழ்வொழுங்கில் இவை நிர்ப்பந்த நிலைகளாகும். எனவே அவர்களது சாத்வீகமான அரசியல் போராட்டத்தின் தேவை இத்தீமையை செய்வதை ஆகுமாக்கிறது. இது குறித்த நபிகளாரின் வழிகாட்டல்களை ''தேர்தலில் பங்கு கொள்வதற்கான ஷரீஆ ஆதாரங்கள்'' என்ற உப தலைப்பில் குறிப்பிட்டுள்ளோம்.

5) ''இரண்டு தீமைகளில் தாக்கம் குறைந்ததை தெரிவு செய்தல்'' என்பதும் ஒரு சட்டவிதியாகும். இதே கருத்தை கொடுக்கும் இன்னும் பல சட்டவிதிகள் நிறையவே காணப்படுகின்றன.

நன்மை மாத்திரம் உள்ள ஒரு விடயத்தை தெரிவு செய்வது இலகுவானதே. தீமை மாத்திரம் உள்ள ஒன்றை தவிர்ந்து கொள்வதும் இலகுவானதே. நன்மை தீமை இரண்டும் கலந்த அல்லது இரண்டு தீமைகளில் எந்தத் தீமையைத் தெரிவு செய்வது என்ற நிலை வரும்போது சொந்த நலன் பாராது, ஷரீஆவின் நிலைக் களனில் நின்று, குறைந்த பாதிப்பைத் தரும் தீமையை தெரிவு செய்வது அனுமதிக்கப்பட்டதாகும்.



எது வேண்டுமானாலும் நடக்கட்டும் என்று ஒரு முஸ்லிம் வாழ முடியாது. நன்மையை ஏவி தீமையை தடுப்பது ஒவ்வொருவருக்கும் தனித்தனியான கடமையாகும். வாக்குரிமை தீமை தடுப்பதற்கான மிகப் பலமான சாதனம். இந்தத் தருணத்தில் வாக்குரிமையை பாவிப்பது நமது நாட்டை அபிவிருத்தி நோக்கி தள்ளுவதற்கும் சகல இன மக்களுக்கும் மத்தியில் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கான ஓர் அரிய வாய்ப்பு.



எனவே பாராளுமன்றம் செல்வது அல்லது இரு வேட்பாளர்களில் இருவருமே பொருத்தமற்றவர் என்று கருதப்படும்போது ஒருவரை ஒப்பீட்டு ரீதியில் முற்படுத்தி தெரிவு செய்வது ஆகும் என்ற கருத்தை இந்த விதி கூறுகிறது.

6) ''நலன்களை நிலை நிறுத்துவதை விடக் கேடுகளை தடுப்பது முதன்மையானது'' என்பது இன்னொரு முக்கியமான சட்டவிதியாகும்.

சிறுபான்மையாக இருந்து அரசியல் போராட்டத்தில் கலந்து கொள்வதன் மூலம் தேச நலன்களையோ, சமூக மேம்பாட்டையோ அடைவது எப்படிப் போனாலும் கூர்மையடைந்துள்ள தீமைகளை குறைப்பது முதல் கட்டத் தேவையாகும். எனவே கூர்மையடைந்துள்ள அதிகார வெறியை, அரசியல் சீர்கேடுகளைக் குறைப்பதற்காக தேர்தல் என்ற ஆயுதத்தை பயன்படுத்துவது கண்டிப்பான தேவையாகும். இங்கே தீமைகளை தடுப்பது முதன்மைப்படுத்தப்படுகிறது.

இந்த விதிக்கு ஸீராவிலிருந்து ஒரு சான்றாக பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிடலாம். நபி (ஸல்) அவர்கள் புனித கஃபாவை இப்ராஹீம் (அலை) அவர்கள் கட்டிய அதே அடித்தளத்தில் மீண்டும் இடித்துக் கட்டுவதை மிகவும் விரும்பினார்கள். இருப்பினும் புதிதாக இஸ்லாத்தை தழுவியவர்கள் மத்தியில் அது குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் கஃபாவின் மீது வைத்துள்ள மதிப்பும் கண்ணியமும் மாசுபடும் என்றும் கருதி கஃபாவை புனர்நிர்மாணம் செய்வதை கைவிட்டு விட்டார்கள்.

கஃபதுல்லாவை ஆதியில் இருந்த அத்திவாரத்தில் கட்டுவது சர்வதேச உம்மத்துக்கான ஒரு பொது நலன். அதனால் உருவாகும் பித்னா அந்த நலனை மிகைத்துவிடும் தீங்காகும். எனவே தீங்கைத் தடுப்பதை இங்கு நபி (ஸல்) முதன்மைப்படுத்தியுள்ளார்கள். இந்த சம்பவம் புகாரியில் பதிவாகியுள்ளது.

எனவே எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் அரசியல் தீமைகளை தவிர்ந்து கொள்வதற்காக நமது வாக்குரிமையைப் பயன்படுத்துவது கடமையாகும். நன்மைகள் கிடைக்காது என்றிருப்பினும் தீமைகள் குறைவதற்கு அது பயன்படுமே என்ற சிந்தனை நாம் கருத்திற் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

### ஊழல் நிறைந்த அரசில் வாக்குரிமைக்கு என்ன பெறுமானம்

நாட்டு நலன் கருதி நாம் வாக்களித்து என்ன பயன்? அங்கு முழுக்க முழுக்க ஊழலும் மோசடியும் தானே நடைபெறுகிறது. இப்படி இருக்கும் போது ஒட்டுப் போட்டா என்ன போடா விட்டால் என்ன என்று சலிப்புடன் ஒதுங்குபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஒருவேளை அவர்கள் எண்ணுவது போல் தேர்தல் ஊழல், மோசடி நிறைந்த நிலையில் அமையும் என்றிருந்தாலும் வாக்குரிமையை பயன்படுத்துவது கடமை என்றே இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள். காரணம் அநியாயங்களுக்கு முன்னால் எடுக்கவேண்டிய நிலைப்பாடு குறித்து ஸுன்னாவின் வழிகாட்டல் கடமையை நிறைவேற்றுமாறே பணிக்கிறது.

''உனது கடமையை நிறைவேற்று, உனது உரிமையை அல்லாஹ்விடம் கேள்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்)

எனவே எமது பொறுப்பில் உள்ள வாக்குப் பலத்தை பிரயோகிப்பது ஒரு அடிப்படைக் கடமை. முதலில் அதனை நிறைவேற்றுவோம். பின்னர் அநியாயத்திற்கு எதிராக வல்ல அல்லாஹ்விடம் முறையிடுவோம். இதுதான் சுன்னா காட்டித்தரும் வழிமுறை என மேற்கூறிய ஹதீஸ் எமக்கு கூறுகிறது.

அநீதிக்கு எதிராகப் போராடுகின்ற அதே சமயம் தேர்தலின் போது பொருத்தமான ஒருவரை தெரிவு செய்வதற்கு வாக்களிப்பதும் முதன்மைப்படுத்தப்பட வேண்டிய ஒரு கடமையாகும்.

மாற்றத்திற்கான சாத்வீக போராட்டத்தின் ஒரு ஆயுதமே வாக்குரிமை. மோசடி என்ற காரணம் காட்டி அந்தக் கடமையை பாழ்படுத்தக் கூடாது. தீமையை தடுப்பதற்கு அடுத்த தரப்பின் ஒப்புதல் தேவையில்லை. கடமையை செய்தால் அல்லாஹ்விடம் கூலி கிடைக்கும். வாக்குரிமையை விட்டுக் கொடுப்பது என்பது மோசடிக்கு நாம் உடந்தையாக இருக்கிறோம் என்பதே அர்த்தம். சாட்சி சொல்லாமல் மௌனம் காப்பதானது நடக்கின்ற அநீதிகளை அங்கீகரிப்பது என்றே பொருள். மேலும் சரியோ பிழையோ நீ விரும்பியதை செய்வதற்கு நான் பூரண ஆதரவு என்று கூறுவதாக அது அமைந்துவிடும். எனவே தான் எந்நிலையிலும் வாக்குரிமையை பயன்படுத்துவது கடமை என்றும் அலட்சியமாக விடுவது பாவம் என்றும் கூறுகின்றோம்.

### பெண்களும் வாக்குரிமையில் சம பொறுப்புள்ளவர்களே

மேற்கூறிய அனைத்து சான்றுகளும் பெண்களுக்கும் சேர்த்தே ஷரிஆ கடமையாக்கியுள்ளது. ஆண்களைப் போன்றே பெண்களும் சமபொறுப்புள்ளவர்களே. சட்டரீதியான நியாயமான காரணம் இன்றி பெண்கள் வாக்குரிமையை பயன்படுத்தாமல் விடுவது குற்றம் என்ற ஷரீஆவின் பார்வை பெண்களுக்கும் சேர்த்தே கூறப்பட்டுள்ளது. எனவே ஆண்கள் இது குறித்து மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். பெண்கள் அந்தக் கடமையை செய்வதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்குவதும் அவர்கள் மீதுள்ள பொறுப்பாகும். ஓட்டுப் போடுவதற்கான போக்குவரத்து வசதிகளையும் தேவையான ஏனைய ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பது ஆண்களின் கடப்பாடாகும்.

அத்துடன் நாட்டில் உள்ள தேர்தல் ஒழுங்குகள் மற்றும் சட்ட திட்டங்களை பேணுவது ஆண்கள் பெண்கள் இரு பாலாருக்கும் பொதுவானதே. எனவே ஒரு வாக்காளர் அவருக்குரிய ஒழுங்குகளைப் பேணி நடப்பது குடிமகன் என்ற வகையில் கடமையாகும். வாக்களித்தல் ஒரு சாட்சியாகும். சாட்சியாளர் தான் யார் என அடையாளம் காண்பதற்கு தடையாக இருக்கக் கூடாது என்பது ஷரீஆ அங்கீகரிக்கும் அடிப்படை விதியாகும். எனவே குறிப்பாக நமது சகோதரிகள் வாக்காளர்களுக்குரிய ஒழுங்குகளை மீறாமல் நடந்து கொள்வதும் தேச நலன் சார்ந்த கடமை என்பதை புரிந்து நடந்துகொள்ள வேண்டும். கடமையொன்றை நிறைவேற்றும் ஒரு நல்ல பிரஜை ஒருபோதும் வீணான பிரச்சினைகளுக்கு வித்திட மாட்டான்.

### வாக்களிப்பது காலத்தின் தேவை

வாக்குரிமையை பயன்படுத்துவது எப்படி ஷரீஆவின் பார்வையில் கடமையோ அவ்வாறே அது காலத்தின் கட்டாயத் தேவையுமாகும். நாட்டில் அரசியல் அராஜகம் செய்து அடிபட்ட பாம்புகள் இன்னும் நாம் சாகவில்லை என அசைந்து அசைந்து படம் காட்டுகின்ற காலத்தில் நாம் வாழுகின்றோம். இன முரண்பாடுகளை தோற்றுவிப்பதற்காக சில சக்திகள் பகிரங்கமாகவே வேலை செய்கின்றன. சியோனிச சக்திகள் நாட்டை குட்டிச் சுவராக்க வந்துள்ள இந்த நிலையில் முகம் போன போக்கில் வாழமுடியாது.

எது வேண்டுமானாலும் நடக்கட்டும் என்று ஒரு முஸ்லிம் வாழ முடியாது. நன்மையை ஏவி தீமையை தடுப்பது ஒவ்வொருவருக்கும் தனித்தனியான கடமையாகும். வாக்குரிமை தீமை தடுப்பதற்கான மிகப் பலமான சாதனம். இந்தத் தருணத்தில் வாக்குரிமையை பாவிப்பது நமது நாட்டை அபிவிருத்தியை நோக்கித் தள்ளுவதற்கும் சகல இன மக்களுக்கும் மத்தியில் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கான ஓர் அரிய வாய்ப்பு. இந்த அரிய அருமையான சந்தர்ப்பத்தை மிகக் கவனமாக பயன்படுத்த வேண்டும். அதனை கைநழுவ விட்டால் இம்மையிலும் மறுமையிலும் கைசேதம்தான் மிஞ்சும். வேண்டுமென்று ஒதுங்கிவிட்டால் பாவமும் பழியும் சேர்ந்தே பின்தொடரும். காலத்தின் தேவை தேர்தல் என்ற வடிவில் வந்து அழைக்கிறது. அதற்கு பதில் கூறுவது ஒவ்வொரு பிரஜையினதும் தார்மீகப் பொறுப்பாகும்.

எனவே நாட்டில் நடைபெறவுள்ள எத்தகைய தேர்தல்களிலும் அசட்டையாக இருப்பது அராஜகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் உதவியதாக அமையும். அதாவது மிகப்பெரிய தீமையை தடுப்பதற்கான வாய்ப்பு இருந்தும், வாக்காளர் அட்டை கிடைத்தும் அலட்சியம் செய்த பாவம் என்றே கருதப்படும். ஒரு தவறை தெரிந்து செய்தால் அது கொடிய குற்றமாகும். சிறுபான்மைக்கான அரசியல் போராட்டத்தில் வாக்குரிமை என்பது மாற்றத்திற்கான மிக முக்கிய சாதனம் என்ற உணர்வோடு நம் வாக்குப் பலத்தை பிரயோகிக்க வேண்டும்.

அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உயர் கல்வியில் தனியார் துறையின் செல்வாக்கு

இலங்கையின் உயர் கல்வி வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் சந்தையின் கேள்விக்கேற்ப மனித முதலீட்டை (Human Capital) அதிகரிக்க முடியாத சவாலுக்கு இலங்கை முகம் கொடுத்துள்ளது. 2012 ஆம் ஆண்டு தொகை மதிப்பீட்டின்படி 25 வயதான இளைஞர்களில் நான்கு வீதமானோரே இலங்கையில் இளமானி மட்ட தகுதியைக் கொண்டுள்ளனர். நாட்டின் சனத்தொகையில் மிகக் குறைந்ததொரு பகுதியினருக்கே உயர் கல்வி வாய்ப்புகள் வழங்கப்படுவதே இதற்கான பிரதான காரணமாகும்.

பல்கலைக்கழக நுழைவு வாய்ப்புகள் ஒவ்வொரு கல்வியாண்டிலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பல்கலைக்கழகக் கல்வி மிகுந்த போட்டித் தன்மையுள்ளதாக மாறியுள்ளது. 2014/2015 கல்வியாண்டில் உயர் தரத்திலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களின் தொகை 149,489 ஆகும். எனினும், இத்தொகையில் 17 வீதமானோரே அரச பல்கலைக்கழகங்களுக்கு நுழைவு அனுமதி பெற்றனர்.

2016/2017 கல்வியாண்டில் உயர் தரத்தில் தேற்றிய 250,000 மாணவர்களில் 160,000 பேர் பல்கலைக்கழகக் கல்வி பெறும் தகுதி பெற்றுள்ளனர். அவர்களில் 30,000 மாணவர்களுக்கே இம்முறை பல்கலைக்கழக நுழைவு அனுமதி வழங்கப்படவுள்ளது. எவ்வாறாயினும், வருடாந்தம் சராசரியாக பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெறும் மாணவர்களில் 120,000 பேருக்கு பல்கலைக்கழக நுழைவு அனுமதி மறுக்கப்படுவதனால் பல்கலைக்கழகம் செல்லும் கனவை அவர்கள் கைவிட்டு விடுகின்றனர்.

இதேவேளை, சர்வதேச பாடசாலைகளில் வெளிநாட்டுக் கலைத் திட்டத்தை நிறைவுசெய்யும் மாணவர்கள் இலங்கை பல்கலைக்கழகம் நுழைவதற்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதனால் வருடாந்தம் 12,000 இலங்கை மாணவர்கள் உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல நேர்கின்றது. விளைவாக, வருடாந்தம் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையர்கள் அந்நியச் செலாவணியாக இழக்கின்றனர். வெளிநாடுகளில் சென்று கல்வி கற்பதற்கு வசதியற்றவர்கள் உள்ளூர் சந்தைகளில் மாற்றுத் தெரிவுகளை எதிர்பார்த்து நிற்கின்றனர். அவர்களின் தொகை வருடாந்தம் அதிகரித்து வருகின்றது.



இந்த இடைவெளியை கூர்ந்து அவதானித்து வந்த அரச சார்பற்ற பங்காளர்கள் உயர் கல்வித் துறையில் நுழைந்துள்ளனர். நாடு முழுவதும் உயர் கல்விக்கு நிலவும் கேள்விக்கு ஈடு கொடுக்கும் வகையில் எக்கச் சக்கமான இளமானிப் பட்டம் வழங்கும் தனியார் துறை கல்வி நிறுவனங்கள் களத்திற்கு வந்துள்ளன. தனியார் துறை ஊடாக இலங்கையின் உயர் கல்வி வாய்ப்புக்களை விஸ்தரிப்பது மாணவர்களுக்குக் கிடைக்கும் வரப் பிரசாதமாகும். இல்லையெனில், இம்மாணவர்கள் பல மடங்கு மேலதிக செலவீனங்களை மேற்கொண்டு வெளிநாடுகளில் கல்வி பயில வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

தற்போது தனியார் துறையிலுள்ள உயர் கல்வி நிறுவனங்களை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம். முதல் வகை, உயர் கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்த நிலையில் இளமானிக் கற்கைகளை வழங்கும் (Degree - Awarding Institutes) நிறுவனங்களாகும். இரண்டாம் வகை, உயர் கல்வி அமைச்சின் கீழ் இல்லாத, அதன் கண்காணிப்பின் கீழ் பதிவு செய்யாத தனியார் துறை உயர்கல்வி நிறுவனங்களாகும்.

உயர்கல்விச் சட்டத்தின் 25 A பிரிவு, குறித்ததோர் நிறுவனம் குறிப்பிட்ட சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில், அதற்கு இளமானிப் பட்டத்தை வழங்கும் நிறுவன அங்கீகாரத்தை வழங்கும் அதிகாரத்தை உயர் கல்வி அமைச்சருக்குத் தருகின்றது. 2015 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய, உயர் கல்வி அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 16 இற்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இயங்குகின்றன. அவை அரச அங்கீகாரம் பெற்ற 64 துறைகளில் இளமானிப் பட்டங்களை வழங்குகின்றன.

தகவல் தொழில்நுட்பம், எந்திரவியல், உளவியல், முகாமை, மருத்துவம் ஆகிய துறைகளிலேயே இளமானிப் பாடநெறிகளை இந்நிறுவனங்கள் வழங்குகின்றன. அவற்றுள் NIBM (Nation Institute of Business Managment, CINEC (Colombo International Nautical and Engineering College, Horizon Campus, SANSA Campus, SAITM (South Asia Institute of Technology and Medicine மற்றும் ICASL (Institute of Chartered Accountants of Sri Lanka) என்பன முக்கியமானவை. இவை 2017 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் அல்லது 1992 இன் முதலீட்டு சபை 16 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டவை.

இந்நிறுவனங்கள் கணக்கியல், சந்தைப்படுத்தல், தகவல் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் சான்றிதழ் மட்ட, தொழில்சார் டிப்ளோமா கற்கைநெறிகளையும் வழங்குவது குறிப்பிடத்தக்கது. அவற்றுக்கும் உயர் கல்வி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2015 இன் ஆரம்பத்தில் இந்நிறுவனங்களில் இளமானிப் பட்டத்திற்காக பதிவு செய்த மாணவர்களின் தொகை 8892 ஆகும். அதேவேளை, 60,000 மாணவர்கள் டிப்ளோமா கற்கைநெறிகளில் தம்மைப் பதிவுசெய்துள்ளனர்.

உயர் கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்படாத உயர் கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரை, அவை கல்வி அமைச்சுக்கு கட்டணம் செலுத்துவதிலிருந்து தவிர்ந்துகொள்வதோடு, உலக அங்கீகாரம் பெற்ற ஒரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு செயல்படுகின்றன. குறிப்பிட்ட அவ்வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் வழங்கும் அங்கீகாரமே இந்நிறுவனங்களின் நம்பகத் தன்மைக்கு அடிப்படையாக உள்ளது.

இலங்கையில் தற்போதுள்ள உயர் கல்வி ஏற்பாடுகளின்படி உயர் கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யாமல் இவ்வாறு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் இளமானிப் பட்டத்தை (Degree) உள்ளூர் இணை நிறுவனங்கள் (Affliated Institutions) வழங்குவதற்கு சட்ட ரீதியான தடைகள் எதுவும் இல்லை.

1992 மார்ச் 13 திகதியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை 16/92 படி சர்வதேச பல்கலைக்கழகங்களின் கையேடு (International Handbook of Universities) மற்றும் பொதுநலவாயப் பல்கலைக்கழகங்களின் வருடாந்த கையேடு என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்திற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்க வேண்டும். அதன்படியே இந் நிறுவனங்கள் இங்கு இயங்குகின்றன.

பதிவுசெய்யப்படாத தனியார் துறை நிறுவனங்களில் பெரும்பாலும் வணிகம் மற்றும் முகாமை துறைசார்ந்த கற்கைகளே வழங்கப்படுகின்றன. இத்தகைய பதிவுசெய்யப்படாத தனியார் துறை உயர்கல்வி நிறுவனங்களில் 2015 இல் மாத்திரம் இளமானிப் பட்டத்திற்காக 4518 மாணவர்கள் தம்மைப் பதிவு செய்திருந்தனர். இவ்வாறு உயர் கல்வி அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்டதும், பதிவுசெய்யப்படாததுமான தனியார் துறை உயர் கல்வி நிறுவனங்களில் பல்லாயிரணக்கான மாணவர்கள் இணைந்து தமது உயர் கல்வியைத் தொடர்வது குறிப்பிடத்தக்கது. இது குறித்து இலங்கை தொழில்வாண்மையாளர்களிடமும் கல்வித் துறை சார்ந்தோரிடமும் பல்வேறு அபிப்பிராயங்களும் கருத்து வேற்றுமைகளும் நிலவி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி




மன ஆரோக்கியத்தில் குடும்ப வாழ்வின் பங்கு முக்கியமானது. மகிழ்ச்சியான குடும்ப வாழ்வைக் கொண்டு செல்வதற்கு இன்றியமையாத காரணிகளை இனங்காண்பதும் சாத்தியப்படுத்துவதும் அவசியம். குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளும் அதன் விளைவான நீடித்த துயரங்களும் குடும்ப வாழ்வின் மகிழ்ச்சியைக் குலைப்பதோடு, உளஆரோக்கியத்தில் நேரெதிரான பாதிப்பையும் ஏற்படுத்துகின்றது.

தம்பதியினரின் மணவாழ்வு மகிழ்ச்சிகரமானதாகவும் அந்த மகிழ்வு பிணக்குகள், கருத்து முரண்பாடுகளைத் தாண்டியும் நீடிக்க வேண்டுமாயின் அவர்களிடையே சில அடிப்படையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

**1. பொறுமை (Forbearance)**

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை முகாமை செய்ய பொறுமை அவசியம். இறைவன் பொறுமையாளர்களோடு இருக்கின்றான் எனும் ஆத்மீக உளவியல் குடும்ப வாழ்வில் முக்கியமாகும். வாழ்வு பிரச்சினைகளைக் கொண்டது. அது எப்போதும் மலர்கள் தூவப்பட்ட பஞ்சு மெத்தை அல்ல. கஷ்டங்கள், துன்பங்கள் எல்லோரினது வாழ்விலும் ஏற்படுகின்றன. எனவே, அவற்றை சகித்துக் கொள்வதற்கான ஒரு பொறிமுறையை வளர்ப்பதற்கு பொறுமை அவசியம்.

**2. தோழமை (Friendship with your Spouse)**

புத்தியுள்ள பெண்ணே கணவனின் நெருங்கிய நண்பனாகவும் புத்திசாதுரியமான ஆணே மனைவியின் சிறந்த நண்பனாகவும் இருக்க முடியும். பெண்; மனைவி, நண்பன் ஆகிய இருவரது பங்கினையும் ஆற்றுகின்றாள். தம்பதியினர் சினேகிதர்களாக வாழும் போது வெளியிலிருந்து வரும் தலையீடுகளையும் அழுத்தங்களையும் குறைக்கலாம். சினேகிதம் என்பது கண்ணியப்படுத்தல், நம்பிக்கை வைத்தல், கௌரவித்தல், ஏற்றுக் கொள்ளல், பராமரித்தல் (Honour, Trust, Respect, accept and Care) போன்ற பண்புகளின் தொகுப்பாகும்.

கணவனின் நண்பன் மனைவியின் நண்பி ஆகியோரது நலன்களும் கணவனது அல்லது மனைவியினது நலன்களோடு முரண்படும்போது கணவனின் அல்லது மனைவி யின் நலன்களுக்கே முன்னுரிமை வழங்க வேண் டும். வெளிநட்பு உள்ளார்ந்த குடும்ப வாழ்வை விட முக்கியத்துவம் பெற்றுவிட்டால் தம்பதியின ரிடையே விரிசல்கள் ஏற்பட்டு விடலாம்.

**3. ஓய்வு (Fun)**

தம்பதியினர் தாம் ஓய்வாகவும் தளர்வாகவும் இருப்பதற்கு ஒரு சிறு நேரத்தையேனும் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். தம்பதியினர் தமக்குள் நகைச்சுவைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். சில நிமிடங்கள் விளையாடலாம். ஒரு பூங்காவில் சிறிது நேரம் கால் நடையாகச் சென்று உலா வரலாம். இவை இருவருக்கும் இடையிலான உறவினைப் பலப்படுத்தும்.

**4. நிதித் திட்டமிடல் (Financial Planing)**

பணமும் பொருளாதாரமும் குடும்ப வாழ்வில் மிக அவசியம். 80%மான திருமணங்கள் முரண்பாட்டில் முடிவதற்கும் மணமுறிவுகள் தோன்றவும் பணமும் காரணமாக இருந்துள்ளது. எனவே, அடிப்படையான தேவைகளைப் பூர்த்தி செய்ய அவசியமான நிதியைத் திட்டமிடுதல் வேண்டும். இந்த நிதி முகாமைத் திட்டமிடல் தம்பதியினரின் உடன்பாட்டுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஒரு முறை அதனை மீள்பரிசீலனை செய்யலாம். இதன் ஆரம்பக் கட்டமாக தம்பதியினர் இணைந்து ஒரு வீட்டுப் பாதீட்டை (Home Budjet) தயாரிக்கலாம்.

**5. சுதந்திரம் (Freedom)**

திருமணம் ஓர் அடிமைச் சாசனம் அல்ல. தம்பதியினரிடையே பரஸ்பர சுதந்திர உணர்வு நிலவ வேண்டும். இங்கு சுதந்திரம் என்பது கட்டற்ற, எல்லை மீறிய சுதந்திரத்தைக் குறிக்கவில்லை. அவரவர் பெறுமானங்களுக்கேற்ப சுவாரஸ்யமான விடயங்களில் ஈடுபடுவதற்கான விருப்பத் தேர்வையே சுதந்திரம் என்கிறோம். ஓர் கணவனோ மனைவியோ தனது அறிவையும் ஆன்மீகத்தையும் தொழிலாற்றலையும் வளர்த்துக் கொள்ள பூரண சுதந்திரம் இருக்க வேண்டும்.

தம்பதியினர் ஒருவருக்கொருவர் பரஸ்பர அமானிதங்கள். குழு மனப்பான்மையுடன் (Team Spirit) தம்பதியினர் செயலாற்ற இருவருக்கும் சுதந்திர உணர்வு வேண்டும். தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவுசெய்ய சுதந்திரமே அடிப்படை நிபந்தனையாகின்றது.

**6. எதிர்காலத் திட்டமிடல் (Futuristic Plan)**

கணவனோ மனைவியோ தொழில் செய்பவராக விளங்கினால் ஓய்வு பெற்றதன் பின் தமது முதுமைப் பருவத்தில் எதிர்கால வாழ்வைப் பயனுள்ள, திருப்தியான வகையில் கழிப்பதற்கான ஒரு திட்டத்தை முற்கூட்டியே வகுத்துக் கொள்ள வேண்டும். தமது பிள்ளைகளின் கல்வி, தொழில், திருமணம் தொடர்பாகவும் சில தெளிவான திட்டமிடல்களும் நிலைப்பாடுகளும் தம்பதியினருக்கு அவசியம்.

எரிக்சனின் கருத்தில், "திட்டமிட்ட செயற்பாடுகள் இல்லாத முதுமைத் தம்பதியினர் உளரீதியான பாதிப்புகளுக்கு பெரிதும் உட்படுகின்றனர்." எனவே, எதிர்காலத்தை ஆக்கபூர்வமான முறையில் கழிப்பதற்கான திட்டத்தை முற்கூட்டியே வகுத்துக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலின்... (01 ஆம் பக்கத் தொடர்)

அவர் மேலும் கூறும் போது, மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய தேசியக் கட்சியே ஜனாதிபதியாக்கியது. பாராளுமன்றத்தின் பெரும்பான்மையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே இருக்கிறது. நல்லாட்சி அரசை தொடர்ந்தும் கொண்டு செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்களை வேண்டாமென்றால் நாங்கள் தனியாகப் பயணிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது எக்காரணம் கொண்டும் ஜனாதிபதியை விமர்சிக்க

வேண்டாம் என பிரதர் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தடை விதித்துள்ளார். ஜனாதிபதிக்கு எதிராக விமர்சனம் முன்வைத்தமைக்கு ஐ.தே.கட்சியினர் மன்னிப்புக் கேட்க வேண்டுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சி விஷேட செயற்குழுக் கூட்டத்தில் பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த அறிவிப்புக்கள் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடையே அதிருப்தியை உருவாக்கியுள்ளதோடு, இந்த நிலையில் அரசாங்கம் நடத்த முடியாது எனவும், அரசாங்கத்திலிருந்து வெளியேறி தனியாக ஆட்சி நடத்துவதே பொருத்தமானது எனவும் அவர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

## இறுதித் தருவாயில்... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கென பொதுமக்களிடமிருந்து அபிப்பிராயங்கள் பெறப்பட்டதற்கு மேலதிகமாக, குறித்த குழுவினர் நாட்டின் 25 மாவட்டங்களுக்கும் சென்று பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தனர். தனி நபர்களிடமிருந்தும் சிவில் நிறுவனங்களிடம் இருந்தும் கருத்துக்களும் முன்மொழிவுகளும் பெறப்பட்டன. முஸ்லிம் தரப்பின் சார்பில் தேசிய சூறா சபையும், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் பேரவையும் இணைந்து முன்மொழிவுகளைச் சமர்ப்பித்திருந்தது.

சமர்ப்பிக்கப்பட்ட எல்லா முன்மொழிவுகளும் கவனத்தில் எடுக்கப்பட்டன. சில முன்மொழிவுகள் பிறிதொரு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுடன் முரண்படும் வகையில் அமைந்திருந்தன. இவற்றுக்கிடையில் பொதுவான இணக்கப்பாடொன்றை ஐவர் அடங்கிய இந்தக் குழுவினர் அடைந்திருக்கின்றனர். முழுமையான அறிக்கை தற்போது இறுதிப்படுத்தப்பட்டு வருகிறது என அவர் மீள்பார்வைக்குத் தெரிவித்தார்.

## மாது மது... (01 ஆம் பக்கத் தொடர்)

பெண்கள் விமானமோட்ட முடியுமென்றால் ஏன் அவர்கள் விடுதிகளில் வைன் விநியோகிக்க முடியாது, ஒரு பெண் வைன் வாங்கிக் குடிப்பதைத் தடுப்பதற்கு நாங்கள் யார், இது மது விற்பனைத் தடைக்கு அப்பால் ஒரு பால்பாகுபாடு என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன, 90 வீதமான இலங்கைப் பெண்கள் மது அருந்துவதில்லை. இந்தத் தடையை நீக்குமாறு அவர்கள் கோரவுமில்லை. அதனாலேயே ஜனாதிபதி இந்தத் தடையை மீளவும் கொண்டுவந்தார் எனத் தெரிவித்தார்.

நாட்டில் பால் சமத்துவத்தைப் பேணுவதற்கும், உல்லாசத்துறை, களியாட்ட நிகழ்வுகளை ஊக்குவிப்பதற்குமெனவே 1955 ஆம் ஆண்டிலிருந்து அமுலிலுள்ள சட்டத்தை திருத்துவதற்கு முயற்சித்ததாக அமைச்சரின் தரப்பிலிருந்து சொல்லப்படுகிறது. இதற்கு மேலதிகமாக மதுபானசாலைகள் திறந்திருக்கும் நேரத்தை அதிகரிப்பதற்கான சட்டத்தையும் அமைச்சர் இந்த வர்த்தமானி அறிவித்தலில் இணைத்துள்ளார். கடந்த ஜூன் மாத பாராளுமன்ற அமர்வின்போது, போயா தினங்களில் மதுபான விற்பனை அதிகமாக உள்ளதால் போயா தினங்களிலும் மதுபான சாலைகளை திறப்பதற்கான முன்மொழிவொன்றினையும் அவர் முன்வைத்திருந்தார்.

இலங்கையில் மதுபானம் உட்கொள்ளும் தலாவீதம் ஐரோப்பிய நாடுகளை விட ஐந்து மடங்கு அதிகமாகும். தெற்காசியாவில் மதுபானம் உட்கொள்ளும் தலாவீதத்தில் இலங்கையும் தாய்லாந்துமே முன்னணி வகிக்கின்றன.

இலங்கையில் 35 வீதமான ஆண்களும் 3 வீதமான பெண்களும் மதுபானம் அருந்துவதாக புகையிலை மற்றும் மதுபானத்துக்கான தேசிய அதிகாரசபை (NATA) தெரிவிக்கிறது.

## பள்ளிவாசல்களின்... (11 ஆம் பக்கத் தொடர்)

அதனால் இந்நாட்டின் எதிர்காலப் பரம்பரையினரைப் போதைப்பொருள் அரக்கனின் பிடியிலிருந்து பாதுகாப்பதற்காக ஒவ்வொருவரும் உழைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதுவும் தவிர்க்க முடியாத தேவையாக மாறியுள்ளது. அதன் காரணத்தினால் போதை அரக்கனில் இருந்து இந்நாட்டினரைப் பாதுகாப்பதற்காக சமூக நிறுவனங்களும், சமய வழிப்பாட்டு தளங்களும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

குறிப்பாக இந்நாட்டின் எதிர்கால மனித வளத்தைப் போதைப்பொருட்களில் இருந்து பாதுகாப்பதற்காக பள்ளிவாசல்களும் பங்களிப்பு செய்ய வேண்டும். இதனை காலம் வழங்கியுள்ள ஒரு சமூகப் பொறுப்பாகக் கருதி செயற்படுவது அவசியம். இப்பொறுப்பிலிருந்து பள்ளிவாசல்கள் தவிர்ந்து கொள்ளக் கூடாது. இதன் நிமித்தம் மிம்பர் மேடைகள் உச்சளவில் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஏனெனில் நாட்டில் போதைப் பொருள் விற்பனையும், பாவனையும் இல்லாத கிராமங்களே இல்லை என்ற அளவுக்கு நிலைமை வளர்ச்சி அடைந்திருக்கின்றது. சமூகத்தில் செல்வாக்கு பெற்றவர்கள் கூட போதைப்பொருள் கடத்தலையும், விற்பனையையும் ஒரு தொழிலாகச் செய்யும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. இவர்களது செயற்பாட்டினால் எமது வளமான சந்ததியினரின் எதிர்கால வாழ்வு பாழ்படுத்தப் படுகின்றது. அதனால் நாட்டின் மேம்பாட்டுக்காகவும், சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் கிராமங்களும் நகரங்களும் போதை அரக்கனின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். அதற்காகப் பொலிஸ் துறையோடும், சட்டத்துறையோடும் இணைந்து செயற்படவும் பள்ளிவாசல்கள் முன்வர வேண்டும். தற்போது நாடு மிக மோசமான பேராபத்தை எதிர்நோக்கி இருக்கின்றது. இற்றைக்கு இருபது முப்பது வருடங்களுக்கு முன்னர் முஸ்லிம் பிரதேசங்களில் மது உள்ளிட்ட போதைப்பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பள்ளிவாசல்கள் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டன. அதன் பயனாக போதைப்பொருள் பாவனை அற்ற பிரதேசங்களாக முஸ்லிம் பிரதேசங்கள் விளங்கின. ஆனால் இன்று நிலைமை தலை கீழாகியுள்ளது.

ஆகவே நாட்டையும், நாட்டு மக்களையும் போதைப்பொருள் அரக்கனிலிருந்து இப்போதே பாதுகாக்க வேண்டும். அப்பணியில் பள்ளிவாசல்களும் பங்காளர்களாக வேண்டும். தவறும் பட்சத்தில் நாடும் நாட்டு மக்களும் போதை அரக்கனால் சீரழித்து சிதைந்து போவதைத் தவிர்க்க இயலாது.

## யானையை மரத்தில்... (03 ஆம் பக்கத் தொடர்)

மக்களுக்கு மு.கா.வின் இலச்சினை தான் தெரியுமேயொழிய மு.கா.வின் இலட்சியத்தை அவர்கள் எங்குமே கண்டதில்லை. இந்த நிலையில் வாக்குச் சீட்டில் மரச் சின்னத்தைக் காணாமல் தேடும் வாக்காளர்கள் இறுதியில் தமது வட்டாரத்தில் அதிகம் பரிச்சயமுள்ள சின்னங்களுக்கே புள்ளடியிட வேண்டிய நிலையை முஸ்லிம் காங்கிரஸ் களத்தில் உருவாக்கியிருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸுக்கு இந்த மரச் சின்னம் எவ்வளவு முக்கியமானது என்பதை, முஸ்லிம் காங்கிரஸ் தனியாகத் தேர்தலில் நிற்கும் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள "இறைவன் கொடுத்த வரம் மனதில் செழித்த மரம்" என்ற வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. இந்த மரச் சின்னத்தையே விட்டு விட்ட பின்னர் இனி முஸ்லிம் காங்கிரஸை விட்டு விடுவது மக்களுக்கு ஒன்றும் பெரிய விடயமல்ல.

இனி மண்குதிரை நம்பி மரம் நாட்டிய நிலைதான் ஐ.தே.க.வுக்குத் தாரை வார்க்கப்பட்ட மு.கா.வுக்கு இந்தத் தேர்தலில் ஏற்படப்போகிறது.

இறுதியாக, மஹிந்த ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வாகவே முஸ்லிம் சமூகம் ஒன்று திரண்டு முஸ்லிம் கட்சிகளை மைத்திரிக்கு ஆதரவளிக்கச் செய்தது. பின்னர் வந்த பாராளுமன்றத் தேர்தலில் மு.கா. மக்களிடம் கேட்காமலேயே ஐ.தே.க.வுக்கு ஆதரவளித்தது. ஆனாலும் மைத்திரி-ரணில் அரசினால் இன்று வரை திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் தட்டிக் கேட்பதற்கோ, சுட்டிக் காட்டுவதற்கோ முஸ்லிம் கட்சிகளினால் முடியவில்லை. காரணம், அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் நலனை முன்னிறுத்திய எந்த உடன்படிக்கைகளையும் அவர்களுடன் செய்து கொள்ளவில்லை. இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் அதே பாவத்தைத் தான் முஸ்லிம் கட்சிகள் முஸ்லிம் சமூகத்துக்குச் செய்திருக்கின்றன.

இந்த நிலையில் யானையை இழுத்து வந்து மரத்தில் கட்டியதாக மு.கா. நம்பிக் கொண்டிருக்கும் மாயையின் நகல் விம்பம் இந்தத் தேர்தலில் தெரியப் போகிறது. யானையின் தீனியே மரம் தான். முண்டு கொடுக்க வேண்டிய வாழை மரத்தில் அந்த யானையைக் கொண்டு வந்து கட்டிவிட்டு அதைக் கெட்டித் தனமாகப் பார்க்கும் பரிதாப நிலை இனி யாருக்கும் வர வேண்டாம்.

## முஸ்லிம் அரசியல்... (03 ஆம் பக்கத் தொடர்)

முஸ்லிம்களைக் கொண்டுள்ள பொத்துவில் பகுதிக்கு குறைந்தளவு காணியே வழங்கப்பட்டது. யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டபின் முற்றிலும் வித்தியாசமானதோர் நோக்கத்திற்காக எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட்டது. அது அரச கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளையும் விடுதலை புலிகளின் கட்டப்பாட்டில் இருந்த பகுதிகளையும் பிரித்து அறிந்து கொள்வதற்கான எல்லை மீள்நிர்ணயமாக இருந்தது.

அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு மாகாண சபைகள் முறை மூலம் அதிகாரப் பகிர்வை வழங்கும் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையை அமுல் செய்வதற்காக அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுலுக்கு கொண்டு வந்தது. இது சமஷ்டி எண்ணக் கருவுக்கு பெரும்பாலும் இசைவானது. இதை இந்தியாவின் ஆக்கிரமிப்பாகவும் நாட்டை ஆக்கிரமிப்பதற்கான ஒரு சூழ்ச்சியாகவும் சிங்கள மக்கள் நோக்கினர்.

இந்த உடன்படிக்கையானது முஸ்லிம்களை அவமானப்படுத்தும் ஒன்றாகும். ஏனெனில் அவர்களின் தலைவர்களோடு இந்த விடயத்தில் ஆலோசனை நடத்தப்படவில்லை. இந்த உடன்படிக்கையின் ஒரு இடத்திலாவது முஸ்லிம் என்ற சொற்பிரயோகம் கூட பாவிக்கப்படவில்லை. வேண்டுமென்றே அது கைவிடப்பட்டிருந்தது. மோதல் பிரதேசங்களில் உள்ள முஸ்லிம் தலைமைத்துவங்கள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முஸ்லிம்களுக்கு எதிரான ஒட்டுமொத்த துரோகம் என பிரகடனம் செய்தனர்.

விடுதலைப் புலிகளின் நேரடி நிர்வாகத்தின் கீழ் அவர்களின் அறிவுறுத்தல் படி செயற்பட்ட பல அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் மூலம் வடக்கு கிழக்கில் இருந்த தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட்டன. அதேபோல் தெற்கில் உள்ள சிங்கள மக்களின் அபிலாஷைகள் தென் பகுதி அரசியல் தலைமைகளால் பூர்த்தி செய்யப்பட்டன.

இந்த உடன்படிக்கை மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு தம்மை தாமே ஆளும் உரிமை மறுக்கப்பட்டது. அவர்களது அபிலாஷைகளும் நலன்களும் முற்றாக ஓரம் கட்டப்பட்டன. பல்வேறு போர்வைகளில் முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளை பறிப்பது இன்றும் தொடர்கதையாகிவிட்டது.

உதாரணத்துக்கு ஒரு ஐ.தே.க அமைச்சர் பொத்துவில் தொடக்கம் கல்முனை வரையான முஸ்லிம்களின் காணிகளில் 12000 ஏக்கர் தீகவாபிக்கு சொந்தமானது என உரிமை கோரினார். எவ்வாறேனும் இதில் 500 ஏக்கர் மட்டுமே அவர் கூறுவது போல் தீகவாபிக்கு சொந்தமானது என முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப் நிரூபித்தார்.

முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் சரிசமமாகப் பகிரத் தக்க வகையில் அவர்கள் 42 குடியிருப்புக்களை உருவாக்கினர். ஆனால் அதில் 36 குடியிருப்புக்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். எட்டு குடியிருப்புக்கள் மட்டுமே முஸ்லிம்களுக்கு விட்டு வைக்கப்பட்டன. ஆனால் அவற்றில் கூட முஸ்லிம்களால் குடியேற முடியவில்லை. சிங்களவர்களே அவற்றையும் பிற்காலத்தில் அபகரித்துக் கொண்டனர்.

முஸ்லிம்களை புறம்பான ஒரு தேசிய இனக்குழுவாக பார்ப்பதற்கு தகுதியான பல காரணங்கள் இருக்கின்றன. இதில் மிகவும் முக்கியமானது அவர்கள் நல்ல பிரஜைகளாக இந்த நாட்டில் வாழுவது. அவர்கள் எந்தக் கட்டத்திலும் தங்களது உரிமைகளை வெல்லுவதற்காக அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் ஒன்றை தொடங்கவில்லை. ஆயுதப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபடவில்லை என்பதை வைத்து அவர்களை தகுதி குறைந்த ஒரு சமூகமாக நோக்கவும் கூடாது.

அரசுக்கு எதிராக யுத்தம் புரிந்தவர்கள் தான் உரிமைகளைப் பெறத் தகுதியானவர்கள் என்று கருதுவதாக இருந்தால் அது யுத்தத்தில் ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டதையும் கோடிக்கணக்கான ரூபா சொத்துக்கள் இழக்கப்பட்டதையும் நியாயப் படுத்துவதாகவே அமையும். இன்னொரு விதமாகக் கூறுவதாயின் இது காட்டுச் சட்டத்துக்கே வழிவகுக்கும் அந்த சட்டத்தில் தான் பலம் பொருந்தியவர்கள் மட்டுமே வாழ முடியும்.

அபிவிருத்தியின் அடையாளமாகக் கட்டிடங்களை கட்டுவதிலும் பார்க்க இனங்களுக்கு இடையில் நல்லெண்ணம் கட்டி எழுப்பப்பட வேண்டும். ஆதன் அடிப்படையில் தான் அபிவிருத்தி முன்னெடுக்கப்பட வேண்டும். இங்கே மிகவும் பரிதாபகரமான விடயம் என்னவென்றால எமக்கு ஆலோசனை வழங்குவதற்காக வரும் வெளிநாட்டு சக்திகள் தாங்களும் இந்தப் பிரச்சினையில் மாட்டிக் கொண்டவர்களாக மாறிவிடுகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸின் கொள்கையாலும் அதிலிருந்து பிரிந்து சென்ற குழுக்களின் பல்வேறு பேரம் பேசலின் அடிப்படையிலும் சலுகைகளுக்காக அரசுடன் இணைந்து கொள்வதாலும் இந்தப் பிரச்சினை மேலும் மோசமாக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு புறம் பேய்க்கும் மறுபுறம் ஆழ்கடலுக்கும் இடையில் சிக்கிக் கொண்ட சமூகமாக முஸ்லிம் சமூகம் மாறியுள்ளது. இதனால் அவர்களின் உரிமைகளும் சூறையாடப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று முதல் நான்கு தசாப்த காலமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அதிலிருந்து பிரிந்து சென்ற அணிகளின் அல்லது குழுக்களின் கேவலமான சுயநல அரசியல் பேரம் பேசல் காரணமாகவும் ஊழல் மற்றும் ஒழுக்கக் கேடான நடவடிக்கை என்பனவற்றாலும் அவர்களை நம்பிய முஸ்லிம் சமூகம் இன்று படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இவர்களின் இந்த கேவலமான போக்கின் காரணமாக ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையும் மற்றவர்கள் நம்பிக்கைத் துரோகிகளாக பார்க்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வெட்கக் கேடான அரசியல் கலாசாரத்துக்கு முற்றுப் பள்ளி வைக்கப்பட வேண்டிய நேரம் இப்போது வந்துள்ளது.

இந்நிலையில் வெறுமனே சுயநலத்துக்காக மட்டும் அரசாங்கத்தோடு இணையாமல் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை கையாள்வதற்காக அரசாங்கத்தோடு இணைய வேண்டிய தேவை உள்ளதாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர். இங்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு கையாளும் கொள்கையை சிலர் உதாரணமாகக் காட்டுகின்றனர். அவர்கள் அரசாங்கத்தோடு இணையவில்லை. மாறாக அரசுக்கு வெளியே இருந்து ஆதரவளித்துக் கொண்டு தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர். தமிழ் சிவில் சமூகமும் இந்த விடயத்தில் விழிப்புடன் செயற்படுகின்றது. இதே போக்கை தான் முஸ்லிம் சமூகமும் பின்பற்றி கேவலமான அரசியல்வாதிகளின் அரசியல் கலாசாரத்தால் அந்த சமூகம் தற்போது இழந்துள்ள தனது கௌரவத்தை மீண்டும் நிலை நாட்டிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான செயற்பாட்டின் மூலம் தான் சமூகம் அதன் நன்மைகளைப் பேணிக் கொள்ள முடியும். அதன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். குறிப்பாக இனவாத செயற்பாடுகளால் முஸ்லிம்களிடம் இருந்து பறிக்கப்பட்ட காணிகளை மீட்கவும், ஏனைய உரிமைகளை வென்றெடுக்கவும் இதுவே சிறந்த வழியாகும். இன்றைய காலகட்டத்தின் அவசரத் தேவை முஸ்லிம் அரசியல் இழந்துள்ள கண்ணியத்தை மீட்டெடுப்பதாகும். முஸ்லிம் சமூகம் இழந்துள்ள கௌரவத்தை மீண்டும் கட்டி எழுப்புவதாகும். ஆனால் கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள அரசியல் குதிரைப் பந்தயத் திடலை அவதானிக்கின்ற போது இந்த எதிர்ப்பார்ப்பு இன்னும் பல தசாப்தங்களுக்கு வெறும் கனவாகவே இருந்து விடுமோ என்று தான் எண்ணத் தோன்றுகின்றது.

முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நியாயத்தை வழங்கும் செயற்பாடுகள் காலா காலமாக அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசுகளால் அலட்சியப்படுத்தப்பட்டே வந்துள்ளன. இதை நியாயப்படுத்தும் வகையில் கால அவகாசங்களின் கீழ் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். ஆனால் இன்றைய கூச்சல் குழப்பம் மிக்க தேசிய அரசியல் அரங்கிலும் அதில் முஸ்லிம் அரசியல் வாதிகளினதும் அரசியல் கட்சிகளினதும் கேவலமான பங்களிப்பின் பின்னணியிலும் முஸ்லிம் மக்களின் இந்த நியாயமான கனவு நனவாகுமா என்பதே இன்றைய முக்கியமான கேள்வி.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 | ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| 12 இதழ்கள் | ரூபா 600.00 | தனிப் பிரதி | ரூபா 100.00 | மலேசியா | 4000.00 | அமெரிக்கா | 6500.00 |
| 24 இதழ்கள் | ரூபா 1200.00 | ஒரு வருடம் | ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | 4000.00 | அவுஸ்திரேலியா | 4700.00 |
| | | | | | | சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline 0777581661 People's Bank A/c: 055100155078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலக்கை எப்படி நிர்ணயிப்பது?




தொகுப்பு: அஸாருதீன்

Goal Post இல்லாத கால்பந்து விளையாட்டு, செல்லுமிடம் தெரியாத கடற்பயணம் - இவைகளைக் கற்பனை செய்து பாருங்கள். முன்னது அர்த்தமற்ற நேர விரயம்; பின்னது ஆபத்தான நிலை குலைய வைக்கும் செயல்பாடு; இலக்கில்லா வாழ்க்கையும் இந்த வகையையே சாரும்.

நமது ஒவ்வொரு எண்ணமும் ஒரு செயலைக் குறிக்கும். ஒவ்வொரு செயலும் ஓர் இலக்கைக் குறிக்கும். ஒவ்வொரு இலக்கும் ஒரு வெற்றியைக் குறிக்கும். ஒவ்வொரு வெற்றியும் நம் சாதனைப் பட்டியலில் இடம்பெறும். சாதனைப் பட்டியல் நாம் வாழ்வாங்கு வாழ்ந்தோம் என்பதற்கான பகிரங்க அடையாளம். சுருங்கச் சொல்லின் இலக்கில்லா வாழ்க்கை என்பது அச்சாணி இல்லாத வண்டிக்குச் சமம்.

அது போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேராது. இத்தகைய இலக்கை நிர்ணயிப்பது எப்படி? அதை அடைவது எப்படி? - பார்ப்போம்!

### இலக்கு என்றால் என்ன?

''நமக்கு வேண்டியது என்ன என்பதை விஞ்ஞான ரீதியில் நிர்ணயித்து, அதை முறையாக திட்டமிட்டுக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அடைவதே 'இலக்கு' எனப்படும்.''

### இலக்கின் வகைகள்

1. குறுகிய கால இலக்கு:
   6 மாதம் - 1 வருடம்
2. மத்திய கால இலக்கு:
   1 - 3 வருடம்
3. நீண்ட கால இலக்கு:
   3 - 5 வருடம்

இலக்கை நிர்ணயித்தல் எப்படி? (How to Set your Goal) - Wiseman

Why this Goal - ஏன் இந்த இலக்கு?

ஏன் இந்தக் குறிப்பிட்ட இலக்கை நிர்ணயிக்கின்றோம் - மிகவும் முக்கியமா, விருப்பமா, தேவையா, அவசரமா நமது வளர்ச்சிக்குத் தேவையான மிகவும் முக்கிய அவசரமாக (குறுகிய கால இலக்கு) முடிக்க வேண்டிய இந்தக் குறிப்பிட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற Is it realistic / possible? சாத்தியமான இலக்குதானா?

நடைமுறைச் சாத்தியமான, அடையக் கூடிய இலக்கை நிர்ணயித்தல் வேண்டும். ''ஆறு மாதத்திற்குள் அமெரிக்க ஜனாதிபதி ஆவேன்'' - போன்ற கற்பனைகளைத் தவிர்க்க வேண்டும். மற்றவர்களைப் பார்த்துக் காப்பி அடித்து வீம்புக்கு இலக்கை நிர்ணயித்தல் முறையாகாது.

### இலக்கைத் தேர்ந்தெடுத்தல்

இலக்கை நிர்ணயிக்கும்போது அது யாரைச் சார்ந்து இருக்கிறது என்பதை அவதானிக்க வேண்டியது அவசியம். தனிப்பட்ட குறிக்கோள், குடும்பம் சார்ந்த குறிக்கோள், சமூகம் சம்பந்தப்பட்ட குறிக்கோள் - இவற்றில் தேர்ந்தெடுக்கும் இலக்கு எவ்வளவு நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். சமூகம் சார்ந்த இலக்கினை நிர்ணயிக்கும்போது சற்று முன் யோசனையுடனும் கலந்து ஆலோசித்தும் எடுத்தல் நலம் தரும். குடும்பம் சார்ந்த இலக்கில், குடும்பத்தார் அனைவரும் இணைந்து பணியாற்றுதல் சிறப்பு.

### குறைகளை தவிர்த்தல்

இலக்கை நிர்ணயித்தபின், நமது முயற்சிகள் நீர்த்துப் போகா வண்ணம் இலக்கின் மீது விடாப்பிடியான பற்றுடன் இருத்தல் வேண்டும். இலக்கை நிர்ணயித்த பின் பாதி முயற்சியில் திடீரென்று வேறு இலக்கிற்கு தாவுதல் கூடாது.

இலக்கை நிர்ணயிப்பதில் முனைப்பின்றி (Lack of Seriousness) இருத்தல் வெற்றி தராது.

எழுத்தில் வடிக்காத இலக்கு எழுச்சி பெறாது. ஏற்றம் பெறாது. ஊக்கம் தராது. நினைவில் இராது.

### இலக்கின் பாகுபாடுகளைப் பொருத்துதல்

- Most important - அ - மிகவும் முக்கியம்
- Most urgent - மிகவும் அவரசம்
- Most desired - மிகவும் விரும்புவது
- Skill oriented - திறன் சார்ந்தது
- Knowledge oriented - அறிவு சார்ந்தது
- Physical work oriented - உடலுழைப்பு சார்ந்தது

உதாரணமாக நீங்கள் ஓர் ஓட்டப் பந்தய வீரராக வேண்டும் என்ற இலக்கானது 'CZ' எனப் பாகுபடுத்தப்படும். ஓர் 'IAS' ஆக வேண்டும் என்றால் 'AY' என்ற பாகுபாட்டின் கீழ் வகைப்படுத்தலாம். இலக்கை விஞ்ஞான பூர்வமாக நிர்ணயிப்பதற்கு இந்தப் பாகுபாடு உதவுகிறது.

### உங்கள் தகுதிசார் திறனை ஆராய்ந்து பார்க்கவும்

- குறிக்கோள் (கனவு) - Ambition
- பலம் - Strength
- விருப்பம் (ரசனை) - Taste
- பணம் - Money

உங்கள் இலக்கானது மேற்குறிப்பிட்ட தகுதிசார் திறன்களை ஆராய்ந்து, அதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

### Never Underestimate

உங்களையோ அல்லது உங்கள் இலக்கையோ ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள். 'என்னால் இது முடியுமா' என்ற எண்ணம் வேண்டாம். உங்களால் முடியும் என்ற உறுதிப்பாட்டில் உங்கள் இலக்கினை நிர்ணயுங்கள்.

### இலக்கை அடைதல்

விஞ்ஞான பூர்வமாய் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை உங்கள் முயற்சியினால் சுலபமாக அடைய முடியும். ஒருபோதும் மனந் தளர வேண்டாம். கடினமான இலக்கை சிறு சிறு பிரிவுகளாக மாற்றிச் செயல்படுத்தலாம். அதீத ஈடுபாடோ அல்லது மெத்தனமோ வேண்டாம். இலக்கை அடைந்து விட்டதாக மனக் கண்ணில் காட்சிகளை ஓடவிட்டுக் காணுங்கள். (visualisation)

இவ்வாறு சிறிது முயற்சியும், சிறிது நேரமும் சீரிய முறையில் செலவழிக்கப்பட்டு, சிக்கலின்றி இலக்கை நிர்ணயித்து சிறப்பாக அதை அடைந்தால், சரித்திரமும், சந்ததியும் உங்களை ''சாதனையாளன்'' என வாழ்த்தும்.

---

# தமிழ்ச் சிறுகதையின் புதிய முகங்கள்!

எஸ்.ராமகிருஷ்ணன்

தமிழ்ச் சிறுகதை உலகம் ஒவ்வொரு பத்தாண்டிலும் ஒரு புதிய எழுச்சியைச் சந்தித்திருக்கிறது. புதிய முகங்களாக இளம் எழுத்தாளர்கள் அறிமுகமாகி, முந்தைய சிறுகதைகளின் வடிவத்தை, கதைக்களன்களை, மொழியைப் புத்துருவாக்கம் செய்வார்கள். 2010-க்குப் பிறகு எழுதத் தொடங்கிய இன்றைய இளம் எழுத்தாளர்களிடமும் அந்த வீச்சை, பங்களிப்பை, தொடர்ச்சியைக் காண முடிகிறது.

இளம் தலைமுறை எழுத்தாளர்களின் சிறுகதைகளை அச்சிலும் இணையத்திலும் தேடி வாசித்து வருபவன் என்ற முறையில், என் வாசிப்பில் விருப்பத்துக்குரிய சிறுகதை ஆசிரியர்களாக கே.என். செந்தில், மாரி செல்வராஜ், நரன், போகன் சங்கர், தூயன், சுனில் கிருஷ்ணன், அகரமுதல்வன், கார்த்திக் புகழேந்தி, ஜீவகரிகாலன், எல்.ஜே. வயலட், நர்சிம், கே.ஜே. அசோக்குமார், கிருஷ்ணமூர்த்தி, சித்துராஜ் பொன்ராஜ், கருத்தடையான், ரமேஷ் ரக்சன், கீரா, விஷால் ராஜா, குமார் அம்பாயிரம், அனோஜன், நவீன், எம்.கே.குமார், கனவுப்ரியன், சிங்கப்பூர் லதா, மாதங்கி, பிரபு மயிலாடுதுறை, ஏ.ஜே.டேனியல், ஹசீன், கணேசகுமாரன், ஹரி கிருஷ்ணன், சசிகலா பாபு, ஜி.கார்ல் மார்க்ஸ் போன்றோரைக் கருதுவேன்.


### புதிய கதைக்களன்

இவர்களின்றி வார, மாத, இலக்கிய இதழ்கள், இணையம் எனச் சிறுகதைகள் ஏராளமாக வெளியாகி வருவதால், நான் வாசித்தறியாத இளம் படைப்பாளிகள் பலரும் இருக்கக்கூடும்.

தமிழ்ச் சிறுகதைகள் இதுவரை கண்டிராத புதிய கதைக்களன்களை, மனிதர்களை, அனுபவங்களை பிரச்சினைகளை விவரிக்கிறது என்பதே இன்றைய சிறுகதைகளின் தனிச்சிறப்பு. குறிப்பாக, உடலின் மீதான அதிகாரம் மற்றும் வன்முறையை எழுதுவதிலும், பிம்பங்களால் துன்புறுத்தப்படும் மனநிலை பற்றியும், விலக்கப்பட்ட, மறுக்கப்பட்ட, பேசப்படாத நிகழ்வுகளை, பிரச்சினைகளை அனுபவங்களை, இருண்மையை எழுத்தில் கொண்டு வருகிறார்கள்.

வாழ்வின் நுண்தருணங்களைக் கதையாக்கிய முந்தைய தலைமுறைக்கு மாறாக, மீறல்களும் வன்முறையும் கொந்தளிப்பும் மரணமும் குடியும் குற்றமும் இன்றைய கதைகளின் பொதுஅம்சங்களாக உள்ளன. துண்டிக்கப்பட்ட, சிதறடிக்கப்பட்ட நிகழ்வுகளாகவே சிறுகதைகள் எழுதப்படுகின்றன.

ஒருவரின் சிறுகதையிலிருந்து ஒரு பத்தியைத் துண்டித்து இன்னொருவர் சிறுகதையில் எளிதாகச் சேர்த்துவிடலாம் என்பதுபோல ஒரே பாணி, ஒரே கூறல் முறை, ஒரே வகை சம்பவங்கள் இன்றைய சிறுகதைகளில் இடம்பெறுகின்றன. அதைப் பலவீனமாகக் கருதுகிறேன்.



சிறுகதை எழுத விரும்பும் இளம் எழுத்தாளர்களுக்குக் கடந்த தலைமுறை வரை ஆதர்சமாக இருந்தவர்கள், அவர்களின் மூத்த படைப்பாளிகளே. ஆனால், இன்றைய இளம் எழுத்தாளர்களுக்கு மொழிபெயர்ப்புக் கதைகளும் திரைப்படங்களும் செய்திகளும் இணையத் தொடர்களும் பாலுணர்வுப் பிரதிகளுமே ஆதர்சமாக உள்ளன.

தான் மரபின் தொடர்ச்சியில்லை. தானொரு தனித்துப் பறக்கும் பறவையென்று அடையாளப்படுத்தவே ஒவ்வொரு இளம் எழுத்தாளரும் விரும்புகிறார். இதன் காரணமாகத் தமிழ்ச் சிறுகதைகளின் சாதனையாளர்களை அவர்கள் எளிதாகப் புறந்தள்ளிவிடுகிறார்கள்.

### உலகச் சிறுகதைகளுக்கு இணையாக தமிழ்ச் சிறுகதைகள்

யதார்த்தம் குறித்த பழைய பார்வைகளை, கருத்தாக்கங்களைக் கடந்து செல்வது இன்றைய எழுத்தாளர்களின் பலம். ஆனால், கற்பனையின் வீச்சையும் பலத்தையும் சவாலையும் அவர்கள் முழுமையாக அறிந்திருக்கவில்லை. கதையின் வடிவம் பற்றிய பிரக்ஞையோ மொழியைக் கையாள்வதில் ஏற்படும் சவாலையோ சுயஅனுபவங்களுக்கு வெளியே கதையை எழுதுவதில் உள்ள போதாமையோ முழுதாக உணர்ந்திருக்கவில்லை.

காட்சிபூர்வமாக எழுதினால் போதும் கதை வெற்றியடைந்துவிடும் என்று இளம் எழுத்தாளர்கள் நம்புகிறார்கள். மௌனத்தையும், சொல்லாமல் விடப்படும் தருணங்களையும், கற்பனையின் எல்லையற்ற சாத்தியங்களையும், கற்றுக்கொள்ளத் தவறிவிடுகிறார்கள் என்பதே இன்றைய சிறுகதை ஆசிரியர்களின் மீதான விமர்சனம்.

தமிழைப் போல இந்தியாவின் வேறு எந்த மொழியிலும் இத்தனை விதமான சிறுகதை ஆசிரியர்கள் இருப்பார்களா என்பது சந்தேகமே. உலகச் சிறுகதைகளைக் கண்டு நாம் வியக்கிறோம். உண்மையில், அந்தக் கதைகளுக்கு இணையாகத் தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால், அக்கதைகளுக்கு உலக அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதே உண்மை.

### யதார்த்தம் நோக்கித் திரும்பிய சிறுகதைகள்

1990 வரை தமிழ்ச் சிறுகதைகளில் வடிவ ரீதியான, கதைகூறல் ரீதியாகப் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்திருக்கவில்லை. யதார்த்தக் கதைகளே பெரிதும் எழுதப்பட்டன. அதைக் கவித்துவமாகவும் நுட்பமாகவும் வட்டார வழக்கிலும் எழுதவே பலரும் முற்பட்டார்கள். ஆனால், 90-களில் லத்தீன் அமெரிக்க இலக்கியங்களின் அறிமுகமும், பின்நவீனத்துவ சிந்தனையும், நான்லீனியர் எழுத்தின் அறிமுகமும், சமூகம், அரசியல் சார்ந்த புதிய கோட்பாடுகளின் விவாதங்களும் சிறுகதை எழுத்தைப் புரட்டிப்போட்டன. மேஜிகல் ரியலிசம், நான்லீனியர், பின்நவீனத்துவம், நான்லீனியர் என வித்தியாசமான சிறுகதைகள் எழுதப்பட்டன. குறுங்கதை வடிவம் புத்துருவாக்கம் பெற்றது. அந்த மாற்றங்கள் யாவும் இரண்டாயிரத்துடன் முடிந்து போயின. மீண்டும் சிறுகதை யதார்த்தம் நோக்கித் திரும்பியது.

டிஜிட்டலின் வருகைக்குப் பிறகு, திரைப்பட உலகம் பெரும் மாற்றங்களைச் சந்தித்ததுபோலவே இணையத்தின் வருகையால் சிறுகதை உலகில் பெரும் மாற்றங்கள் உருவாகின. சிறுகதைகளை வெளியிடுவதற்குப் பத்திரிகைகளைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை என்ற புதிய சுதந்திரம் உருவானது. அதன்வழி காத்திரமான படைப்புகள் நேரடியாக இணையத்தில் வெளியாகின. அதே நேரம் குப்பைகளும் கசடுகளும் போலியான பாவனைகளைக் கொண்ட சிறுகதைகளும் நிரம்பி வழியத் தொடங்கின.

உலகம் முழுவதும் இன்று செவ்வியல் சிறுகதைகளுக்குத் திரும்புதல் என்ற போக்கு உருவாகியுள்ளது. கதை சொல்லுதலுக்கு உலகமே திரும்பிக்கொண்டிருக்கிறது என்பதே நிஜம். மீண்டும் ஆன்டன் செகாவும் எட்கர் ஆலன்போவும் பால்சாக்கும் டால்ஸ்டாயும் தஸ்தாயெவ்ஸ்கியும் துர்கனேவும் மாப்பசானும் காப்காவும் ரேமண்ட் கார்வரும் உயர்த்திப் பிடிக்கப்படுகிறார்கள்.

### உலகம் கொண்டாடும் கதை

உலக அரங்கில் செவ்வியல் தன்மை கொண்ட சிறுகதைகளை எழுதவே இன்றைய எழுத்தாளர்கள் விரும்புகிறார்கள். அது போன்ற சிறுகதைகளே கொண்டாடப்படுகின்றன. விருதுகள் பெறுகின்றன. உதாரணத்துக்கு, காப்காவின் உருமாற்றம் கதையின் நாயகன் கிரிகோர் சாம்சாவைத் தனது சிறுகதையில் மறுஉருவாக்கம் செய்கிறார் ஹருகி முராகமி. அக்கதையை உலகமே கொண்டாடுகிறது.

சமகால உலகச் சிறுகதைகள் தங்கள் தேசத்தின் அரசியலை, சமூகப் பிரச்சினைகளை, புலம்பெயர்தலின் துயரத்தை, போரை, பெண்களின் மீதான ஒடுக்குமுறையை, கைவிடப்பட்ட முதியவர்களின் துயரத்தை, மறைக்கப்பட்ட வரலாற்றை, கண்காணிக்கும் அதிகாரத்தை, மத இன சாதிய ஒடுக்குமுறைகளை, தொழில்நுட்ப சாதனங்களால் உருவான புதிய குற்றங்களைப் பேசுகின்றன.

உலகமயமாக்கலின் விளைவாக நுகர்வுக் கலாச்சாரம் மேலோங்கி எழுந்துள்ள சூழலில், அதை எதிர்கொள்ளக் கதைகூறலே ஆயுதமாகக் கருதப்படுகிறது. தமிழ்ச் சிறுகதையும் இந்த வழித்தடத்தில் பயணிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

நன்றி- www.sramakrishnan.com

---

## நடுசாமத்துக் கனவுகள்

இன்றென்னவோ
இருள் இன்னும்
இருமடங்காய் பன்மடங்காய்
அதிகரித்து
இயல்பிழந்து
விழிபிரண்டு
குந்திக் கிடக்கிறது
இரவு

''சிமிட்டும் நட்சத்திரங்கள்
எங்கே ?
பொன் வண்ண மேகங்கள்
எங்கே ?
மின்மினிகளின் இரைச்சல்கள்
எங்கே ?
மல்லிகையின் வாசனை
எங்கே ?
மந்தாரையின் பிரகாசம்
எங்கே ?
காற்றே உந்தன் வேகம்
எங்கே ?

யன்னல் கடக்கும்
காற்றிடம் காரணம்
கேட்கிறேன்

''பலஸ்தீன மயானங்களில்
இன்று
ஷுஹதாக்கள் தினமாம்
வாழ்த்துரைக்கப் போய்விட்டன
நீ கேட்ட எல்லாமே''

''மின்மினியாய்
பிறந்திருக்க வேண்டுமே''
என் தாடையில் வடித்த
கண்ணீரைத் துடைத்து
காற்று சொன்னது.

''அழுவதில் ஒன்றும்
பயனில்லை தோழா
ஒரு துளி இரத்தம் கொடு
கொண்டு போய்ச் சேர்க்கிறேன்
மீண்டும் ஒரு நாள்
நீ
அவற்றைச் சந்திப்பாய்
ஆனால்
அப்போது அக்ஸா
பலஸ்தீன எல்லாக்குள்
கம்பீரமாய் நின்றிருக்கும்''

உடுகொட யஹ்யா அய்யாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

# பாடசாலைகள் ரக்பி லீக் போட்டிகள் மார்ச்சில் ஆரம்பம்



இலங்கையின் மிகப் பெரிய பாடசாலை விளையாட்டு போட்டித் தொடரான பாடசாலை கள் ரக்பி லீக் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாக வுள்ளது. நாட்டின் ரக்பி புயலாக வீசவிருக்கும் இந்த லீக் போட்டி 2018 மார்ச் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த லீக் போட்டி நான்கு மாத காலம் தொடர்ந்து இடம்பெற்று ஜூன் மாதத்தில் நிறைவு பெறவுள்ளது.

நாட்டில் அதிகமானவர்களால் பார்க்கப்படுகின்ற மற்றும் கொண்டாடப்படுகின்ற பாடசாலைகள் ரக்பி லீக், இந்த ஆண்டில் ஒரு புதிய பாகமாக இடம்பெறவுள்ளதுடன் இதில் 3 பிரிவுகளில் 87 பாடசாலைகள் பங்கேற்கவுள்ளன.

பாடசாலைகள் ரக்பி கிரீடம் என்ற பொக்கிசத்துக்காக முன்னணி பாடசாலை அணிகள் பலப் பரீட்சை நடத்துவதால் போட்டித் தொடரின் A பிரிவான முன்னிலை தொடர் அதிகம் எதிர்பார்ப்பு கொண்டதாக உள்ளது.

கடந்த ஆண்டைப் போலவே போட்டித் தொடரில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் சுற்றுப் போட்டிகள் இடம்பெறும். முதல் ஐந்து வாரங்கள் முடிவில் 'IA' மற்றும் 'IIA' போட்டிகளில் முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் காணவிருப்பதோடு, குறித்த எட்டு அணிகளும் கிண்ணத்திற்காக கடுமையாகப் பலப் பரீட்சை நடத்தும். ஒவ்வொரு குழுவிலும் கடைசி இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் பிளேட் கேடயத்திற்காக 'B' பிரிவின் முதல் நான்கு அணிகளுடன் இணைக்கப்படும்.

போட்டியை நடத்தும் மைதானங்கள் கடந்த ஆண்டு போட்டி அட்டவணை அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது. கடந்த பருவத்தில் ஒருவருக்கு ஒருவர் போட்டியிடாத இரு அணிகள் இருந்தால், SLSRFA தேர்வு செய்யும் மைதானத்தில் போட்டியில் ஆட வேண்டும்.

## டயலொக் சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடர்:

# சம்பியனானது கொழும்பு கால்பந்துக் கழகம்




இலங்கையில் இடம்பெறும் மிகப் பெரிய கால்பந்து தொடரான டயலொக் சம்பியன்ஸ் லீக்கின் இந்த பருவகாலத்திற்கான தொடரின் தீர்மானம் மிக்க ஆட்டத்தில் ரினௌன் விளையாட்டுக் கழகத்தை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய நடப்புச் சம்பியன் கொழும்பு கால்பந்துக் கழகம் தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் சம்பியன் பட்டத்தை வென்றது.

ஏற்கனவே இடம்பெற்று முடிந்த 16 போட்டிகளின் முடிவுகளின்படி ரினௌன் விளையாட்டுக் கழகம் 12 வெற்றிகள், 4 சமநிலையான முடிவுகளுடன் எந்தவித தோல்விகளையும் சந்திக்காத அணியாக 40 புள்ளிகளுடன் தரப்படுத்தலில் முதல் இடத்தில் நீடித்து வந்தது.

அதே போன்று இறுதியாக இடம்பெற்ற இரண்டு DCL தொடர்களிலும் தொடர்ந்து சம்பியன் கிண்ணத்தை வென்ற அணியாக கருதப்படும் கொழும்பு கால்பந்து கழகம் இம்முறை விளையாடிய 16 போட்டிகளில் 11 வெற்றி, 4 சமநிலை மற்றும் ஒரு தோல்வி என்ற முடிவுகளுடன் 37 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் இருந்தது.

இவ்வாறான ஒரு நிலையில் இடம்பெற்ற தொடரின் இறுதி மோதலில், சம்பியனாகும் முனைப்புடன் இந்த இரண்டு அணிகளும் கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் மைதானத்தில் பலப்பரீட்சை நடத்தின.

இதில் ரினௌன் அணி சம்பியனாவதற்கு வெற்றி அல்லது ஒரு சமநிலையான முடிவே தேவையாக இருந்தது. எனினும் கொழும்பு அணி வீரர்கள் கட்டாயம் ஆட்டத்தை வெல்ல வேண்டிய நிலையில் இருந்தனர்.

எனவே, ரினௌன் அணியின் முன்னாள் வீரரும், தற்போதைய கொழும்பு அணி வீரருமான மொஹமட் பசால் முதல் பாதியில் பெற்ற கோல் மூலம் கொழும்பு கால்பந்து கழகம் வெற்றி பெற்று, இம்முறை சம்பியன் பட்டத்தை வென்றது.

இது அவர்கள் பெறும் தொடர்ச்சியான மூன்றாவது DCL சம்பியன் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.





''உயிர்களை காப்போம்'' எனும் தொனிப்பொருளில் சம்மாந்துறை உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் முதலாம் வருட கணக்கியல் துறை மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இரத்ததான முகாம் கடந்த 11ஆம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி விளையாட்டு கட்டடத்தொகுயில் நடைபெற்றது. இதில், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி உமயங்க, தாதியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் ஒத்துழைப்பின் கீழ் 160க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் உட்பட இரத்தானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ.ஆர்.சாஜித் அலி)





மாவனல்லை ஸாஹிராக் கல்லூரியின் 79ஆவது பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவனல்லை கல்வி வலயத்திற்குட்பட்ட தமிழ் மொழி மூலமான பாடசாலைகள் மற்றும் ஜூம்ஆ பள்ளிவாசல்களின் வரலாற்று சுருக்கம் அடங்கிய ''அடையாளம்'' நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான என்.எம். அமீன், முன்னாள் அமைச்சரும், இன்னாள் தேசிய ஊடக நிலையத்தின் தலைவருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மாவனல்லை கல்வி வலயத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். நஜீப் (நளீமி) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.





ஆசிய- இலங்கை சமூக அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துடன் (ALSDC) இணைந்து களுத்துறை மாவட்ட செயலகத்தின் சுற்றுச் சூழல் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ''அறிவிலும் திறமையிலும் குழந்தைகளை மேம்படுத்துவோம்'' எனும் கருப்பொருளிலான செயலமர்வு கலாசாரம் மற்றும் அபிவிருத்திக்கான முஸ்லிம் நிறுவனத்தின் (MFCD) நிதியுதவியுடன் களுத்துறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org